# புதுமைப் பெண்

8 அணா

மகாத்மா நினைவு மலர்

THE REGISTRA
24 FEB 194



# புதுமைப் பெண்

**மாதர்களுக்கான மாதப் பத்திரிகை**

ஆசிரியை :

**குகப்பிரியை**

## ஆலோசகர்கள்

**Dr. முத்துலக்ஷ்மி ரெட்டி**
**சகோதரி R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்**
**எஸ். அம்புஜம்மாள்**
**சாவித்திரி ராஜன்**

❊ பெண் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பல துறைகளிலும் மேம்பாட்டுக்குக் கொண்டு வர சீரிய சேவை செய்து வருகிறாள் **புதுமைப் பெண்**

❊ ஸ்திரீ ஸௌந்தர்யம், வீட்டு சுகாதாரம், நாட்டின் சுகாதாரம், சமையற் குறிப்புகள், சமூக சீரமைப்பில் பெண்ணினத்திற்குள்ள பொறுப்பு, கடமை முதலியவற்றை அனுபவமிக்க சோதரியரின் எழுத்தோவியங்களின் மூலம் பெண்ணுலகிற்கு அறிவிக்கும் பெருந்தொண்டை ஆற்றி வருகிறாள் **புதுமைப் பெண்**

❊ அழகிய நாவல், மற்றும் சிறு கதைகள் தமிழ் நாட்டின் தலை சிறந்த எழுத்தாளிகளின் உயரிய கற்பனைச் சித்திரங்களையும் தாங்கி வரும் பத்திரிகை **புதுமைப் பெண்** ஒன்றே.

**வருட சந்தா ரூ 6 0 0**
**ஆறு மாத சந்தா ரூ 3 0 0**
**தனிப்பிரதி அணா எட்டு**

---

## புதுமைப் பெண் காரியாலயம்

19, ராஜா ஹனுமந்தலாலா தெரு,
திருவல்லிக்கேணி : : சென்னை

# புதுமைப் பெண்

மாதர்களுக்கான மாதப் பத்திரிகை

ஆசிரியை: குகப்ரியை


மாலை 1
மலர் 4

சென்னை
பிப்ரவரி '48

ஸர்வஜித் வருஷ
மாசி மீ

## சில விசேஷக் கட்டுரைகள்

வாழ்க நீ எம்மான்—அமரகவி ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி 3
ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ? 4
சிரத்தாஞ்சலி—எஸ். அம்புஜம்மாள் 5
மகாத்மாவின் மறைவு—Dr. முத்துலக்ஷ்மி ரெட்டி 7
உலகமெங்கும் ஒலிக்கும் பெயர்—ஏ. கே. செட்டியார் 8
சவாலை எதிர்த்து நிற்போம்—கவியரசி சரோஜினி நாயுடு 9
அண்ணலின் வாழ்க்கை குறிப்புகள் 10
கலங்காதீர்—சுரபி 13
மகாத்மாவின் மறைவுக்கு இந்தியா முழுவதுமே பொறுப்பாகும்—அருணா ஆஸப் அலி 14
இழந்தோம்—அமிருத கௌர் 15
கண்ணீர்—கவியோகி சுத்தானந்த பாரதி 16
ஈச்வரனின் குரல் கேட்குமா?—குமுதினி 17
மக்கள் மன்னனின் மறைவு—ர. ராஜம் பாரதி 21
சாந்த மகாத்மா திருவடி சரணம்—கொத்தமங்கலம் சுப்பு 22
எதிரொலி—புதுமைப் பெண் 23
அடுக்களை 25
பிரேமலதா—தொடர் நாவல் 27
பெண்—ஞானம்பாள் 32
பிராயச்சித்தம்—ஜெயலக்ஷ்மீ R. ஸ்ரீனிவாசன் 34
சௌந்தர்ய உபாஸனை—நித்யா 38
அகல்யா பாய்—ஸ்வர்ணம் 40
எப்படித் தப்புவது?—தரங்கிணி 44
அலுமினிய பாத்திரங்கள்—விசாலம் 46
நினைப்பதும் நடப்பதும்—ஜயம் 49
ஐந்து நிமிஷம்—குகப்ரியை 53
தேய்ந்த கனவு—எஸ். என். ராஜலக்ஷ்மி 57
என்று காண்போம்!—M. K. கௌசல்யா 62
உலகத்திலே இன்று ஒலிக்கும் ஓலம் 63



# வைரங்கள்
# வைரம் பதித்த நகைகள்



பரிசுத்தம், மாசற்ற நீல வெண்மை வர்ணம், பளிச்சென்ற பிரகாசம், சரியான பட்டைதீர்ப்பு, இக் குணங்களெல்லாம நாங்கள் உபயோகிக்கும் வைரங்களுக்குள்ளன. ஆரம்ப நாட்களிலிருந்தே உயர்தரப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்று வந்திருக்கிறோம். ஒவ்வொரு ஆர்டருக்கும் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது.

அபூர்வமான கைத்திறனுடன் தயாரிக்கப்பட்ட நவீன மோஸ்தர் நகை வகைகள் ஏராளமாக எப்பொழுதும் உள்ளன.

உம்மிடி

## ராமையா செட்டி குருஸாமி செட்டி & கோ.

நகை வியாபாரிகள்

**23—25. சைனுபஜார் ரோடு, சென்னை**

DJK·99

218923
சென்னை-600 ...

# வாழ்க காந்தீயம்

1. வாழ்கநீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி,
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மாகாத்மா! நீ வாழ்க! வாழ்க!

2. அடிமை வாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலா கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

3. கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ!
இடிமின்னல் காக்கும் குடைசெய்தா னென்கோ!
என் சொலிப் புகழ்வதிங் குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணல்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்!

4. தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையுங் கணித்தல்;
மன்னுயி ரெல்லாங் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்
கிழிபடு, போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்!

5. பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய்
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வானர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீயறிந்தாய்!
நெருங்கிய பயன்சேர் "ஒத்துழையாமை"
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத் தொழில் மறந்து
வையகம் வாழ்க நல் லறத்தே!

—அமரகவி ஸ்ரீ சுப்ரமணிய பாரதி

OFFICE OF THE REGISTR
24 FEB
MADRAS

# ஏற்குமோ !
# தெய்வம் பார்க்குமோ?

## பூமி சிவந்தது !

நம்ப முடியவில்லையே! நம்பினால் தாங்க முடியவில்லையே! என்று தேசம் முழுவதும் கதறுகின்ற நிலையிலே மகாத்மா மறைந்து விட்டார். கோபம் என்ற தீயை அணைக்கும் பெரு முயற்சியிலே அவர் தம்மையே அர்ப்பணம் செய்துவிட்டார்!

ஆசியாவின் ஜோதி, அண்ணல், அஹிம்ஸா மூர்த்தி, உலகத்தின் தந்தை என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்த மதிப்பற்ற மாணிக்கத்தை இழந்தோம்! பழி சுமந்தோம்! நினைக்க நினைக்க நெஞ்சு பொறுக்குதில்லையே! இனி வாழும் வகை என்ன? மறைந்தார்! நம்மைப் பிரிந்தார்!

உலகந் தோன்றிய நாள் முதல் இத்தகைய கொடுஞ்செயல் நிகழ்ந்ததில்லை என்பதை நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறுகிறது. நாகரீகம், கலை, வளர்ச்சி, பண்பாடு, முன்னேற்றம், சீர்திருத்தம் என்றெல்லாம் பேசிப் பேசி உலகம் கண்ட பலன் என்ன? இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் பகவான் ஏசுநாதரை, எந்த ஜூதாஸ் சில வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுத்தானோ, அவனையும் விடக் கேவலமாய், விலங்கினும் கேடுகெட்ட ஒரு இந்தியன் நாட்டிற்கும், மனித குலத்துக்குமே மீளாப் பழி தேடி விட்டான்.

ஜூதாஸ் கடைசில் மனித குமாரனை ஏசுவை நினைத்துப் பச்சாத்தாபப் பட்டான் என்று பைபில் சொல்லும். அதனினும் கொடிய பாவி, ஐயனை, அரும் நிதியை, கரங் குவித்து வணங்கும் பொழுது சுட்டு விட்டான். தியாகத்தினால் வற்றிய அந்த பவித்ர மான உடலிலிருந்து இரத்தம் வழிந்தது. பூமியே சிவந்து, பாரதத் தாய் தன் அரும் புதல்வனை மடியில் ஏந்திக் கொண்டாள். அவளது தூய மஞ்சட்கதருடை இரத்தத்தால் நனைந்தது. அன்னையின் கண்களில் இரத்தக் கண்ணீர், ஆனால் நமது கைகளிலோ துடைத்தாலும் போகாத இரத்தக் கறை. இது பதவி வெறியர்கள் கூடிச் சதி செய்து செய்த படுகொலை.

காந்தி பிறந்த நாட்டிலே, காந்தி இருந்த காலத்திலே இருந்த நாம் என்று பெருமிதத்துடன் பேசித் தலை நிமிர்ந்திருந்த நாம், இன்று வெட்கித் தலை குனிந்து நிற்கிறோம். இந்தியர்கள் நன்றியற்றவர்கள். பால் வார்த்த கையையே கடிக்கும் விஷப்பாம்புகள் என்று சூரிய சந்திரர்கள் உள்ளளவும், மனிதகுலம் உலகில் உயிர் வாழுமளவும் உலகம் பழிக்கும்!

'காந்தி பிறந்த நாடு' என்று குறிப்பிட்ட அன்னியர்கள் இனி, காந்தியைக் கொன்ற இந்தியா என்று குறிப்பிடுவர். இந்த மாபெரும் பாதகத்திற்கு மன்னிப்பு உண்டா?

பூமண்டலம் முழுவதும் பிரலாபம். பாரத நாடு முழுவதும் ஒரே சோக வெள்ளம். சுதந்திர இந்தியாவின் ஸௌபாக்ய ரவி அஸ்தமித்து விட்டது. ஏழைகளின் அன்பன், பதித பாவனன், அகதிகளின் கண்ணீரை தன் மலர்க் கரத்தால் துடைத்து ஆறுதல் அளித்த அண்ணல், நம்மைக் கண்ணீரும் கம்பலையுமாய், நிர்க்கதியாய்த் தவிக்கவிட்டுச் சென்றார்.

இந்த மா பாதகத்தைக் கண்டு பூமி தேவியே நடுங்கி நம்மை விழுங்கி விடுவாளோ.........? ஏன் விழுங்கவில்லை? அவரது அருள் நோக்கையும், குவிந்த கரங்களையும் கண்டு, மரணத்தையும் ஜயித்த வீர மகனை ஏற்றுக் கொண்டாளோ.......? அல்லது "தாங்கள் செய்வதன் பயன் இன்னதென்று அறியாதவர்களை மன்னியும், அன்னையே மன்னியும்" என்று கேட்டாரோ?

அவரது திருமுகம் நமது ஊனக் கண்களுக்கு மறைந்து விட்டது. ஆனால் அவர் நமது இதயப் பீடத்திலே என்றென்றும் அமர்ந்து ஆட்சி செலுத்துவார். கனிவு நிறைந்த அந்தக் குரல் நமது செவிகளுள் ஒலிக்காவிடினும், இயற்கை முழுவதுமே அவரது பொன் மொழிகளை எதிரொலித்துக்கொண்டே இருக்கும்.

இனி நாம் செய்ய வேண்டுவதென்ன? எந்தக் கொள்கைகளுக்காக அவர் தமது உயிரை அர்ப்பணம் செய்தாரோ, அந்தக் கொள்கைகளைக் கடைப் பிடித்து நடப்பது தான் பழியைத் துடைக்கும் வழி.

**காந்தீயம் வாழ்க!**

**வாழ்க நின் திருநாமம்!**

# சிரத்தாஞ்சலி

எஸ். அம்புஜம்மாள்

நம்மிடையே நம்மவராக உடல் தாங்கி, உயிர் தாங்கி நடமாடிய தெய்வம் நம்மை விட்டுப் பிரிந்துப் போய்விட்டது.

ஒப்புயர்வில்லா உலகம் போற்றும் உத்தமனை இழந்து விட்டோம். பல ஆண்டுகளாக நமக்காகத் துயரப்பட்டார். அரும் பாடு பட்டார். பன்முறை பட்டினி கிடந்தார். சிறை சென்றார். சிறையிலே அன்னை கஸ்தூரிபாவையும், அன்பன் மகாதேவ தேசாயையும் பிரிந்து தன்னந் தனியனாக நின்று தவித்தார் காந்தி.

இவ்வாறு, கத்தி யின்றி குண்டு இன்றி,— பிறர் ஏசுதலையும், 'பைத்தியம்' என்று பலர் பேசுதலையும், கேட்டும் உள்ளங் குன்றாது, உறுதி குலையாது, போராடினார் அந்த சத்ய சோதகர். நெடுநாள் அடிமைத் தளை பூண்டிருந்த நமக்கு சுதந்திரத்தை தேடிக்கொடுத்த நாட்டுத் தந்தையை,—அந்த அற்புத சுதந்திர சிற்பியை—நாம் பறி கொடுத்துவிட்டோம் பரிதாபமான முறையிலே.

"ஒரு போலி இந்துவின் செயலினாலே, நம்முடைய அஜாக்கிரதையினாலே, அல்லது இந்திய தாயின் பூர்வ ஜன்ம பாபத்தினாலே' என்று எது வேணுமானாலும் சொல்லிக்கொள்ளலாம். என்ன பயன்? துலைந்துவிட்டது பாரத அன்னையின் மணிமுடியில் துலங்கிய விலையில்லா மாணிக்கம் மகாத்மா காந்தி.

அன்புக்கும், சேவைக்கும், அஹிம்சைக்கும், உண்மைக்கும், தெய்வ பக்திக்கும் வற்றா ஊற்றாக—உயிர் ஓவியமாக விளங்கிய ராஜகோட் ரத்னம், புதலி பாயின் புதல்வர் மண்ணில் மறைந்தார். இனி அவரை நாம் கண்ணால் காண முடியாது. நம் முன்னிருந்து மறைந்துவிட்டார் என்றென்றைக்கும்.

எனினும் நம்மை விட்டு பிரிந்து எங்கோ போய்விடவில்லை, சுவர்க்கவாஸம் செய்யப் போகமாட்டார். போகவும் மனம் வராது.

"எத்தனை ஜென்மம் எடுத்தாலும், பாரத பூமியில்தான் வந்து பிறக்க விரும்புவேன்" என்றார் அவர். ஹிமாலயத்துக்கு ஓடமாட்டேன் சாந்தி பெற. நீங்கள் அங்கே போவதானால் நான் அங்கே வந்து சேருகிறேன் உங்களுக்குத் தொண்டாற்ற" என்றார் கடைசியாக மகாத்மா காந்தி.

வலிய வந்து இந்த முட்டாள் ஜாதியினரை தடுத்தாட்கொள்ள விரும்பிற்று தெய்வம். அதை நாம் கண்டு கொள்ளவில்லை. இனி அவர் எங்கும் வந்து பிறக்க வேண்டாம். நன்றி கெட்ட ஒரு நாட்டாருக்காக சகோதரச் சண்டையிலே களிக்கின்ற ஒரு கூட்டத்தாருக்காக.

அண்டை வீட்டுக்காரனை அயலானுக்குக் காட்டிக் கொடுக்கும் வாய்ப்புடைய போலி இந்துக்காக, மனித உடல் தாங்கி, அல்லல் பட்டு மனமுடைய வேண்டாம் என்று நாம் வேண்டுவோம்.

ஆனால் நம்மிடையே என்றும் இருக்கத்தான் போகிறார். இருக்கத்தான் வேணும். எப்படி? எங்கே? குழந்தைகள், ஏழை மக்கள், எளியோர் தாழ்த்தப் பட்டோர், புறக்கணிக்கப் பட்டோர், துன்புறுத்தப் பட்டோர், திக்கற்ற பெண்கள் இவர்கள் இருதயங்களை தாம்வாழும் கோயிலாக கொண்டு விட்டார் மகாத்மா. பிரதிதினம் அங்கே அவரைக் கண்டு பூஜிப்போம். இதற்கு ஊனக்கண் வேண்டாம். அன்பாகிற அகக் கண் இருந்தால் போதும்.

நம் காந்தி போய் விட்டார். ஆனால் காந்தீயம் போகவில்லை. போகாது, மேன் மேலும் ஓங்கத்தான் போகிறது முக்கியமாக தமிழ் நாட்டிலே.

அவர் நடத்திக் காட்டிய எளிய வாழ்க்கை முறை நம் கண்ணினின்றும் இன்னும் மறையவில்லை. அவர் உருவாக்கிய பொது ஸ்தாபனங்கள், அவர் நிறுவிய நிலயங்கள் அவர் வகுத்துத் தந்த தேசத் திட்டங்கள் இவைகளை என்றும் தமிழர் மறக்க முடியாது. அவைகளை பாதுகாத்து மேலும் ஓங்கச் செய்வது தமிழர் முதற் கடமை.

அவருடைய பொன் மொழிகள் நம் காதில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவருடைய கருத்துச் சுடர்கள் எல்லோர் நெஞ்சிலும் ஜ்வலிக்கின்றன. அவைகளைக் கொண்டு

தேறுதல் அடைவோம். நம் வாழ்க்கை முறையை திருத்தி தேச வாழ்க்கையை சிறப்புறச் செய்வோம்.

அவரையே, தந்தை, குரு, கடவுளெனக் கொண்டு அவர் கட்டளைப்படி நிர்மாண திட்ட வேலைகளை செய்து வரும் ஊழியர்கள், பேரும், படாடோபமும் வேண்டாத தொண்டர்கள், மூலைக்கு மூலை, நாடெங்கும், சிதறிக் கிடக்கிறார்கள். அவர்களைப் போல நாமும் தொண்டாற்றுவோம். குலைந்துபோன தேசிய வாழ்வை புதுப்பிப்போம்.

அவருடைய ஆன்மா திருப்தியடையுமாறு நாம் செய்ய வேண்டியது அவர் காட்டிய வழியை பின் பற்றுவது. வகுப்புச் சச்சரவுகளை வளர்க்க விடாமல் சமாதான தூதர்களாக வேலை செய்து இந்தியரின் ஒற்றுமையை உலகில் புதிதாக ஸதாபித்து காண்பிப்பது தான் அவருக்கு நாம் செலுத்தக் கூடிய அழியா ஞாபக சின்னம். **சிரத்தாஞ்சலி:**

கல்லும், மண்ணும் சேர்த்தோ, அல்லது, பொன்னும் வைரமும் இழைத்தோ கோவில் கட்டி அதில் அவர் உருவச் சிலையை வைத்து பூஜிப்பதினால் அவர் ஆன்மா திருப்தியுறாது. அவருக்கு அது இஷ்டமுமில்லை. அவர் விரும்பி, விடாது விரதமாக மேற்கொண்டு செய்து வந்தவைகளை, கதர் தரித்தல், நூல் நூற்றல், தீண்டாமை ஒழித்தல், தெய்வ வழிபாடு இவைகளை விடாது செய்வதினால் தான் அவர் ஆன்மா திருப்தி அடைய முடியும்.

அவர் நமக்கு, எத்தகைய கொள்கையையும்,—அதாவது, நமது வேதமும் கீதையும் ஓதாத எந்த விதியையும், அவர் போதிக்கவில்லை. நம்முடைய சமய பண்பாட்டில் ஆழத்தில் மறைந்து கிடைந்தவைகளையே புதிப்பித்து நமக்கு கூறியுள்ளார்.

தமிழ்ப் பெண்கள் என்றும் போல அந்த பண்டைப் பண்பாட்டை, சமயக் கோட்பாடுகளை காக்கும் காப்பாளிகளாக இருத்தல் வேணும்.

காந்தி எதற்காகத் தோன்றினார், உலக அரங்கத்தில் மனித உருவத்தில்? ஹிம்ஸை நிறைந்த உலகில், எளியவர்களும், சாதுக்களும், அஹிம்ஸையையே தமது ஆயுதமாகக் கொண்டு போராடி இந்த உலகில் தாம் அடைய வேண்டிய பேறுகளை பெறுவதற்காக தான்.

அவர் உயிர் நீத்ததும் அந்த புனிதமான ஆயுதத்தை மனித வர்க்கம் முழுமையும் கைக்கொள்ள வேணும் என்பதற்காக தான்.

என்றும் வாழ்க எம் அண்ணல் மகாத்மா காந்தி. என்றும் ஓங்குக காந்தீயம்.

---

கவிஞர்கள் ஒரு வகை வேதாந்திகள். தீர்க்கதரிசிகள். சத்திய வழிகாட்டிகள் புனிதமாய் அழகாய் திறமையாய் வாழும் முறையை சித்திரம் செய்து தரும் சொல் ஓவியர்கள். வாழ்விலே சின்னதும் பெரியதும் அவர்களுக்குக் கிடையாது. மலையைப் போலவே மல்லிகையும் அவர்கள் இதயத்தை பொங்கச் செய்யும். இந்த உலக சம்மந்தமற்ற வெறும் கற்பனையுலக சஞ்சாரிகள் உன்னத கவிஞர்களாய் இருக்க முடியாது.

# மகாத்மாவின் மறைவு

டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி

காந்தியடிகளின் மறைவு உலகம் பூராவுமுள்ள கோடிக்கணக்கான மக்களுக்குத் தாங்க முடியாத துக்கத்தையும் வேதனையையும் அளித்துள்ளது. அவருடைய வாழ்க்கையையும் லக்ஷியத்தையும் பின்பற்றி நடந்தவர்களுக்கு இச்செய்தி பெரிய இடியாக இருக்கிறது. மகாத்மா மங்கையரின் நண்பர் மாத்திரமல்ல, பெண்ணுலகின் தந்தையுமாவார். பெண்மணிகளிடம் அவர் கொண்டிருந்த கருணையும், அன்பும், விஸ்வாசமும் கொஞ்சமல்ல! சத்தியத்திலும் அஹிம்சையிலும் அவர் கொண்டிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கை பாரதநாட்டுப் பெண்களை மாத்திரமல்ல. உலகம் எங்கும் உள்ள பெண்களையும் வசீகரித்து நம்மில் கோடிக்கணக்கான மக்களுக்கு அவர் ஆத்மார்த்த குருவாகவும், ஒப்பற்ற வழி காட்டியாகவும் விளங்குகிறார். அரசியல் சுதந்திரத்துக்காக அவர் பின்பற்றிய அஹிம்ஸா முறை ஆயிரக்கணக்கான பெண்மணிகளை, பர்தாவுக்குள்ளிருந்தும், வீட்டுக்குள்ளே பூட்டிவைப்பதினின்றும் வெளியில்கொண்டுவர பெரிதும் வெற்றிகரமாக உதவிற்று. நமது நாட்டில் பெண்ணுலகம் இன்றைக்கு சகல துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக முன்னேறி நிற்கின்றதென்றால் அது அடிகளின் பெரு முயற்சியின் பயன் என்றுதான் சொல்லவேண்டும். தாம் மேற்கொள்ளும் திட்டத்தில் ஏதேனும் ஒன்றை வெற்றியோடு சாதிக்க வேண்டுமானால் அவர் எப்போதும் பெண்களின் உதவியையும், ஒத்துழைப்பையும் முக்கியமாகக் கோருவதுண்டு. பெண்கள் எத்தகைய பெரிய தியாகத்துக்கும், மகத்தான சேவைக்கும் உரியவர்கள், தயாரானவர்கள் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். பெண்களோ முக்கியமாக, கரைகடந்த அன்புடன் வேதனையடையும் மனித வர்க்கத்துக்கு தொண்டுசெய்து ஆறுதலளிக்க வல்லவர்கள் என்பது அவர் நம்பிக்கை.

தாய்மை, அன்பு, அடக்கம், தூய்மை, விடாமுயற்சி, தாராளம், சேவை, தியாகம் இவைகள் யாவும் ஒன்று சேர்ந்த மானிடப் பிறப்பே மங்கையர் என்பது மகாத்மாவின் திண்ணமான எண்ணம்.

மகாத்மா காந்தியடிகள் ஏழைகளின் இனிய தோழர், தாழ்த்தப்பட்ட - ஒதுக்கப்பட்ட மக்களின் அரிய தந்தை. அவரது மாய மறைவால் ஏற்பட்டுள்ள துக்கம் நமக்குப் பெரிய அதிர்ச்சியாகும். உலகத்தின் மனித வர்க்கத்துக்கே இது ஒரு ஈடு செய்ய முடியாத மாபெரும் நஷ்டமாகும். உலகின் அரிய பொக்கிஷமாயிருந்த மகாத்மாவின் வாழ்நாளை துண்டித்தது ஒரு இந்தியனின் கை, அதுவும் ஒரு ஹிந்துவின் கை என்று எண்ணும்போது இந்து மதத்துக்கே ஒரு மகா களங்கம் - கறை - மானக்கேடு ஏற்பட்டிருக்கிறது என்றுதான் தோன்றுகிறது. ஹிந்துக்களாகிய நாம் வெட்கித் தலைகுனிய வேண்டிய மானக்கேடல்லவா இது! அஹிம்ஸையே மேலான தர்மம் என்று போதிக்கிறது நமது வேதாந்தம். இந்தத் தூயக் கொள்கை ஆயிர ஆயிரம் ஆண்டுகளாக நமது தவசிரேஷ்டர்களாலும் அவதார புருஷர்களாலும் திரும்பத் திரும்ப போதிக்கப்பட்டு வருகிறது. நமது பரிசுத்தமான தர்மத்தைப் புறக்கணித்து வருகிறோம். மறந்து வருகிறோம். அதன் விளைவே இந்தக் கொடுமை!

மகாத்மா காந்தியடிகளின் பூத உடல் மாயமாய் மறைந்துவிட்டது. ஆனால் மகாத்மாவின் புகழ்—தியாகம்—சேவை இந்த உலகம் அழிந்தாலும், அழியாது நிற்கும். விளக்குத்தான் மறைந்தது. ஆனால் அந்த விளக்கு வீசிய வெளிச்சம்—மா பெருஞ் சோதி நாளுக்கு நாள் வருஷத்துக்கு வருஷம் அற்புதமான சுடர் வீசிக் கொண்டல்லவா விளங்கப் போகிறது!

அண்ணலின் பூத உடல் மறைவுக்காக நாம் உள்ளம் உடைந்து நைந்துபோனோம். இனி நமது புலம்பலை விடுவோம். உடைக்க முடியாத உறுதி கொள்வோம். ஒன்றுபடுவோம். முன்னேறுவோம். நமது குருநாதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோம். அவர் நமக்கு விட்டுப்போன மகத்தான பொறுப்புக்களை உணர்வோம். ஆர்வத்துடனும் வீரத்துடனும் அவற்றைத் தலைமேல் தாங்கிச் செய்ய முனைவோம். அவரது ஆன்ம பலமே நமக்கு அழியாத பக்க பலமாகும். அவரது ஆத்ம சக்தியே நம்மைச் சூழ்ந்து நிற்கும் மாபெரும் சக்தியாகும்.

# உலகமெங்கும் ஒலிக்கும் பெயர்!

ஏ. கே. செட்டியார்

ஜப்பானில் ஒவஞ என்னும் சிறிய ரயில்வே ஸ்டேஷனில் ரயிலுக்காகக் காத்துக்கொண்டு நின்றேன். முன்பின் அறியாத இரண்டு ஜப்பானிய வாலிபர் வேகமாக வந்தனர். அவர்களில் ஒருவன் என் கையைப் பிடித்துக் குலுக்கி, "நீங்கள் காந்தியின் நாட்டிலிருந்து வந்தவர்தானே?" என்றான். 'ஆம்' எனத் தலையசைத்தேன். உலகத்தில் காந்தியடிகளைப் போன்ற மனிதர் யாரும் கிடையாது. ஜப்பானில் எத்தனையோ வீரர் பிறந்திருக்கிறார்கள். சக்ரவர்த்திகள் பிறந்திருக்கிறார்கள். ஆனால் காந்தியடிகள் போன்ற சிறந்த மனிதர் பிறந்ததே யில்லை" என்றார். சக்ரவர்த்தியை தெய்வமாகக் கொண்டாடும் ஜப்பானியர் காந்தியடிகளைப் பாராட்டுவதைக் கண்டு ஆச்சர்யமடைந்தேன்.

'தாக்கா வேக்கா' என்பவர் ஜப்பான் பார்லிமெண்டு மெம்பர். சில வருஷகாலம் இவர் கல்கத்தாவில் இருந்தாராம். இந்தியாவைப் பற்றியும் காந்தியடிகளைப் பற்றியும் இவர் இரண்டு புத்தகங்கள் எழுதியுள்ளார். ஜப்பானிலுள்ள காட்கிஸ் தலைவர் ஆனந்த மோகன் ஷகாய் மூலம் இவருடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தது. ஒரு நாள் இவரில்லம் சென்றேன். இந்திய முறைப்படி நமஸ்காரம் செய்து வரவேற்றார். இவர் வீட்டிலே காந்தியடிகளின் உருவச்சிலை சர்க்கா முதலியன காட்சியளித்தன.

டோக்கியோவில் ஒரு சினிமாக் கொட்டகைக்குச் சென்றபொழுது அங்கு உட்கார இடமில்லாது நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது வெளியிற் செல்ல எண்ணிய ஒரு சீனப்பெண் "ஹலோ! இங்கே உட்காருங்கள். காந்திஜீ சௌக்கியமா?" என்றாள்.

வெடிகுண்டுகளால் இப்பொழுது நாசமடைந்துள்ள ஷாங்காய் நகரம் நன்றாக இருந்தபொழுது அங்கு சென்றிருந்தேன். ஒரு நாள் சீனர் வசிக்கும் இடத்திற்குச் சென்றேன். அங்கே காந்தியடிகளின் பெரிய உருவப் படம் தென்பட்டது. உலகின் உள்ளங் கவர் உருவம்! சீனச் சித்திரக்காரன் திறமை! 'விலை என்ன?' என்று கேட்டேன். அவனுக்கு ஆங்கிலம் தெரியாது. எனக்கு சீனம் தெரியாது. மனித பாஷை—சைகை தான். கடைசியாக பதினேரு ரூபாய்க்கு அந்த படத்தை விலைக்கு வாங்கினேன்.

கொரியா மாணவர் கூட்டத்தில் பிரசங்கம் செய்துகொண்டிருந்தபொழுது 'காந்தியடிகள் அமெரிக்காவுக்குச் செல்ல நேர்ந்தால் ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் வரக்கூடும்' என்றேன். நீங்கள் நம்பினாலுஞ் சரி, நம்பாவிட்டாலுஞ் சரி. அங்கிருந்த கொரியா மாணவன் ஒருவன் கூட்டத்தில் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினான். பஸிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியிலுள்ள அழகிய ஹாவாய் தீவில் ஹில்லோ என்னும் நகரத்துக்குச் சென்றேன். உண்மை இந்தியனொருவனைப் பார்க்க எல்லோரும் ஆச்சர்யமடைந்தனர். அன்றைய தினம் ஹில்லோ டிரிபியூன் பத்திரிகையின் முதற் பக்கத்தில் காந்தியடிகள் நாட்டிலிருந்து ஒரு பத்திரிகைக்காரர் ஹில்லோவுக்கு வந்திருக்கிறார் என்று பெரிய எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் ரேடியோவில் பேசும் வாய்ப்பு கிடைத்தது. கரண்ட் ஹிஸ்டிரி பத்திரிகை ஆசிரியர் கேள்விகள் கேட்டார். முதலாவது கேள்வி என்ன தெரியுமா? "காந்தியடிகள் தீண்டாதாருக்குச் செய்த நன்மைகள் என்ன?" என்பதுதான்.

வருடந்தோறும் அமெரிக்காவில் காந்தியடிகளின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்கள். அன்று பல அமெரிக்கர் காந்தி குல்லா அணிகின்றனர். காந்தியடிகள் எளிய வாழ்க்கை வாழ்ந்தார். ஆனால் அமெரிக்காவில் காந்தியடிகள் பிறந்த நாள் விருந்தில் ஒவ்வொருவருக்கும் 21 ரூபாய்!

நியூயார்க் நகரத்தில் ஒரு ஐ. ஸி. எஸ், ஒரு ஹை கோர்ட்டு ஜட்ஜ், ஒரு லெப்டினென்ட் கர்னல் ஆகிய மூன்று இந்தியர் ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்தனர். எதைப் பற்றி! காந்தியடிகளின் புகழைப்பற்றி. இல்லையேல் இந்தப் பிரசங்கிகளுக்கு மதிப்பேது?

இதே போல உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் தன் பெயரும் புகழும் போற்றப்படும் பெரும் பேறு வாய்த்தவர் மகாத்மா காந்தி ஒருவரே தான்.

# சவாலை எதிர்த்து நிற்போம்

கவியரசி சரோஜினி நாயுடு

"இன்று நான் பேச வேண்டிய அவசியமே இல்லை. லட்சியங்கள், ஒழுக்கம், நியதி, சமாதானம் ஆகியவற்றில் நம்பிக்கை உள்ளவர்களால் அன்புடன் பூஜிக்கப்படும் உலக மஹான் என்பதை நிரூபித்து உலக மக்கள் பல்வேறு மொழிகளில் கூறிவிட்டனர்.

மகாத்மாவின் முதல் உபவாசத்தில் எனக்கும் சம்பந்தமிருந்தது. அது இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக மேற் கொள்ளப்பட்டது. நாடு பூராவும் அதற்கு அனுதாபம் தெரிவித்தது. ஆனால் அவருடைய கடைசி உண்ணுவிரதம் அதே காரணத்திற்காக அனுஷ்டிக்கப்பட்ட பொழுது நாடு முழுவதும் அவரை ஆதரிக்கவில்லை. அதற்கு பதில் நாட்டில் துவேஷமும், வெறுப்பும், சந்தேகமும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. காந்திஜியை நன்கு அறிந்த சிலரே அவருடைய உபவாசத்தின் மஹிமையை உணர்ந்தனர்.

நம்மில் சிலர் அவருடன் நெருங்கி மிகவும் பழகியதால் ஒரு உயிரும் இரு உடலுமாக இருந்தோம். அவருடன் நம்மில் சிலர் நெருங்கிவாழ்ந்தோம் அவருடைய வாழ்க்கையுடன் நம்முடைய ஒவ்வொரு அணுவும் தசையும், இருதயமும், இரத்தமும் ஒருமிக்கக் கலந்து உள்ளதினால் அவருடைய மரணம் நம்மை அறுத்துக் கூறிட்டது போல் ஆயிற்று. ஆனால் அவர் இறந்து விட்டார் என எண்ணி எல்லாவற்றையும் இழந்தோம் என்று கருதி நாம் ஏமாற்றமடைந்தால் புறங்காட்டி ஓடும் கோழைகளாவோம். அவர் பூதவுடல் மறைந்து விட்டதினால் எல்லாம் மறைந்துவிட்டதென நாம் எண்ணினால் அவரிடம் நமக்கு நம்பிக்கையும், விஸ்வாசமும் இருந்து என்ன பயன்?

அவருடைய புனிதத் தத்துவங்களின் வாரிசுக்காரர்களான நாம் இல்லையா? விம்மி விம்மி அழும் காலமும் அடித்துக் கொண்டு தலையைப் பிய்த்துக்கொண்டு கதறும் காலமும் மலையேறி விட்டது. காந்திஜியை எதிர்த்து விடுத்த இந்த சவாலை எதிர்த்து நிற்கிறோம் என்று எழுந்து நின்று அறைகூவும் தருணம் வந்துவிட்டது.

நாம் மகாத்மாவின் உயிர்ச் சின்னங்கள். அவருடைய படை வீரர்கள். இப் பாழான உலகில் அவருடைய செய்திக் கொடியை தாங்கிச் செல்லும் புனித ஆத்மாக்கள். சத்யமே நமது கொடி, அஹிம்சையே நமது கேடயம். ரத்தம் சிந்தாது வெல்லும் ஆத்மீக சக்தியே நமது கத்தி. நமது குருவின் வழியைப் பின்பற்ற வேண்டாமா? நமது பிதாவின் ஆக்ஞைகளுக்கு அடி பணிய வேண்டாமா? அவருடைய வீரர்களாகத் திகழ்ந்து அவர் தொடங்கிய சத்யப் போரில் வெற்றி காண வேண்டாமா? அவர் ஒருவருடையக் குரலை நாம் கேட்க முடியாதென்றாலும் உலகில் அவரது செய்தியைத் தலைமுறைத் தலைமுறையாகப் பரப்ப நம்மில் லட்சக் கணக்கான குரல்கள் இல்லையா!

நேற்று தகனம் செய்யப்பட்ட மகாத்மா இறக்கவில்லை. இயேசு கிறிஸ்து போல் மூன்றாவது தினத்தன்று அவருடைய அன்பு, சேவை, தத்துவம் நிலைத்து நிற்க வேண்டுமென்று மக்கள் கதறுவதைக் கேட்டும், உலகத்தின் அழைப்புக்கு இணங்கியும் அவர் மறுபடி எழுந்து விட்டார்.

அரசர்களுக்கு அரசனை அவரை டில்லி பழைய மன்னர்கள் உறங்கும் இடத்தில் தகனம் செய்தது முற்றிலும் சரியே. யுத்தத்தில் படைகளுக்கு தலைமை வகித்த சுத்த வீரர்களை விட இந்த சிறிய மனிதர் எளியோரின் சகாவாகவும், பயம் என்றே அறியாதப் பெரு வீரருமாகவுமிருந்தார். அடிமை நாட்டிற்கு சுதந்திரமும், தனிக் கொடியும் கிடைக்கச் செய்த இந்த புரட்சி வீரனல் டில்லி புண்ய நகரமாகி விட்டது.

எனது குரு, தலைவர், தந்தையின் ஆத்மா உறக்கமடையாதிருக்குமாக. பிதாவே! ஓய்வு கொள்ளாதீர்கள்! உங்களுடைய வாரிசுகள், பரம்பரையார், மாணவர்கள், கனவின் ரக்ஷகர்கள், நாட்டின் லட்சியம் சித்திப் பெறச் செய்பவர்களான நாங்கள் வேண்டுகிறோம். எங்கள் பிரதிக்ஞை நிறைவேற பலம் அளிக்கும் பொருட்டு எம்முடனே இருந்து பலம் அளியும்.

# அண்ணலின் வாழ்க்கைக் குறிப்புகள்

## சில முக்கிய சம்பவங்கள்

### 1869

**அக்டோபர் 2-ம் தேதியன்று மஹாத்மா காந்தி அவதரித்தார்.**

1893 தென் ஆப்பிரிக்காவுக்குப் புறப் பட்டார்.

1902 மூன்றும் முறையாகத் தென் ஆப் பிரிக்காவுக்குச் சென்றார்.

1906 ஆசியருக்கு எதிரான சட்டத்தை சாத்விகமாக எதிர்க்கப் பிரதிக்ஞை செய்து கொண்டார்.

1913 செப்டம்பரில் 3 பவுன் அபராதமும் மீண்டும் ஒத்துழையாமை ஆரம்பமும். அதே வருஷத்தில் காந்தி-ஸ்மட்ஸ் ஒப்பந்தம்.

1916 அஹமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமம் ஸ்தாபித்தார்.

1918 பிப்ரவரி 28-ம் தேதியன்று ரௌலட் மசோதாவை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய் யப் பிரதிக்ஞை செய்துகொண்டார்.

1919 எப்ரல் 18-ம் தேதியன்று சத்தியாக் கிரகத்தை நிறுத்தி உபவாசம் ஆரம்பித்தார்.

1918—1919 கிலாபத்தையும் பஞ்சாப் சம்பவங்களையும் எதிர்த்துக் கிளர்ச்சி.

1920 கெய்ஸரி ஹிந்த் மெடலைத் திருப்பிக் கொடுத்துவிட்டு ஆகஸ்ட் முதல் தேதியன்று ஒத்துழையாமை ஆரம்பித்தார்.

1921 மே மாதத்தில் லார்ட் ரீடிங்குடன் சந்திப்பு.

1922 லார்டு ரீடிங்குக்கு இறுதிக் கடிதம்.

பிப்ரவரி 14-ந் தேதியன்று சௌரி சௌரா சம்பவம்.

மார்ச் 10-ம் தேதியன்று அஹமதாபாத்தில் காந்திஜி கைது.

அதே மாதத்தில் காந்திஜி விசாரணையும் சிறை தண்டனையும்.

1924 பிப்ரவரியில் சிறையிலிருந்து விடுதலை.

எப்ரலில் **'யங் இந்தியா'** பத்திரிகையின் ஆசிரியர் பதவியை மீண்டும் ஏற்றார்.

செப்டம்பர் 11ம் தேதி உபவாசமும் டில்லி மகாநாடும். டிசம்பரில் பெல்காம் காங்கிரஸ் தலைவரானார்.

1929 டிசம்பரில் லாகூர் காங்கிரசும், சுதந்திரப் பிரேரணையும்.

1930 பிப்ரவரி 15-ம் தேதி மகாத்மா காந்தியை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சர்வாதிகாரியாக நியமித்து அவருடைய ஒத்துழையாமை திட்டத்தை அமல் நடத்தத் தீர்மானித்தது. மார்ச் 4-ம் தேதியன்று லார்டு இர்வினுக்கு காந்திஜி கடிதம் எழுதினார். மார்ச் 12-ம் தேதி **தண்டி மஹா யாத்திரை**. எப்ரல் 6-ம் தேதியன்று தண்டியில் உப்புச் சட்டத்தை மீறினார்.

1931 ஜனவரி 26-ந்தேதி கைதியானார். மே 5-ம் தேதி விடுதலையடைந்தார். ஆகஸ்ட் 29-ம்தேதி இங்கிலாந்துக்குப் பயணம். டிசம்பர் 28-ம் தேதி இந்தியா திரும்பினார்.

1932 ஜனவரி 4-ம் தேதியன்று மீண்டும் கைதியானார். செப்டம்பர் 20-ம் தேதி நடுபகலில் உபவாசம் ஆரம்பித்தார். நிபந்தனையின் பேரில் விடுதலை அடைய மறுத்துவிட்டார். செப்டம்பர் 26-ம் தேதி மாலை 5 மணிக்கு உபவாசத்தை நிறுத்தினார். நவம்பர் 5-ம் தேதி தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் சம்பந்தமாக முதல் அறிக்கை விடுத்தார்.

1933 மே மாதம் 8-ம் தேதி பகல் 12 மணிக்கு 21 நாள் உபவாசம் ஆரம்பம். அன்று இரவு 9 மணிக்கு விடுதலை. மே 29-ம் தேதி பகல் 12-30 மணிக்கு உபவாசம் நின்றது. ஜுலை 26-ம் தேதி சபர்மதி ஆசிரமத்தைக் கலைக்கத் தீர்மானித்தார். ஜுலை 31-ம் தேதி மற்றும் 33 பேரோடு காந்திஜி கைது செய்யப்பட்டு சபர்மதி சிறையில் வைக்கப் பட்டார். ஆகஸ்ட் 4-ம் தேதி யன்று காந்திஜி விடுதலை செய்யப்பட்டு தடையை மீறியதாக மீண்டும் கைது செய்யப்பட்டார். ஆகஸ்ட், 16-ந் தேதி யன்று மகாத்மா காந்தி உபவாசம். 21-ந் தேதி ஸாஸூன் ஆஸ்பத்திரிக்கு அகற்றப்பட்டார். ஆகஸ்ட் 23 ந் தேதி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். ஒரு வருஷத்துக்குக் காந்திஜி தீவிர சட்ட மறுப்பியக்கத்தை நிறுத்தி வைத்தார்.

1934 பீஹாரில் பூகம்ப பிரதேசத்துக்கு கஷ்ட நிவாரண வேலைக்காக காந்திஜி விஜயம் செய்து சுற்றுப் பிரயாணம் செய்தார். எப்ரல் 7 ந் தேதி சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைப்பதாக காந்திஜி அறிக்கை விடுத்தார். ஜுன், 25—காந்திஜி மீது வெடிகுண்டு வீசப்பட்டது. தெய்வாதீனமாகத் தப்பினார். ஆகஸ்ட் 7 ந்தேதி

மகாத்மா காந்தி ஒரு வார உபவாசத்தை ஆரம்பித்தார். செப்டம்பர் 4-ந் தேதியன்று காங்கிரஸிலிருந்து காந்திஜி விலகினார்.

1935 மார்ச், 23-ந் தேதி மகாத்மா காந்தி 4 வார மௌன விரதம் ஆரம்பித்தார்.

1936 எப்ரல் 30:-சேவாகிராமத்தில் மகாத்மா வாசம். டிசம்பர் 27-ந் தேதியன்று காந்திஜி பெய்ஸ்பூர் காங்கிரஸில் பிரசங்கம் செய்தார்.

1937 இந்திய பிரச்னை பற்றி லார்ட் ஜெட்லண்ட் எப்ரல் 9-ந் தேதி பார்லிமெண்டில் அறிக்கை சமர்ப்பித்தார். ஜூலை 17-ந் தேதி காங்கிரஸ் மந்திரிசபை பற்றி காந்திஜி ஒரு அறிக்கை விடுத்தார்.

1938-39 சமஸ்தான பிரச்னைகளில் காந்திஜி சிரத்தை காட்டினார். 1939 ஜனவரி மாதம் சுபாஷ் போஸ் காங்கிரஸ் அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதை ஆட்சேபித்து காந்தி அறிக்கை. மார்ச் மாதம் ராஜகோட்டை மன்னர் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று உபவாச மிருந்தார். வெற்றி பெற்றார். யுத்த பிரச்னையில் சமரச மேற்படாததால் அக்டோபர் மாதத்தில் காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்தனர்.

1940 சட்ட மறுப்பு இயக்கம் அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப் பட்டது. வாபஸ் பெற முடியாதென்றும் அஹிம்சா தர்மத்தில் தமக்குப் பரம நம்பிக்கை இருக்கிறதென்றும் மகாத்மா அறிக்கை விடுத்தார். மே 6—ஹிந்து முஸ்லிம் கலகத்தைக் கண்டு வருந்தி அறிக்கை விடுத்தார். டிசம்பர் 30—காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து காந்திஜி விலகினார் என காரிய கமிட்டி தீர்மானம்.

1942-ஜனவரி 8:—காந்திஜி காங்கிரஸை விட்டு விலகியதேன் என்பதை ஆஜாத் விளக்குகிறார்.—ஜனவரி 15 நேருதான் தன்னுடைய வார்ஸென்றும் ராஜாஜியோ அல்லது சர்தார் பட்டேலோ அல்லவென்றும் காந்திஜி அறிவித்தார். பிப்ரவரி15:-'ஜெர்மனியர் ஜெயித்தால்?' என்ற கட்டுரையை ஹரிஜனில் காந்திஜி எழுதினார்:—பிப் 18: கல்கத்தாவில் சீன சேனாதிபதி சியாங்கேஷேக்கை மகாத்மா சந்தித்தார். மார்ச் 11:—இந்தியாவுக்கு கிரிப்ஸ் தூதுகோஷ்டி வருமென்று காமன்ஸ் சபையில் ஸ்ரீ சர்ச்சில் அறிவித்தார்.—27-ந்தேதி: புதுடில்லியில் சர் கிரிப்ஸை மகாத்மா சந்தித்தார். 29:-பாஷாவாரி மாகாணப் பிரிவினைத் தீர்மானம் காங்கிரஸில் நிறைவேறியதற்குத் தான் காரணபூதரென்று காந்திஜி கூறுகிறார். 29:கிரிப்ஸ் திட்டம் வெளியானது—30: கிரிப்ஸ் ரேடியோ பிரசங்கம். எப்ரல் 2; கிரிப்ஸ் தூது முறிந்ததென்று ஆஜாத் சொன்னார்—11: கிரிப்ஸ் திட்டம் வாபஸ் பெறப்பட்டதென்று சர் கிரிப்ஸ் அறிவிப்பு. மே 1: யுத்தம் பற்றி அ. இ. கா. க. தீர்மானம் நிறைவேறியது. ஜூன் 9: "இந்தியாவை விட்டு வெளியேறு" இயக்கம்—அமெரிக்க நிருபர் லூயி பிஷருக்கு காந்திஜி விளக்கம். ஜூலை 26: "ஒவ்வொரு ஜப்பானியனுக்கும்" என்ற அறிக்கையை காந்திஜி விடுத்தார். ஆகஸ்டு 6:—பக்கிள் அறிக்கை—காந்திஜி அம்பலப்படுத்தினார்—7:—சீனாவுக்குக் காந்திஜியின் செய்தி—பம்பாயில் அ. இ. கா. க. கூட்டம்—8:—"காரியம் செய் அல்லது உயிரை விடு" என்ற காந்திஜியின் சங்கநாதம்; 9-காந்திஜி கைது செய்யப்பட்டு ஆகாகான் அரண்மனைக்கு கொண்டு போகப்பட்டார். காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டு எங்கேயோ கொண்டு போகப்பட்டனர். வைசிராய் மீது காந்திஜியின் குற்றச் சாட்டு; 14-ஆகாகான் அரண்மனையில் ஸ்ரீ. மகாதேவ தேசாய் காலமானார்.

1943 பிப்ரவரி 10—காந்திஜி உபவாசம் ஆரம்பம்; 11—காந்தி—வைஸிராய் கடிதப் போக்கு வரத்து பிரசுரம்; 13—டாட்டன்ஹாம் துண்டு பிரசுரம் வெளியாதல்; 15—மத்திய அசெம்பிளியில் உபவாசம் பற்றி தீர்மானம் பேசித் தீர்க்கப்பட்டது. 17-மோடி. சார்க்கார், ஆனே முதலியோர் காந்திஜி உபவாச விஷயமாக சர்க்கார் காட்டிய மனப்பான்மையை ஆட்சேபித்து ராஜிநாமா செய்தனர். 26—காந்திஜியை ராஜாஜி சந்தித்தார். மார்ச் 3—காந்திஜி உபவாசம் நின்றது. மே 4—ஸ்ரீ ஜின்னாவுக்கு காந்திஜி எழுதிய அனுப்பப்படாத கடிதம்—காந்திஜியை விடுதலை செய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காருக்கு பெர்னார்ட் ஷாவின் வேண்டுகோள். 18—காந்திஜியின் கடிதம் பற்றி ஜின்னாவின் காரசாரமான அறிக்கை.

1944 பிப்ரவரி 22—ஆகாகான் அரண்மனை சிறையில் கஸ்தூரிபாய் காந்தி காலமானார். மே 8—தேக நிலைமையை உத்தேசித்து காந்திஜி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். ஜூன் 17—காந்திஜிக்கும் ஷை சர்க்காருக்கும் நடந்த கடிதப் போக்குவரத்துக்கள் பிரசுரம். ஜூலை 13—கெல்டர் பேட்டி. ஸி. ஆர். காந்தி திட்டம்; 14—சர்ச்சிலுக்கு காந்திஜி கடிதம்; 18—ஜின்னா-ஸி. ஆர் கடிதப்போக்கு வரத்துப் பிரசுரம். செப்டம்பர் 9—ஜின்னாவை காந்தி சந்திக்கிறார்.

1946 பிப்ரவரி—சென்னையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு மெம்பர்களை காந்திஜி சந்திக்கிறார். 19—பிரிட்டிஷ் மந்திரி சபை தூது கோஷ்டி வருமென்று அறிவிப்பு. எப்ரல் 24—ஸ்ரீ ஹெர்பர்ட் ஹூவரை காந்திஜி சந்தித்தார். ஜூன் 2—மே 16-ந்தேதி திட்டத்தை புகழ்கிறார். 25—இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டு காங்கிரஸை பின்பற்றுமாறு ஜனங்களுக்குக் கட்டளை. செப்டம்பர் 1—லீக் இல்லாமல் இடைக்கால சர்க்கார் அமைக்கப்பட்டது. அக்டோபர் 28—இடைக்கால சர்க்காரில் லீகும் சேர்ந்தது. 1945 டிசம்பரிலும், 46 ஜனவரியிலும் வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் காந்திஜி சுற்றுப் பிரயாணம். 1946 ஜனவரி பிப்ரவரியில் தென்னிந்தியாவில் காந்திஜியின் சுற்றுப் பிரயாணம். பிப்ரவரி 3—மதுரை ஸ்ரீ மீனாக்ஷி ஆலயத்துக்கு மகாத்மா விஜயம்; பழநிக்கு விஜயம்; 10—ஹரிஜன் பத்திரிகை ஆரம்பம்; 17—பட்டினியைப் போக்க காந்திஜியின் 8 அம்ச திட்டம். அக்டோபர் 18—வங்க மாதர்களுக்கு மகாத்மா புத்திமதி; அதே மாதத்தில் நவகாளி சுற்றுப் பிரயாணம். நவம்பர் 21-கலகப் பிரதேசங்களில் ஒண்டியாக வேலை செய்ய மகாத்மா தீர்மானம். டிசம்பர் 11—கால் நடையாக கிராமங்களில் யாத்திரை.

1947 எப்ரல் 16—வகுப்பு ஒற்றுமைக்கு ஜின்னா-காந்தி. காந்தி-ஜின்னா கூட்டறிக்கை. ஆக. 15:—இந்தியா சுதந்திர மடைந்தது—காந்தி கல்கத்தாவில் உபவாசம்; 18—'என் வாழ்நாளின் பாக்கி காலத்தை நான் பாகிஸ்தானில் கழிப்பேன்' என்றார் காந்திஜி. செப்டம்பர் 1—கல்கத்தாவில் காந்திஜி உபவாசம் 4:—உபவாசம் நின்றது. நவம்பர்—டிசம்பர் கண்ட்ரோல்களை எதிர்த்து காந்திஜி பிரசாரம்.

1948 வகுப்பு ஒற்றுமையை வற்புறுத்தி ஜனவரி 13-ம் தேதியன்று காலை 11 மணிக்கு கால வரையறையின்றி உண்ணா விரதம் ஆரம்பித்தார். 17-ம் தேதி உண்ணாவிரதத்தை நிறுத்த 7 நிபந்தனைகள் விதித்தார். 18-ம் தேதியன்று பகல் 12-40 மணிக்கு உபவாசம் நின்றது. மௌலானா ஆஜாத் கையினால் ஆரஞ்சு பழரசம் வாங்கி அருந்தினார். 20-ந் தேதியன்று காந்திஜியின் பிரார்த்தனைக் கூடத்தில் யாரோ ஒருவன் அவரை நோக்கி நாட்டு வெடிகுண்டு ஒன்றை வீசினான். 21-ந்தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசுகையில் குண்டு வீசியவனிடம் கருணைகாட்டும்படியும் அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்குமாறு பகவானைப் பிரார்த்திப்பதாகவும் கூறினார்.

## 1948 ஜனவரி 30-ந்தேதி இறைவன் திருவடியை அடைந்தார்

பிப்ரவரி முதல் தேதி அல்லது 2-ந்தேதி சேவாக் கிரமத்திற்குச் சென்று ஒரு மாதம் தங்கியிருந்து உடம்பைத் தேற்றிக் கொள்ள திட்டம் போட்டிருந்தார். ஆனால் கடவுள் சித்தம் வேறுவிதமாக இருந்தது.

# கலங்காதீர்!

"சுரபி"

கடலே கலங்காதே
கைபுடைத்து வீழாதே
உடல்விட்டுப் போன உத்தமனும் பேரொளியில்
ஒன்ருகி வாழ்கின்ருன் ஓலமிட்டு மாயாதே

காற்றே கதருதே
கதிகெட் டலையாதே
ஏற்றுகின்ற தேவன் எம்மிதயம் வாழ்கின்ருன்
எங்கெங்குந் தேடி இடருற்றுத் திரியாதே

மழையே நீ தேம்பாதே
மணி நீரும் சிந்தாதே
மழைத்துளியோர் விரிகடலில் மனங்குளிர்ந்து வீழ்ந்தக்கால்
மறுகுவதோ என்கின்ருன் மடைக்கண்ணீர் பெய்யாதே

வெயிலே நீ காயாதே
வெதும்பி மனம் வேகாதே
அயர்வின்றி இரவு பகல் அவனிக் குழைத்தவனின்(று)
அயர்வுற்றுத் துயில்கின்ருன் அனல் வாரி வீசாதே

உலகே மருளாதே
ஓய்வின்றிப் புரளாதே
அலகில் குணமுடையான் அண்டமெலாம் சூழ்கின்ற
கலி தீர்க்கப் புறப்பட்டான் கதிகலங்கிச் சுழலாதே

இருளே தீரளாதே
எம்மிதயம் நாடாதே
அருளாளன் இந்த அவனிதனில் வாழ்கின்ற
கருவுக்கும் காந்தி தருகின்ருன் மிரளாதே.

# " மகாத்மாவின் மறைவுக்கு இந்தியா முழுவதுமே பொறுப்பாகும் "

அருணா ஆஸப் ஆலி

"மகாத்மா காந்தியின் இந்த திடீர் மறைவுக்கு இந்தியா முழுவதுமே பொறுப்பாகும். இந்த பயங்கரமான பிற்போக்குச் சக்திகளை ஒழித்துக் கட்டுவதற்காக இந்தியாவிலுள்ள முற்போக்கு சக்திகள் எல்லாம் உடனடியாக ஒன்றுதிரள வேண்டும். மகாத்மாவை தங்களிடையே வைத்திருப்பதற்கும் அவருடைய புத்திமதியை கேட்பதற்கும் இந்தியா சில காலமாக அருகதை அற்றுவிட்டது. மகாத்மாவை சுட்டுக் கொன்ற அந்த சர்வ முட்டாள் மாத்திரமல்ல காந்திஜியின் மரணத்திற்கு பொறுப்பு.

புதிது புதிதாக கலவரங்கள் ஆரம்பமாகி இருக்கிறது என்று காந்திஜி கேட்டபோதெல்லாம் " இந்திய சரித்திரத்தின் இந்த நெருக்கடியான கட்டத்தில் நான் இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு இன்னுமா உயிர் வாழவேண்டும் ?'' என்று மனமுடைந்து வருத்தப்படுவார். இந்திய சுதந்திரம் இத்தகைய அராஜகத்தில் கொண்டு விடும் என்று அவர் கொஞ்சம்கூட நினைத்ததில்லை. இந்தியாவும், பாகிஸ்தானும் தனித்தனியாக வெவ்வேறு டொமினியன்களாக பிரிந்து போவதை அவர் எப்பொழுதும் எதிர்த்து வந்தார். இந்தியப் பிரிவினையை நம்மவர் ஏற்றுக்கொண்ட பின் எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்று அவர் கவலை கொண்டார்.

இந்திய சரித்திரத்தின் இந்த நெருக்கடியான கட்டத்தில் தேசத்திலுள்ள எல்லா தீவிர அரசியல் ஊழியர்களும் தங்களுடைய கடமைகளை சரிவர செய்யவேண்டும்.

ஸ்தாபன ரீதியாக ஒன்றுதிரட்டப்பட்ட தொழிலாளர்களும், விவசாயிகளும், கிராம மக்களும் ஒருமுகமாக ஒன்று திரண்டு முற்போக்கு ஸ்தாபனத்தை ஆதரிக்கவேண்டும். சோஷியலிஸ்ட் கட்சி இவர்களை ஒன்றுதிரட்டி வகுப்புவாத கும்பல்களையும், பிற்போக்கு வாதிகளையும் ஒழித்துக் கட்டுவதற்கு இன்று முதல் தலைமை தாங்கவேண்டும்.

இந்திய சோஷியலிஸ்ட்டுகள் மீது மகாத்மா காந்தி உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார் என்பதை நான் அறிவேன். பட்டாளி மக்களின் நல்வாழ்வுக்காக தன்னலமற்று சேவை செய்யும்படி எங்களை மகாத்மா காந்தி கேட்டிருந்தார். சோஷயலிஸ தத்துவங்கள் சம்பந்தமாக எங்களோடு அபிப்பிராய பேதம் கொண்டிருந்தபோதிலும் காங்கிரஸுக்குள் இருக்கும் இந்திய சோஷியலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் இந்திய விடுதலை போராட்டத்தில் மகத்தான பங்கெடுத்துக்கொண்டார்கள் என்பதை காந்திஜி நல்லவண்ணம் உணர்திருந்தார். இதுமட்டுமல்லாமல் சோஷயலிஸ்ட்கள் மீது அவர் நம்பிக்கையும் வைத்திருந்தார். மகாத்மா காந்தியுடன் நான் சமீபத்தில் நடத்திய சம்பாஷணைகளிலிருந்து இதை அறிந்து கொண்டேன்.

பிரஜா உரிமைகள் பற்றிய புதிய கருத்துக்கள், மக்களின் உரிமைகள், கடமைகள் என்ன என்பதை மக்களிடையே எடுத்துரைப்பதே இந்திய சோஷியலிஸ்ட் கட்சியின் உடனடியான முக்கியமான வேலையாகும்''

# இழந்தோம்

அமிருத கௌர்

இந்திய சர்க்கார் சுகாதார மந்திரியும் மகாத்மா காந்தியின் சிஷ்யையுமான ராஜகுமாரி அமிருதகௌர் மகாத்மாவின் மரணம் பற்றி பின் வருமாறு சொல்லுகிறார் :—

கண்ணிமைப் பொழுதுக்குள் நம் பேரன்பரை, தலைவரை, நண்பரை, தத்துவ போதகரை, வழி காட்டியை நம்மிடமிருந்து, பறிக்கப்பட்டு விட்டோம். நம் யாவருக்கும் அவர் தந்தையா யிருந்தார். மேலுக்கு நாம் அவரை பாபு என அழைக்கவில்லை. இன்று நாம் நாதியற்றவர்களாகி விட்டோம்.

நம் சரித்திரத்தின் இந்த நெருக்கடியான சமயத்தில் அவர் போனதால் ஏற்படும் நஷ்டம் மதிக்க வொண்ணாதது. காலம் செல்லச் செல்ல அவருடைய விவேகமான ஆலோசனையில்லையே என நாம் ஏங்குவோம் என்பது உறுதி. ராஜீய சுதந்திர லட்சியத்துக்கு நேர் பாதையில் அவர் நம்மை அழைத்துச் சென்றார். ஆகஸ்டு 15-ந் தேதிக்குப்பின் உடனேயே மூண்ட வகுப்புப் பூசல் அவர் ஹிருதயத்தை ஆழப் புண்படுத்தியது. நேசமுள்ள பிதா மகனிடம் காண்பதைப் போல நம்மிடையே ஒழுக்கம் குன்றி விட்டதை அவர் கண்டார். நல்ல வழியை நமக்கு காட்டினார். பல உள்ளங்களில் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரத்தை தம் பேரன்பினால் தணிக்க முயற்சித்தார். நம்மைப் பேரழிவு குறைகொள்வதைத் தடுத்து நின்றவர் அவர் ஒருவரே. அராஜகமும், ஒழுங்கீனமும், வெறுப்பும், பலாத்காரமும் வேறு இடத்திற்கு இட்டுச் செல்லா.

ஒரு பைத்தியக்காரனின் வெறி அவருடைய நளினமான உடலை நம்மிடமிருந்து அகற்றியது. ஆனால் அவர் ஆத்மாவை அழிக்க வல்லவர் யார்? அவருக்கு சாவே கிடையாது. நம்மிடையிலேயே அவர் இருப்பதை நாம் உணர்வோம். அவர் பூத உடலில் நம்மிடை சஞ்சரித்த காலத்தை விட இனி அவர் கொள்கைகளுக்கு அதிக உண்மையாக நடப்போமாக.

வெற்றி வீரனின் வாகை மாலையை அவர் சூடிவிட்டார். அவர் ஆத்மா சாந்தியடைந்திருக்கிறது. நமக்காக அவர் இந்த மாபெருந் தியாகம் புரிய நேர்ந்தது. நம் குற்றத்தை நாம் மறந்துவிடக் கூடாது. நம்மவரில் ஒருவனே அவருடைய விலை மதிப்பற்ற உயிரை முடிக்கும் கயமையிலிறங்கியதைக் குறித்து ஒவ்வொரு உண்மை இந்தியனும் வெட்கித் தலை குனிய வேண்டும். அவனை ஆண்டவன் மன்னிப்பாராக. நாமும் கொலையாளியை மன்னிக்க முயற்சிப்போம். பாபுவும் கூட அவன் சுடும்போதே அவனை மன்னித்து விட்டிருப்பார். ஏன், நேசித்துமிருப்பார் என்பதில் ஐயமில்லை.

நேற்று முதல் துக்கத்தால் தலை குனிந்து, வகை யறியாமையால் குழம்பியுள்ள நாம் இவற்றை கட்டுப் படுத்த முயற்சிப்போம். அவர் இருந்தால் நம்மைக் கோரியிருக்கக்கூடும் சத்யம், அன்பு கலந்த நெறியில் நடக்கும் சக்தி நமக்கு வரட்டும். இதன் மூலம் நம் தேசத்தின் நல்ல பெயரை களங்கப் படுத்திவிட்ட பெரும் கறையை ஒழிப்போம். ஆண்டவன் நம் மீது இரக்கமுற்று பாபுவுக்கு உண்மையாக நடக்கும் சக்தியை அளித்து அவர் கனவு கண்ட இந்தியாவை நிர்மாணிக்க உதவுவாராக.

# கண்ணீர்

★

[ கவியோகி சுத்தானந்த பாரதி ]

★

துடிக்குதெம் ஆவி அந்தோ
துயர்மனம் இரத்தக் கண்ணீர்
வடிக்குதெம் உளம் வெதும்பி
வாடுதுன் பிரிவை எண்ணி!
இடிக்கும் வெம் புயலினுக்கும்
இடர்ப்படா தெம் விலங்கை
ஒடிக்கு நல் லன்பு வீர
உனக்குமோர் சாவும் உண்டோ?

உண்மையின் உரிமை காட்ட
உலகினுக் கொருவன் ஆனாய்;
திண்மன உறுதி யாலே
தியாகத்தீக் குளித்து நாங்கள்
கண்மனங் களிக்க நாட்டின்
கட்டுகள் அவிழ்த்தாய்! எங்கள்
புண்மனம் புழுங்கு தையா!
காந்திநீ போக லாமோ?

இடமகல் உலக மெல்லாம்
இனிதுறச் சேர்ந்து வாழ.
மடவிருள் அகலத் தீய
வறுமைநோய் தீர வேண்டிச்
சுடச்சுட நோற்று நாட்டிற்
சுதந்திரக் கொடியை நட்டாய்
சுடச்சுட வுடலை நீத்தாய்
சோக நாடக மிவ் வாழ்வே!

தந்தைதாய் இறந்திட்டாலும்
தரணியை இழந்திட்டாலும்
சொந்தநல் லுயிர் போனாலும்
துயர்ப்பட மாட்டோம் ஐயா...
இந்திய நாட்டைக் காத்த
இணையிலாக் கருணை வாழ்வே!
இந்தியப் பாதகன் சுட்டான்!
இதயமும் வெடிக்கு தையா!

சத்தியம் உள்ள மட்டும்,
தருமமே வெல்லும் மட்டும்,
உத்தமர் பொறுமை யாலே
உயர்நலம் உயரு மட்டும்,
வித்தகப் பரத நாட்டின்
புண்ணியம் விளங்கு மட்டும்,
இத்தலம் உள்ள மட்டும்
எவருனை மறப்பார் ஐயா!

மறங்கொண்ட மிருக சக்தி
வாட்டிடும் உலகைக் காக்கத்
திறங்கொண்ட தெய்வ சக்தி
தேர்ந்தெதிர் பகைக்கு லத்தைப்
புறங்கண்டு, பொய்யில்லாத
பொதுநலம் பொலியவே நல்
அறங்கண்ட வடிவ மானாய்
அமரநீ வாழ்க வாழ்க!

எட்டெட்டுத் திக்கும் உன்பேர்
எதிரொலித் தென்றும் வாழும்
கட்டிநீ வைத்த நாடு
கற்பக பூமி யாகும்
சட்டமுன் இட்ட மாகும்
சடவுடல் வீழ உன்னைச்
சுட்டபுண் எமது பாவஞ்
சுட்டிடத் துடிக்கு மையா!

மன்னுயி ரெல்லாம் வாழ,
மறவலிக் கொடுமை வீழத்
தன்னுயிர் கொடுத்தாய் புத்த
தருமமே உருவெ டுத்தாய்
கன்னத்தில் அடித்த வர்க்கும்
கருணைசெய் கிஸ்திது போன்றாய்
மன்னுல கெல்லாம் போற்ற
நின்நாமம், வாழ்க, வாழ்க!

# ஈச்வரனின்

# குரல் கேட்குமா?

**குமுதினி**

**காந்தி** அடிகளின் மரணச் செய்தியை ரேடியோ மூலம் கேட்டு இன்று மூன்று தினமாகிறது. இந்த மூன்று தினத்தையும் எவ்விதம் கழித்தோம் என்பது தெரியவில்லை. வழக்கம் என்பது ஒரு வலிவு கொண்ட எஜமானன். வழக்கம் தூண்ட விட்டு வேலைகளைச் செய்யப் போவேன். என்ன செய்ய வந்தோம் என்பது மறந்து விடும். இங்கு நிற்பேன். அங்கு நிற்பேன். பாபு! பாபுஜி! என்று மனம் துடிக்கும். அங்கேயே சுவற்றில் சாய்ந்து எதுவும் தெரியாமல் பிரமித்து இருப்பேன்.

எத்தனை தேசத்து மனிதர், எத்தனை வகைப்பபட்டவர், எத்தனை விதமான குரல்களில் உணர்ச்சியுடன் பாபு என்று அழைத்துப் பேசி இருக்கிறார்கள். பாபு ஷி என்பார் ஒருவர். பாபுசி என்பார் ஒருவர். பாபுச்சி, பாபு, பப்பு, வாபூ, வாபுஷி, பொப்புஷி என்ற எல்லாவிதக் குரலுக்கும் விடையளித்தவர் அவர். திரும்பத் திரும்ப எவ்விதம் பாபு என்று பிதற்றுவது.

ஆச்ரமத்து வாசிகளை நாள் தோறும் 'स्थितप्रज्ञस्य का भाषा" என்று ஆரம்பிக்கும் இடத்திலிருந்து கீதை சுலோகங்களை அந்த அத்யாயம் இறுதி வரை வாசிக்கச் சொல்வார்.

வழக்கமாக கீதை அடிமுதல் நுனிவரை தினமும் சிறிது வாசித்து வருவதற்கு மேற்பட்ட இது. வரப்போகும் பிரிவை நினைத்துத் தமது ஆச்ரமக் குழந்தைகளுக்குத் திடமனதை அளிக்க விரும்பியே அவர் அவ்விதம் செய்திருக்க வேண்டும். ஆனால் ஆச்ரமப் பழக்கம் இல்லாமல் வெளியே இருக்கும் லக்ஷக்கணக்கான குழந்தைகள் இப்போது மனத் திடத்தை இழந்து பாபுவின் குழந்தைகள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளவே தகுதியற்றவர்களாய் இருக்கிறார்கள்.

—நெஞ்சில்

"எனக் கவலைகள் எய்திடும் போது
இதம் சொல்லித் தேற்றிடுவார்"

என்பதை நடை முறையில் கையாண்டு வந்தவர் காந்தியடிகள். எந்த மும்முர வேலையில் முனைந்திருந்தாலும், எண்ணற்ற அலுவல்களை முடித்துக் களைத்து இருந்தாலும் துக்கித்து இருப்பவர் என்று ஒருவரைப் பற்றி அறிந்தால் அடிகள் உடனே அவ்விதமானவரைத் தமது அருகில் அழைத்துத் தேறுதல் சொல்லி அனுப்புவார். இவ்விதம் எத்தனை ஆயிரக் கணக்கானவர்களுக்கு, உலகத்தின் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் தம்மைத் தேடி வருபவருக்கு அடிகள் தாமே நேரில் கண்ணீரைத் துடைத்திருக்கிறார்!! இந்த ஒரு வேலையைச் செய்தவற்குக் கூட சாதாரண மனிதர் ஒருவரின் வாழ் நாள் போதாதே!

ஒரு சிறிய சம்பவம் ஞாபகம் வருகிறது. சென்னையில் காந்தியடிகள் தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபையாரின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்திற்கு வந்திருந்த சமயம். அடிகள் வந்து நான்கு தினங்களாகிவிட்டன. முதல் தினம் தனித்தனி மனிதரும், மறு தினம் குடும்பம் குடும்பமாகவும் அடிகளைத் தரிசித்தது போக, மூன்றாம் தினம் முதல் கோஷ்டி கோஷ்டியாகத் தரிசிக்கும் விதம் அவ்வளவு ஜனத்திரள் சேர்ந்து விட்டது. மாலைப் பொழுது. பிரார்த்தனை முடிந்து அடிகள் தமது இருப்பிடத்திற்கு வந்தார். வெளியே தோட்டத்தின் கதவையே பெயர்த்து எறிய முயன்று கொண்டிருந்தது. அன்று தான் சிறிய மைதானத்தில்

பிரார்த்தனை நடத்திய கடைசி தினம். (மறுதினம் விஜயராகவாச்சாரி ரோடிற்கு அருகிலுள்ள பெரிய மைதானத்தில் பிரார்த்தனை நடத்த ஏற்பாடு செய்தார்கள்)

காலை முதல் வந்த மனிதர்களைக் கண்டு பேசினதிலும், பார்லிமெண்டரி கோஷ்டியினருடன் கலந்து யோசித்ததுமாக அடிகள் மிகவும் களைத்திருந்தார். ஸ்ரீ ராஜாஜி அவர்கள் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியை அழைத்து வந்து அறிமுகப் படுத்த சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தார். காலையிலிருந்து காத்திருக்கும் ஸ்ரீரங்கம், சிதம்பரம் முதலிய இடங்களிலிருந்து வந்த கோஷ்டியினர் பேட்டியை எதிர்பார்த்து நின்றனர். எனக்குத் தெரிந்த பெண்மணி ஒருவள் தனது மனக் கஷ்டத்தைச் சொல்லி அடிகளைத் தரிசிக்க வேண்டுமென்று என்னிடம் சொல்லி இருந்தாள். நானும் அன்றைக்கு அழைத்துப் போவதாகக் கூறி இருந்தேன். இதைப்பற்றி அடிகளிடம் கூறி, அவள் நிலையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லி அழைத்துவர அனுமதியும் கேட்டிருந்தேன் "அவசியம் அழைத்து வா" என்று சொல்லியிருந்தார் அடிகள். நான் அழைத்துச் சென்ற அன்று மாலை, அந்த சமயம் இருபது பேர்கள் அடிகளுடன் பேசிக் கொண்டிருந்தனர். என்னுடைய சினேகிதியை ஸ்ரீமான் ஜயபிரகாஷ் நாராயணரின் மனைவி ஸ்ரீமதி பிரபாவதி தேவியிடம் ஒப்பித்து "பாபுவுக்கு ஓய்வு ஏற்பட்டதும் சற்று இவளை அறிமுகப் படுத்துங்கள்" என்று சொல்லிவிட்டு எனக்கு அவசரமாக வேறோர் அலுவல் இருந்தமையால் சென்று விட்டேன். அடிகள் என் சினேகிதியுடன் சம்பாஷித்துத் தேறுதல் சொன்னது மாத்திரமல்ல, அவள் தனது வரலாற்றைச் சொல்லுகையிலேயே, ஆமாம் இந்த இந்த சம்பவம் இந்த இந்த வருஷம் நடந்தது என்று சொல்லி அவளுக்கு சகஜபாவத்தை உண்டாக்கினர் என்று அவள் பிற்பாடு என்னிடம் கூறினாள். இத்தனை அலுவல்களுக்கு இடையில் நான் சொன்ன இரண்டொரு வார்த்தைகளை ஞாபகம் வைத்தது மாத்திரமல்ல. அவைகள் எந்த வருஷம் நடந்திருக்கும் என்பதைத் தாமே கணக்கிட்டு, அதுபற்றிப் பேசி தமது அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார் கருணைக் கடல்.

அத்துடன் நிற்கவில்லை. நான் திரும்பி வந்ததும் "பாபு உன்னைக் கூப்பிட்டாரே! எங்கே போய் விட்டாய்?" என்று இரண்டொருவர் கேட்டார்கள். என்னவோ என்று அவசரமாக அடிகளிடம் சென்றேன். என்னைப் பார்த்ததும், "உன் சினேகிதியுடன் பேசினேன்" என்று திருப்தியைக் கொடுக்கும் விதம் சொல்லிவிட்டு மறுபடி தமது வேலையில் ஈடுபட்டார்.

கிழக்கு வங்காளத்திலும் நவகாளியிலும் அவர் கேட்டிருக்கும் துக்க சம்பவங்களும் அவர் நேரில் ஆறுதல் சொல்லித் தேற்றின மக்களும் அனந்தம். இவ்விதம் பொதுக் கண்ணீரையும் துடைக்க யார் வல்லவர்?

பிறரின் கோபத்தை எதிர்த்து நிற்கக் கூடும். பாபு ஒரு பிரியமான வார்த்தை சொன்னால் நாம் உருக் குலைந்து விடுவோம். இதைப் பலரும் என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய சொந்த அனுபவமும் இதுவே. ஒரு சம்பவம் என் மனதை விட்டு அகலாமல் பதிந்து விட்டிருக்கிறது. "நான் தங்களைத் தரிசிக்க வரலாமா?" என்று ஒரு முறை கேட்டு எழுதி இருந்தேன். "நீ கேட்பதை மறுப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆனால் இங்கே ஆச்ரமத்தில் கூட்டம் நிறைகிறது. சற்று தாமதித்து வந்தால் தேவலை" என்று எழுதி இருந்தார்.

பத்து தினம் தாமதித்தேன். அதற்கு மேல் என்னால் பொறுக்க முடியவில்லை. இந்த சந்தர்ப்பத்தை விட்டால் பிற்பாடு சமயம் கிடைக்காது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. (அந்த உணர்ச்சி உண்மையாகி விட்டது. அடிகளை நான் ஸேவா கிராமத்தில் தரிசித்தது அதுவே கடைசி முறை.) புறப்பட்டுப் போனேன். ஆச்ரமத்தில் இருந்தது பெரிய கூட்டம் என்பது மாத்திரமல்ல, பெரியவர்களின் கூட்டம். அடிகளின் ஒரு புறம் பாபு ராஜேந்திர பிரஸாத், மற்றொரு புறம் ஸர்தார் வல்லபாய் படேல். இன்னொரு புறம் திரும்பினால் காலம் சென்ற புலாபாய் தேசாய், அவருடைய மூக்கைக் கொண்டு அவரை அடையாளம் புரிந்து கொண்டேன். எனக்கு வெட்கம் அதிகம் உண்டாயிற்று. "எப்போது வந்தாய்?" என்று அன்புடன் அடிகள் வரவேற்றார். பதில் கூட என்னால்

சொல்ல முடியவில்லை. அடிகள் சாப்பிட்டானதும் சாப்பாட்டுக் குடிசையிலிருந்து ஆபீஸ் குடிசைக்கு நடந்து போகும் சமயம் என்னைத் தமது பக்கத்தில் கூடவருமாறு அழைத்தார். இது தான் சமயம் என்று நான் அவருடைய விருப்பத்திற்கு எதிராக வந்ததை மன்னிக்குமாறு வேண்டி, பிற்பாடு சில காலம் வர இயலாமல் போகக் கூடும் என்பதற்குக் காரணத்தையும் உளறிக் கொட்டினேன். ஆபீஸ் குடிசையை அடைந்ததும் அடிகள் தமது வேலையில் ஈடுபட்டார். நானும் வெட்கி அப்பால் வந்து விட்டேன். ஆனால் அடிகள் என்னை மறக்கவில்லை. அவருக்கு என்னுடன் பேச அவகாசமில்லை. இருந்தும் நாலைந்து வரிகள் ஒரு கடிதத்தில் எழுதிக் கொடுத்து என்னிடம் சேர்ப்பிக்குமாறு சொல்லி இருந்தார். கடிதத்தில் ஒன்றும் விசேஷமில்லை. "உடம்பை பார்த்துக் கொள். மாலையில் நான் உலாவச் செல்லும்போது உன் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வா. ஆச்ரமத்து ஹிந்தி வாத்யாரிடம் அவர்களை ஹிந்தி படிக்கச் சொல்லு. கமலாவிடம் (சி. கமலா தேவி) சொல்லி அவர்களுடன் தமிழ் பேசச் சொல்லுகிறேன்." (அந்த சமயம் ஆச்ரமத்தில் இருந்தவருள் தமிழ் தெரிந்தவர் அவர் ஒருவரே.) என்றிம் மாதிரி. அதைப் படித்ததும் என்னையும் அறியாமல் என் கண்களில் நீர் நிறைந்து விட்டது. அங்கே நிற்க முடியாமல் எழுந்து ஓடிவிட்டேன். பிற்பாடு ஸ்ரீ ராஜகுமாரி என்னைப் பார்த்து "பாபுவின் கடிதத்தில் உனக்கு வருத்தம் ஏற்படும் விதம் ஏதாவது இருந்ததா?" என்று கேட்டார். "வருத்தம் ஏற்படும் விதம் எதுவும் இல்லை. ஆனால் அவருடைய அன்பு என்னை உருக்குலையச் செய்கிறது" என்றேன். "ஆமாம் பாபுவின் பிரியம் எல்லாரையும் அவ்விதம் தான் செய்கிறது." என்றார் அவர்.

"கொத அஜானலே ஜானயிலே துமி கொத கரே திலே டாயி" (எத்தனையோ தெரியாதவர்களை நீ தெரிய வைத்தாய். எத்தனையோ வீடுகளில் இடம் அளித்தாய்.) என்று கவி டாகூர் பாடியது அடிகளுக்கு மிகவும் பொருத்தமானதென்று நான் பலமுறை நன்றியுடன் என்னுடைய மனதில் கூறிக்கொண்டு இருக்கிறேன். "தூரகே கரிளே நிகட பந்து பரகே கரிளே பாயி" (தூரத்தவரை நெருங்கிய பந்துவாகவும் அந்நியரைச் சகோதரராகவும் பாபு செய்திருக்கிறார். இது பாபுவிடம் செல்லுபவர்களுக் கெல்லாம் ஏற்படும் அனுபவம். இவ்விதம் ஏற்பட்ட பல நட்பினால் என்னுடைய வாழ்க்கை எத்தனையோ பயனடைந்திருக்கிறது. குஜராத்தி, மஹாராஷ்டிரர், வங்காளர், தமிழர், தெலுங்கர், மலையாளத்தவர், என்ற வகையினர் மாத்திரமல்ல; சைனா, ஜப்பான், இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாட்டினரை யெல்லாம் அங்கு நான் சந்தித்து சிலருடன் ஆழ்ந்த நட்பும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன். எல்லாரையும் காந்தம் போல் அவர் இழுத்துக் கொண்டிருந்தார்.

"தூமாரே ஜானிலே நயி கொயி பர்" (உம்மைத் தெரிந்த பின் எனக்கு எவரும் அந்நியரல்ல) என்பதையும் காந்தி அடிகளிடம் நான் உணர்ந்திருக்கிறேன். புது மனிதர் என்றாலே சிம்ம சுவப்னம் போல் நடுங்கும் நான் எத்தனை முறை "சே! பயப்படுவானேன். காந்தியடிகளிடமே பேசிய நாம் இவர்களிடம் பேசப் பயப்படுவானேன்" என்று என்னைத் தைரியம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவ்விதம் துணிந்து பேசிய பின் கவிகளின் வார்த்தையின் உண்மையை, எல்லாரிடமும் இருக்கும் சகோதரத்வத்தை உணர்ந்து ஈச்வரனுக்கு நன்றி செலுத்தி இருக்கிறேன்.

"மைம் கஹீம் பீ ஹூம், து ஆ சக்தி ஹை" என்று கடைசி முறையாக எனக்குக் கடிதம் எழுதி இருந்தார். டில்லியில் இவ்வளவு வேலைகளுக்கு இடையில் நான் அவரைக் கண்டு தரிசிக்கக் கூடுமா என்று கேட்ட கேள்விக்கு விடை அது. "மூர்க்கனில் மூர்க்கனானேன்" என்று ஆழ்வார்கள் பாடியது எனக்கே பொருந்தும். அவர் தான் அனுமதி கொடுத்து விட்டாரே, நாம் சாவகாசமாகப் போகலாம் என்று போகும் நாட்களை ஒத்திப் போட்டுக் கொண்டே இருந்தேன். "மைம் கஹீம் பீ ஹூம் து ஆ சக்தி ஹை" மூன்று நாட்களாக காதைத் துளைக்கும் இந்த வார்த்தைகளை மூளையிலிருந்து பிடுங்கி எறிய முடியாதா? அன்பினால் கூறப்பட்ட வார்த்தைகளுக்கு வாழ்க்கையை நரகமாகச் செய்யும் இவ்விதக் குரூரத்தன்மை எங்கிருந்து வந்தது? எப்படி வருவது பாபு? நீங்கள் எங்கே இருந்தாலும் என்றால் எவ்விதம் வரக் கூடும்?

ஆச்ரமத்தில் சிறிய விஷயம், பெரியவிஷயம் எல்லாமும் தீர்மானிப்பது பாபுவே. இந்திய அரசியல் உலகில் எழும் சிக்கல் பிரச்னைகளைத் தீர்மானிப்பதும் பாபுவே. அவர் கூறுவதற்குமேல் நியாயம் சொல்ல எவராலும் இயலாது. "நான் இன்னும் கொஞ்சம் அதிகம் வெல்லம் சாப்பிடலாமா?" என்பார் ஒருவர். "கூடாது" என்று தீர்மானமான விடை கிடைக்கும். "ஓரளவு வெல்லம் சாப்பிட்டால் சரீர போஷணை, அதற்குமேல் சாப்பிட்டால் இந்திரிய திருப்திக்காகச் செய்வது ஆகும். அதை செய்யக்கூடாது" என்று பாபு சொல்வார். வெல்லப்பிரியர் அதை ஒத்துக் கொள்வார். கிழக்கிலிருந்து ஒருபையன் வந்து ஆச்ரமத்தில் வசித்து வருவான். மேற்கிலிருந்து ஒருபெண் வந்து வசித்து வருவாள். இருவரும் காதலித்து "நாங்கள் விவாகம் செய்து கொள்ளலாமா?" என்று பாபுவைக் கேட்பார்கள். எவ்விதம் விடை சொல்வது? வேறு ஜாதி, வேறு மதம், வேறுவித பால்யப் பயிற்சிகள். "செய்து கொள்ளுங்கள்" என்று ஆசீர்வதிப்பார் பாபு. அல்லது "யஹ் விவாஹ் சுபதாயக் நஹீம் ஹோகா" என்று கண்டிப்பாய் கூறிவிடுவார். தீர்மானப் பொறுப்பு அவருடையது.

இந்தியாவில் சர்க்கா என்ற சக்கரமே இல்லாமல் மறைந்து விட்டது. நாட்டின் துணித் தேவையை நாமே பூர்த்திசெய்து கொள்ளவேண்டும் என்று எல்லாத் தலைவர்களும் தீர்மானித்தாகி விட்டது. ஆனால் சர்க்காவை இனி சிருஷ்டித்து அதில் நூற்கு மாறு இந்தியா முழுவதும் சொல்லிக் கொடுத்து ஒரு புது துணி சிருஷ்டியை ஏற்படுத்துவதா, அல்லது நிறைய ஆலைகள் ஏற்படுத்தி மில் துணிகளை தயாரிப்பதா? இதைத் தீர்மானிப்பது யார்?

நாட்டில் ரேஷன் வேண்டுமா, எடுத்து விடலாமா? இதைத் தீர்மானிப்பது யார்? இரண்டு பக்கமும் சாதக பாதகங்கள் இருக்கின்றன. ஒரு கக்ஷி இதை விஸ்தரிக்கிறார். ஒரு கக்ஷி அதை விஸ்தரிக்கிறார். கிழவனார் வெல்லம் சாப்பிடலாமா, கீரை எவ்வளவு சாப்பிடுவது என்பதைத் தீர்மானிப்பவர்தான் நாட்டின் பிரச்னைகளையும் தீர்க்கதரிசனத்துடன் தீர்மானிக்க வேண்டும். வேறு கதியில்லாமல் இருந்தோம். இனி நமது தீர்மானங்களை யார் செய்வது?

"ஈச்வர் கீ ஆவாஜ் தூ சுன் சக்தீ ஹை" (ஈச்வரனின் குரலை நீ கேட்கக் கூடும்) என்று அடிகள் எனக்கு எழுதினர். எப்படிக் கேட்பது? அதை நேரில் சென்று உபதேசம் பெறலாமென்று எண்ணி இருந்தேன். எப்படிக் கேட்பது? பாபு! எப்படிக் கேட்பது? எது வழி? யார் வழி காட்டுவார்கள்? மனதிலிருக்கும் சிக்கல் பிரச்னைகளை யார் தீர்ப்பார்கள்?

## முகப்புச் சித்திரம்

அண்ணல் காந்தியடிகள் அமரரான நாளன்று பிரார்த்தனைக்குச் செல்லுகையில் கடைசியாக எடுத்த படம் இந்த இதழ் மேலட்டையை அலங்கரிக்கிறது

# மக்கள் மன்னனின் மறைவு!

ர. ராஜம் பாரதி

உலகிற்கு இவ்வளவு பெரிய நஷ்டம் எப்போதும் ஏற்பட்டதில்லை. பாரத நாட்டின் நஷ்டத்தை மனத்தால் எண்ணி அளவிடவே முடியாது. பெறுவதற்கரிய மாணிக்கத்தைப் பெற்று நாம் இறுமாந்திருந்தோம். இந்த அடிமை நாட்டிலும்—ஒரே நிமிஷத்தில் நமது கர்வம் பங்கமடைந்தது---ஏமாந்தோம்---பொக்கிஷத்தை இழந்தோம். இந்திய நாடு ஐயன் பிறந்து வாழ்ந்த பிறகும் சாப விமோசனம் அடையவில்லையா?

அன்னை பாரதம் நூருண்டு தவம் செய்து அருமை மகனைப் பெற்றெடுத்தாள்—பிள்ளை வயது வந்தவுடன் தாயின் கை விலங்கைப் பார்த்துக் கலங்கி, அத்தளையைத் தகர்த்தெறிய விரதம் பூண்டான். அன்பினுலும் அஹிம்சையாலும் உலகிற் பெரிய அரசாங்கத்தை வென்று, அன்னையின் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தான்—விலங்கு முறிந்தது. விடுவிக்கப்பட்ட கைகளால் மகனை வாரியெடுக்க நேரமில்லை. அதற்குள் கயவனெருவன் தாயிடமிருந்து சேயைப் பிரித்து விட்டான். அன்னையின் சோக நாடகத்திற்கு முடிவே யில்லையா? அமிர்தம் பிறந்த தன் வயிற்றிலிருந்து விஷத்தையும் பெற்றுத் தந்த தாய்க்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!

ஒரு இந்தியன், அதிலும் ஒரு ஹிந்து, அதற்கு மேலும் வீரன் சிவாஜி பிறந்த நாட்டான் இந்த அரக்கத் தொழிலைப் புரிந்தான் என்று கேட்ட எந்த இந்தியனும் புழுவாகத் துடிக்க வேணும்—உலகோர் முன் சொல்ல முடியாத வெட்கத்தால் நாம் தலை குனிகிறேம்.

இனி ஏழைகள் நிலைமை என்ன? பெண்கள் கதி என்ன? ஏழைகளும் கஷ்டப்படுவோரும் சுரண்டப்படுபவர்களும் உற்ற துணை உண்டு ஒன்று என்று இறுமாந்திருந்தோமே—ஸ்திரீ ரத்னங்கள் பலர் மேதாவிகளாய் பல பொறுப்பான பதவிகளில் வீற்றிருக்கின்றனர் என்ருல் அது பாபுவின் பிரசாதமேயாகும். புனிதன் காந்திஜியின் அருள் கட்டளைக்காகவே பெண்கள் அரசியலில் பிரவேசித்தனர்—பெரும் பதவிகளையும் வகித்து ஆட்சி நடத்துகின்றனர்.

காந்தி இல்லா சுதந்திரம் வேண்டுமா? காந்தியுடன் அடிமை நாட்டில் இருப்பாயா? நல்ல கேள்வி. ஒரே பதிலுண்டு—காந்தியுள்ள இடம் வெளிச்சம். அதுவே சுதந்திரம்—அடிமைத்தனம் தானக மறையும். காந்தியில்லா இடம் அந்தகாரம்—தர்மம் நசித்தால் சுதந்திரம் அன்றே நசிக்கும்.

முனி சிரேஷ்டன் நாட்டில் கோரியது சாந்தி, சமாதானம்—சமாதானத்திற்குப் பங்கம் ஏற்பட்டால் நாடு திரும்பவும் நாசமாகும், அடிமைப்படும்; ஆகவே ஹிம்சாவாதிகளையும் கொலைஞரையும் அடக்கியே தீரவேண்டும். அன்பினல் அவர்கள் அறியாமையை அகற்ற வேண்டும். இப் பெருங் காரியத்தைச் செய்து முடிக்க சக்தி வாய்ந்தவர் மாதரேயாகும்; இதுவே நாட்டின் பிதாவுடைய உள்ளக் கருத்தாகும். பெண் குலம் தாயன்பு உடையது. எல்லையில்லாத பொறுமை யுடையது—ஆகவே பாபுஜி விட்டுப்போன குறை வேலையைப் பூர்த்தி செய்வது நம் கடமை. நாம் எழுந்து நம் கடமையைச் செய்வோமாக........

# சாந்த மகாத்மா திருவடி சரணம்

கொத்தமங்கலம் சுப்பு

கல்லாலின் கீழ் அமரும் ஆதிக் கடவுள் இவர்தானே
கடைத்தேறும் வழிகாட்டும் கீதைக் கண்ணன் இவர்தானே
சொல்லாலும் மனதாலும் வணங்கும் சுகப்பிரம்மம் இவரோ
சுத்த ஜோதியாய் திகழும் வேதச் சுருதிப் பொருளிதுவோ
அருளே உருவோ பொருளே உருவோ அன்பே உருவோ
அமுதே உருவோ
மருளே ஒழியும் மனமே தெளியும் மருந்தே சிந்தை விருந்தே
எங்கள்
மனதே கோயில் கொண்ட மகாத்மா மன்னு என்றும்
மறையா மணியே
குருவே குருவே குகனே தெய்வக் கொழுந்தே குமரா,
குருதேசிகனே
திருவே எங்கள் செல்வமே ஞானசீலா இந்தியர் செய்
தவப்பயனே
காந்தி மகாத்மா சாந்த மகாத்மா கருணை பொழியும்
ஏந்தல் மகாத்மா
சோர்ந்தவர் உள்ளம் வாழும் மகாத்மா துணையே உருவாய் வந்த
மகாத்மா
அன்னை தந்தை அய்யன் மதலை முன்னைத் தவமே மோகன
முனிவா
உன்னைப் பணிவோம் உன்னைப் பணிவோம் உள்ளப் பகையே
கொள்ளோம் கொள்ளோம்
சத்திய வாழ்வே வாழ்வோம் வாழ்வோம் சத்திய மொன்றே
சொல்வோம் சொல்வோம்
கத்தியெடுக்கோம் குத்திடமாட்டோம் கருணை வளர்ப்போம்
மரணம் அஞ்சோம்
சரணம் சரணம் குருவே சரணம் சாந்த மகாத்மா திருவடி சரணம்
சரணம் சரணம் இந்தியர் வாழ்வைத் தந்த எந்தையே சரணம்
சரணம்.

(காந்திமகான் கதையிலிருந்து)

# எதிரொலி

## புதுமைப் பெண்

தேனமர் சோலை மாட மாமயிலை என்று மயிலையைப் புகழ்ந்தனர் ஆழ்வார்கள்.

மைப்பயந்த ஒண் கண் மட நல்லார் மா
மயிலை,
வளைக்கை மட நல்லார் மாமயிலை,
மலிவிழா வீதி மட நல்லார் மாமயிலை,
உத்திர நாள்—ஒலிவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்!

என்று பூம்பாவையை அழைக்கும்பொழுது மயிலை மாதரின் சிறப்பையும், விழாக்கள் நடைபெறும் அழகையும் விமரிசையையும் விவரித்தார் ஞானசம்பந்தப் பெருமான்.

இந்த அழகிய மயிலைக் கடற்கரையின் சூரியோதயத்தைக் கண்டுதான், ஆழ்வார்கள், உலகையே அகலாக்கி, கடலையே நெய்யாக்கி, அதில் முளைத்தெழுந்த சூரியனைக் கண்டு, வெய்ய கதிரோன் விளக்காக என்று பாடியிருக்க வேணும். அந்த ஆழ்வாரும் சம்பந்தரும் கூட வியக்கும் வண்ணமிருந்தது மார்கழியில் ஓர்நாள். 28-1-'48-ல் சென்னையின் அழகிய கடற்கரையில் சூர்யோதயம் சுதந்திர இந்தியாவில் சுதந்திர வீர மகளிர் கூடும் மகாநாட்டைக் காண வெகு ஆவலுடன் எழுந்து வந்தது போலிருந்தது அந்தக் காட்சி.

★ ★ ★

அகில இந்திய மாதர் மகாநாட்டின் இருபதாவது வருஷத்தின் கூட்டம் நடைபெற்றது டிஸம்பரில்தான் என்றாலும், ஆறு மாதத்திற்கு முன்பே, இதற்கு வேண்டிய திட்டங்கள், உணவு வசதிகள் இறங்குமிடம், நடைபெறவேண்டிய முறைகள் எல்லாம் திட்டமிடப்பட்டன. கலியாணம், திருவிழா வென்று சொன்னால் போதாது இதன் விமரிசையை. நம்மால் முடியுமா? பெண்களால் முடியுமா? என்றெல்லாம் பயந்து பயந்து நமக்குள்ளேயே வினா விடை தயாரிக்க முற்படும் பெண்களுக்கு நம்மால் முடியும், உள்ளூர் குளக்கரை வம்பு முதல் உலகத்தின் மறு பகுதியான அமெரிக்கா வரையில், ஏன் ரஷியாவிலும்கூடச் சென்று பேசுவோம் பாரத நாட்டு வீரப் பெண்கள். பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் மட்டும் தானென்று நினைக்காதீர்கள், மனம் வைத்தால் உணவு நெருக்கடி, பஞ்சம், கலவரம், இவைகளுக்கு இடையிலும்கூட வெற்றிகரமாக எடுத்த செயலை முடிக்கும் திறன் எங்களுக்கு உண்டு என்று மறைமுகமாகச் சொல்வது போலிருந்தன நிகழ்ச்சிகள்.

26-ந் தேதி மாலை சென்னையை அடுத்த மீனம்பாக்கத்தின் அழகிய விமான நிலையம். மார்கழி மாதத்தின் சிலு சிலுப்பு வழக்கம் போலத்தானிருந்தது. சூரியனும் வழக்கம் போலவே தான் தன் பொற்கைகளை நீட்டி நிலையத்தை மெருகிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் வழக்கத்திற்கு மாறாக,

மானினம் வருவ போன்றும் மயிலினம்
திரிவ போன்றும்
பூநனை கூந்தல் மாதர் பொம் மெனப்
புகுந்து மொய்த்தார்

என்று கம்பரது பாடலை நினைவூட்டுவது போல் வித விதமான பட்டாடைகள் அணிந்த சென்னை நகரத்துப் பெண்களும் வெள்ளைக் கலையுடுத்த சாரணச் சிறுமிகளும் கூடி நின்றனர். விஷயம் வேறொன்றுமில்லை. ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருத கௌரி மகாநாட்டின் பொருட்டு பறந்து பறந்து, வரப் போகிறார். கேட்பானேன், சாரணிகள் முகங்கள் பெருமையால் பூரித்து மலர்ந்திருந்தன. மற்றவர்கள் முகங்களைப் பற்றியோ துளஸீதாஸர் சொன்னது போல, கண்ட கண்களுக்கு நாவில்லை. சொல்லும் நாவிற்கு கண்ணில்லையே என்று தான் சொல்ல முடியும்.

வரவேற்பும், சுயம்சேவகிகள் அணி வகுத்து நின்று மரியாதை செய்ததும் இராஜ குமாரி கரங்குவித்தவண்ணம் அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்ததும். கண் கொள்ளாக் காட்சி. அன்றிரவு மேரியாசியார் கல்லூரியில் சாரணர்கள் அவருக்கு

(Camp-fire) களியாட்டம் ஒன்றும் நடத்தினார்கள். அன்றுதான் பம்பாய் மாஜி ஷெரீப் ஆன ஸ்ரீமதி மித்தன் லாம் என்பவரும் வந்து சேர்ந்தார்.

மகா நாட்டிற்கு இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், இமயமுதல் குமரி ஈறாக என்று சொன்னால் மட்டும் போதாது. ஸிம்லா, டெல்லி, கராச்சி, பம்பாய், பூனா, மகா ராஷ்ட்டிரம்,குஜராத்,பரோடா, ஸிந்து, பால்டான், கத்தியவார், அஸ்ஸாம், பெங்கால், சிட்டகாங், ஆந்திர, கர்நாடக, கேரள நாடுகள், தமிழ் நாட்டின் மற்றப் பகுதிகள் சிங்களம், புதுச்சேரி, முதலிய உள் நாடுகளிலிருந்தும், பிரான்ஸ், இங்கிலாந்து. அமெரிக்கா, சைனா, இந்தோனேஷியா முதலிய வெளி நாடுகளிலிருந்து வந்து கூடினர். இவர்களிற் சிலர் ரயில் மூலமும், சிலர் விமானத்தின் மூலமும் வந்து இறங்கினார்கள். ரயில்களோ பெரும்பாலும் நள்ளிரவிலும், அகாலத்திலுமே வந்தன. இவர்களை அலைந்து திரிந்து காத்திருந்து அழைத்து வந்து ஜாகையில் சேர்க்கும் பொறுப்பை, ஹிந்துஸ்தான் சாரணர்களும் ஸ்ரீமதி பார்வதியும் நிறைவேற்றினார்கள்.

சென்னையின் அழகிய கடற்கரை, உலகத்திலே மிகவும் அழகு வாய்ந்தவைகளுள் இரண்டாவதாகக் கருதப்படும் அந்தக் கடற்கரையிலே, 29-ந் தேதி காலை ஆறு மணி முதலே பெண்கள் சென்னையின் பல பகுதிகளினின்றும் திரள் திரளாக வந்து குவிந்தனர். ஏற்கனவே, விவாகப் பத்திரிகைகளில் முற்காலங்களில் குறிப்பது போல் நாலு நாள் முன்னதாகவே மேரியரசியார் கல்லூரியும் ஹாஸ்டலும், லேடி விலிங்க்டன் கல்லூரி ஹாஸ்டலும், ஐஸ் ஹவுஸ் ஹாஸ்டலும் விருந்தினர்கள், பிரதிநிதிகளும், அதிதிகளுமாக நானூறு பெண் மணிகளால் நிரம்பி விட்டது. இனம் தெரியாத சிலர் முன்னமே வந்தும், தொண்டை நன்னாடு சோறுடைத்து,சான்றோருடைத்து என்ற இந்த நெருக்கடிக் காலத்திலும் நிரூபித்து விட்டனர் சென்னைவாசிகள்.

காலை இளம் வெயிலில் பொன் மெருகிடப் பட்டது போல் காட்சியளித்த லேடி விலிங்க்டன் கல்லூரியின் முன் புறத்திலுள்ள விஸ்தாரமான வெளியில் சுதந்திர இந்தியாவின் அழகிய மூவர்ணக் கொடியை, ஸ்ரீமதி ராம ராவ் அவர்கள் ஏற்றினார். ஸ்வயம் சேவகிகளது இனிய கீத நாதம் அலைஓசையுடன் கலந்து முழங்க கொடியேற்று விழா முடிந்தது. இதன்பின் ஸ்ரீமதி மித்தம் லாம் லேடி விலங்க்டன் கல்லூரியின் முன் மண்டபத்திலேயே திறப்பு விழா வைபவத்தை நடத்தி வைத்தார்.

★ ★ ★

இதென்ன? பந்தலா? மணிமண்டபமா? என்று அதிசயிக்கும் வண்ணம் அமைந்திருந்தது தேனாம்பேட்டை, மைதானத்தின் நடுவே திடீரென்று தோன்றிய கொட்டகை. அணி அணியாய் சாரண சாரணிகள், நின்றும் நடந்தும் உலவியும் பந்தலை அழகு செய்தனர். மிகப் பெரிய அப்பந்தலின் ஒரு கோடியில் விஸ்தாரமான அரங்கம். அதன் மீது தலைவிகள், முற்றும் முக்யமானவர்கள் கூடியிருந்தனர். மணி நான்கு அடித்ததும் பாண்டு வாத்திய கோஷத்துடன் தலைவி அனுசூயா பாய் காளே, லேடி நை சீமாட்டி இந்திய மாதர் சங்கத்தின் தாய் என்று போற்றத் தகுந்த ஸ்ரீமதி மார்கரெட் கஸின்ஸ் அம்மையார் இன்னும் பல முக்யஸ்தர்களும் பந்தலுக்கு அழைத்து வரப்பட்டனர். கோகிலகான எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைப் பிரார்த்தனையுடன் மங்களகரமாக மகாநாடு தொடங்கிற்று.

பிரார்த்தனைக்குப்பின் ஸ்ரீமதி அனுசூயா பாய் காளே அவர்களைத் தலைமை வகிக்கும் படி லேடி ராமராவ் கேட்டுக்கொண்டார். இதை டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அவர்கள் ஆமோதித்தார். பிறகு வெளியூர்களிலுள்ள தலைவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. அதாவது, இராஜாஜி, ஜவஹர்லால் நேரு, ஸரோஜினி நாயுடு, லேடி மௌண்ட் பேட்டன் முதலியவர்கள். பிறகு வரவேற்புக் கமிட்டியின் தலைவரான ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் அவர்கள் ஹிந்தியிலும் தமிழிலும் பேசினார். அவர் பேசியதன் ஸாரம், பெண்கள் தங்களது அணிகலன்களாகிய அன்பு, பொறுமை, இவற்றின் துணை கொண்டு வீட்டறத்தோடு நாட்டறத்தையும் காத்து வீர மகளிராக விளங்க வேண்டுமென்பதுதான் நமது கருத்து.

(அடுத்த இதழில் முடியும்)



# அடுக்களை

### இதையும் செய்து பார்

## புதினா போண்டா

1 ஆழாக்கு துவரம்பருப்பு, ½ ஆழாக்கு கடலைபருப்பு, ½ ஆழாக்கு உளுத்தம் பருப்பு, ¼ ஆழாக்கு பயத்தம் பருப்பு, ½ மூடி தேங்காய் துருவல், திட்டமான உப்பு, பச்சை மிளகாய் சிறிய கட்டாக இருந்தால் 3 கட்டு புதினா இவைகள் வேண்டும். பருப்பு வகைகளை ஊற வைத்து வடைக்கு அறைப்பது போல் உப்பையும் போட்டு அறைத்துக் கொள்ளவும். புதினாவை பொடியாக நறுக்கி மாவில் கலக்கவும். உனக்கு காரம் தேவை எவ்வளவோ அதற்குத் தகுந்தபடி பச்சை மிளகாயையும் நறுக்கி போட்டு தேங்காயையும் துருவி சேர்த்து கலந்து கொள்ளவும். பிறகு பாணலியில் எண்ணெயை வைத்து போண்டா மாதிரி உருட்டி போட்டு நன்றாக சிவந்ததும் எடுத்துவிடு.

“இந்தக் காலத்திலே பக்ஷணங்களைப் பற்றி நினைப்பதே பிசகு, அன்னவிசாரம் அதுவே விசாரம் என்று பாடினார் பட்டினத்தார். அரிசிக்காக இருபத்து நான்கு மணி நேரமும், தியானம், ஸ்மரணம், சங்கீர்த்தனம் எல்லாம் நடைபெற வேண்டியிருக்கிறது. சாமான்களோ ஒரு முறை கிடைத்தது மறு முறை கிடைப்பதில்லை. திடீரென்று கோதுமை கிடைக்கும். பிறகு அது மாயமாய் மறைந்து மக்காச்சோளம் குதிக்கும். அதன் பிறகு வெள்ளையும் சிவப்புமாய் சோளங்கள் முத்தும் பவழமும் போல் வந்து நிற்கும். இருந்தாற் போலிருந்து உளுந்தும், பயறும் கிடைக்கும். மறு வாரம் இவை இரண்டும் கிடைக்காது. விகிதாசாரப் படி 5 ஆழாக்கு துவரம்பருப்பு, 1படி பயற்றம் பருப்பு, மீதியுள்ளது கடலைப் பருப்பு என்பார் கடைக்காரர். இந்த வைபவத்திலே பட்சணமாவது” என்று எரிந்து விழுகிறாள் பாட்டி. ஆனால் என்ன? இதற்காகப் பண்டிகை பருவங்கள் நிற்குமா? வருவோர் போவோரைத்தான் தள்ள முடியுமா? உளுத்தம் பருப்பு மட்டுந்தான் உண்டு. கோதுமை கிடைக்கும் போலிருக்கிறது என்று “ஹேஷ்யம்” எழுதி யிருந்தாய். உள்ளதற்குள் நல்லதாய் ஒரு தித்திப்பும், ஒரு காரமும் எழுதியிருக்கிறேன், செய்து பார்—தீபாவளிக்கு உக்காரை, வெள்ளையப்பம், என்று வழக்கமாமே என்று விமலா கேட்டாள் அதைப் பிறகு எழுதுகிறேன். முதலில் எழுதியிருக்கும் இவைகளைச் செய்துபார். பிறகு நேரமும், பண்டமும் இருந்தால் உக்காரையும், வெள்ளையப்பத்தையும் செய்.

## முந்திரிப் பருப்பு வடை

இதற்குத் தேவையான சாமான்கள் :— பால் ½ படி, முந்திரி பருப்பு 12 பலம், சர்க்கரை = 6 பலம், ஏல அரிசி ½ பலம்.

முதல் முதலில் பாலை ஒரு பாத்திரத்தில் விட்டு முந்திரிப் பருப்பை இதில் ஊரவைத்துக்கொள். 1 மணி நேரம் ஊறிய பிறகு, ஆம வடைக்கு அறைப்பது போல் சற்று நர நர வென்று அறைத்து எடுத்துக்கொள். பிறகு வாணலியில் நெய் அல்லது வனஸ்பதியை 15 பலம் வைத்து அது காய்ந்தவுடன் ஆமவடை தட்டுவது போல அதிக கனமில்லாமல் தட்டி எடுத்து வைத்துக் கொண்டு, ஆமவடையை வாணலியிலிருந்து எடுத்த உடனே அதன்மேல் இந்த சர்கரையைத் தூவ வேண்டியது. சூடாயிருக்கும் பொழுதே தூவுவதால் சர்கரை தானாகவே பாகு போலாகி அதன் மேல் ஒட்டிக் கொள்ளும்.

சாதாரணமாய், வாதுமை, முந்திரி, சாரை, பிஸ்தா முதலிய பருப்பு தினுசுகளைக் கொண்டு செய்யப்படும் பக்ஷணங்களுக்கு மதுரஸமே உத்தமமானது. அதை அனுசரித்தே இந்த வடையையும் நாம் செய்கிறோம். இதில் உப்பு, காரம் சேர்த்தும் செய்யலாம் அதுவும் மிகவும் கர கரப்பாகவும், சாதாரண பருப்புக்கள் சேர்ந்த ஆமவடையை விட உயர்வாகவும்.இருக்கும் அப்படிச் செய்ய விருப்பமுள்ளவர்கள் இதைப் பாலில் ஊறப் போடாமலும் சர்க்கரையைச் சேர்க்காமலும், உப்பு,பச்சைமிளகாய் கொத்துமல்லி, கறிவேப்பிலை, இஞ்சி, இவைகளைச் சேர்த்து சாதாரண ஆமவடையைப் போல் செய்யலாம்.

## உருளைக் கிழங்கு கோளா

வேண்டிய சாமான்கள்:—உருளைக் கிழங்கு = $\frac{1}{2}$ வீ. கோதுமை மா 1 ஆழாக்கு வறுத்த கடலை மா = 1 ஆழாக்கு.

உருளைக் கிழங்கை வேக வைத்து உரித்து ஒரு ஈயம்பூசின பாத்திரத்தில் போட்டு உதிர்த்துக் கொள்ள வேண்டியது. மேற்சொன்ன இரண்டு மாவுகளையும் இதனுடன் கொட்டிக் கொள்ள வேண்டியது.

பச்சை மிளகாய் $\frac{1}{2}$ பலம், இஞ்சி 1 பலம், வெள்ளைப் பூண்டு $1\frac{1}{2}$ பலம், தேங்காய்த் துருவல் 1 பலம், கொத்தமல்லி கொஞ்சம், இவைகளை அம்மியில் வைத்து அறைத்து மேற்படி மாவில் போட வேண்டியது. வெங்காயம் $2\frac{1}{2}$ பலம். இதை துறுவல் போல் நறுக்கி நெய்யில் வதக்கி மேற் சொன்ன மாவில் போடு. வாதுமைப் பருப்பு $2\frac{1}{2}$ பலம். இதை வெந்நீரில் ஊரவைத்து மேல் தோலை உரித்துவிட்டு நீண்ட குச்சிகளைப் போல நறுக்கிக் கொள்ளவும்.

பிறகு லவங்கம் $\frac{1}{4}$ ரூ எடை, ஏலக்காய் $\frac{1}{8}$ ரூ எடை, லவங்கப் பட்டை $\frac{1}{4}$ பலம், வத்தல் மிளகாய் 6, கொத்தமல்லி விரை 2 டீஸ்பூன் மஞ்சள் ஒரு சிறு துண்டு. இவற்றுள் மிளகாய், கொத்தமல்லிவிரை இவ்விரண்டையும் எண்ணெயில் வறுத்துக் கொண்டு பிறகு, மற்ற லவங்கம், ஏலம், லவங்கப் பட்டை முதலியவற்றை குங்குமம் போல் இடித்து மேற்படி மாவில்போடு. பிறகு மெத்தென்று பொடி செய்த உப்பு $1\frac{1}{2}$ பலம், தயிர் 1 ஆழாக்கு இவ்விரண்டையும் மேற்படி சாமானுடன் போட்டு நன்றாய் பிசைந்து வைத்துக் கொண்டு நல்லெண்ணெ அல்லது நெய் 15 பலம் இதை நன்றாய் காயவைத்துக் கொண்டு மேற்படி மாவை எலுமிச்சைங்காய் அளவு சிறு சிறு உருண்டைகளாக்கி வைத்துக்கொண்டு 1 தடவைக்கு 4 அல்லது ஐந்தாகப்போட்டு பொன் போல் வேக வைத்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது. இது மாகாராஷ்டிர தேசத்தாருடைய பக்ஷணம். அவர்கள் பெரும்பாலும், லவங்கப் பட்டை, ஏலம், கிராம்பு இவைகளைச் சேர்த்துதான் செய்வார்கள். இவற்றில் விருப்ப மில்லாதவர்கள் உள்ளிப் பூண்டையும் மற்ற மசாலை சாமான்களையும் நிறுத்தி விட்டு செய்துக் கொள்ளலாம். இடை நேர சிற்றுண்டிக்கு இது மிகவும் ஏற்றது.

## நுரைவடை

நல்ல ஜலம் = $\frac{3}{4}$ படி. இதை ஒரு பாத்திரத்தில் விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி அது கொதி வந்தவுடன், $\frac{1}{4}$ படி உளுத்தம் பருப்பை கொதித்துக் கொண்டிருக்கும் ஜலத்தில் போட்டு ஒரு கொதி வந்தவுடனே அடுப்பைவிட்டு இறக்கி அப்படியே அரை மணி நேரம் வரையில் வைத்திருக்க வேண்டியது. பிறகு ஜலத்தை ஒட்ட வடித்து விட்டு தேவையான அளவு உப்பு, பச்சை மிளகாய் 1 பலம், பச்சைக் கொத்தமல்லி $\frac{1}{2}$ பலம், தேங்காய்த் துருவல் 1 பலம் இவைகளோடு பெருங்காயம் கொஞ்சம், மிளகாய் வற்றல் 4, இவைகளையும் வேக வைத்திருக்கும் பருப்புடன் போட்டு வெண்ணெபோல் நன்றாய் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டியது. பிறகு வெண்ணெ 1 பலம், அரிசிமா $\frac{1}{2}$ ஆழாக்கு, இவைகளையும் மேற்படி மாவுடன் போட்டு நன்றாய் கலந்து பிசைந்து ஒரு பாத்திரத்தின் பேரிலோ, அல்லது வாழை இலையிலோ தட்டலாம். பாத்திரத்தின்மேல் தட்டுவதானால் ஈரத் துணியை அதன்மேல் போட்டு, மேற்படி மொத்தையை சிறு சிறு உருண்டைகளாக்கி அதிக கனமில்லாமல் மெல்லியதாய் தட்டி சாதாரண உளுத்த வடையைத் தட்டுவது போல் பொன்னிறமாய் பொறித்தெடுத்து உபயோகிக்க வேண்டியது. இது என்ன பிரமாதம்? சாதாரண உளுத்தம் வடையைப் போல்தானே என்று நினைக்காதே. ஒரு முறை செய்துபார், பிறகு தெரியும் இதன் ருசி.



# பிரேமலதா

**குகப்ரியை—ஹரிணி**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பிரேமா ஒரு ஆதர்சவாதி மாணவி. தாயற்ற அவளை செல்வமாக வளர்த்து வந்தார் அவளுடைய தந்தை சிவாதரர்.

இலக்கிய வன்மை பெற்று விளங்கிய காந்தி குமாரன் என்னும் சகமாணவன் அவளுடைய மனத்தை முதலில் கவர்ந்தான் என்ற போதிலும் குழந்தை உள்ளம் படைத்த நிசித குமார் என்னும் பிரொபஸரையே மணந்தாள் அவள்.

பிரேமாவின் சித்தி மாலதி ஓர் பாலிய விதவை. பிரேமாவுக்குத் துணையாக அவள் சிவாதரருடைய வீட்டில் வசித்து வந்தாள். இடையே நோய்வாய்ப்பட்டிருந்த சிவாதரருக்கு சிஸ்ருஷை செய்துவந்த அவளிடம் சற்று வித்தியாசமாக பேசி நடந்துகொண்டார் அவர். இதனுல் மனம் வெதும்பிய மாலதி தற்செயலாக அங்கு வந்த தன் சகோதரனுடன் ஊருக்குச் செல்கிருள்.

தனியளாக விடப்பட்ட பிரேமாவும் நிசித குமாரை மணந்து அவனேடு தனிக் குடித்தனம் செய்கிருள். நிசிதனேடு கூடிய வாழ்க்கை அவளுடைய உள்ளத் தாபத்தை தீர்க்கக் கூடியதாக இல்லே.

அத்தியாயம் 5.

மாரிக்காலத்தின் முற்பகுதி. ரோஜாவின் மங்கிய இலைகளில் நிறைந்திருந்த புழுதியை மழைத் தூற்றல்கள் அபிஷேகம் செய்து கொண்டிருந்தன. நிசித குமார பாபுவின் காலேஜில் அன்று ஒரு 'மீட்டிங்.' ஆகவே அவன் இன்னும் வீட்டிற்கு வரவில்லை. பிரேமலதா தன்னுடைய அறையில் ஜன்னலருகே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் மனம் வெளியே காணப்படும் இயற்கையின் அழகில் ஈடுபட்டிருந்தது. வெய்யிலின் கடுமையான உஷ்ணத்தினுல் வறண்டு, உலர்ந்து கிடந்த பூமியில் இந்த மழைத் துளிகள் விழுந்ததும் எவ்வளவு சீக்கிரம் மறைந்து விடுகின்றன. தாகம் அடங்கவில்லேபோலும்! ஆம். சுவைக்க வேணுமென்று ஏற்படும் ஆசை—தாகம் திருப்தியடைவதற்கு மாருக அதிகமாகிக் கொண்டேதான் போகிறது. வாழ்க்கையிலும் அப்படித்தானே? நமக்கு கிடைத்ததை வைத்துக் கொண்டு திருப்தியடைய முடிவதில்லே. கிடைக்காத பொருளின் மேல்தான் ஆசை மிகுதியாகிறது. ஆசை என்கிற அந்தக் கானல் நீரை நம்பித்தான் ஓடி ஓடி உலகம் ஏமாந்து போகிறது. மனிதனுடைய உள்ளம் அடைய முடியாததைப் பற்றி நினைப்பதில் தான் ஒரு புதிய இன்ப உணர்ச்சியை அனுபவிக்கிறது போல் தோன்றுகிறது......"

பிரேமா சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவளுடைய எண்ண அலைகள் ஒன்றன்பின் ஒன்ருக மோதி எழுந்தன. அவள் அந்த வீட்டிற்கு

வந்து ஒரு வருஷம்கூட ஆகவில்லை. ஆனால் இதற்குள்ளாகவே அவனுடைய மனதை அவள் நன்றாக அறிந்து விட்டாள். நிசிதன் அவளை தன் இதய ராணியாகவே நினைத்தான். அது மட்டுமா? தன்னையே அவளிடம் ஒப்படைத்து விட்டான். ஒரு நாள் கூட அவளைப் பிரிந்திருக்க அவனால் முடியவில்லை. ஒரு சமயம் அவள் அத்தையின் வீட்டிற்குப் போயிருந்தாள். அப்பொழுது அவனுக்கு உலகமே இருண்டு விட்டதுபோல் தோன்றிற்று. அவள் வரும் வரை காத்திருக்க முடியவில்லை. மறு நாளே போய் அழைத்து வந்து விட்டான். இருந்தாலும், பிரேமாவுக்கு இன்பமும், ஆசையும் நிறைந்த இந்த வாழ்க்கையிலும் கூட ஏதோ ஒரு வித குறை மறைந்து கிடப்பது போலத் தோன்றிக் கொண்டே இருந்தது.

அன்று காலையில் அவள் தோழி நீரா வந்திருந்தாள். சமீபத்தில்தான் அவளுக்கு விவாகமாயிற்று. புக்ககத்திலிருந்து இப்பொழுது தான் முதன் முறையாகப் பிறந்தகம் வந்திருந்தாள். அவள் வாய் ஓயாமல் தன் கணவரின் பெருமையைப் பற்றியேதான் சொல்லிக் கொண்டிருந்தது.

தன் கணவன் தன்னை மிக்க அன்புடன் பாராட்டுகிறான் என்பது பிரேமாவுக்கும் தெரியும். இதைக் காட்டிலும் அதிகமாக வேறு எந்தப் பெண்ணும் அடைய முடியாது என்று அவள் நினைத்திருந்தாள். ஆனால் இன்று அவள் பெண்கள், மனைவி, என்று நினைப்பதை விட காதலி என்று நினைத்துக் கொள்ளுவதில் தான் அதிக ஆனந்தமடைகிறார்கள் என்று நினைத்தாள். அவள் நிசித பாபுவின் காதலியாக இருக்க விரும்பினாள். ஆனால் அவன் அவள் காதலைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு பொழுதும் அவன் அன்புப் பெருக்கினால் அவளை வாரியணைத்ததில்லை. அவனுடைய பேச்சில் ஒரு சாந்தமும், அடக்கமும் தான் காணப்பட்டதே தவிர உற்சாகமோ, ஒரு இன்ப வெறியோ காணப்படவில்லை. அவன் தன் படிப்பைத்தான் முக்கியமாக நினைக்கிறானே! அல்லது தன் உணர்ச்சிகளை அடக்கி, மன நிலையை வெளிக் காட்டாமல் இருக்க எண்ணுகிறானே!.........என்றெல்லாம் ஓடின அவள் எண்ணங்கள்.

அன்றொரு நாள் நடந்த நிகழ்ச்சி அவளுக்கு நினைவுக்கு வந்தது. அவள் சினிமாவுக்கு அழைத்துச் செல்லும்படி அவனை வறுபுறுத்தினாள். அவனுக்கோ இவைகளெல்லாம் பிடிக்காது. 'காலத்தை வீணாக்கும் தொழில்கள் இவைகள்'' என்பான். ஆனாலும் அவள் மனதிற்கு குறை உண்டாகக் கூடாதென்று சினிமா செல்ல சம்மதித்தான். பிரேமா சந்தோஷத்தினால் துள்ளினாள். வெகு நேரம் தன்னை அலங்கரித்துக் கொள்வதிலேயே ஈடுபட்டிருந்தாள்.

அழகிய உயர்ந்த சேலையையுடுத்து, மிகுந்த ஒய்யாரமாக எதிரில் வந்து நின்றாள். அவன் அவளைப் பார்த்து, அவள் அழகைக் கொண்டாடிப் புகழ்வான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்தபடி ஒன்றையும் காணோம். ஏதோ ஒரு புத்தகத்தைப் படிப்பதில் ஆழ்ந்திருந்தான். அவளைக் கண்டதும், "என்ன பிரேமா! புறப்படலாமா? மணியாகி விட்டதா?'' என்று மிகச் சாவதானமாகக் கேட்டான். அவளுக்கு பதில் பேசவே முடியவில்லை. பிறகு மெதுவாக "நீங்கள் தயாராக வில்லையே?'' என்றாள்.

"தயாராவதற்கு என்ன இருக்கிறது? இப்படியே புறப்படலாமே'' என்று எழுந்தான்.

" அதிருக்கட்டும், இந்தப் புடவை நன்றாயிருக்கிறதா பாருங்கள்? என்று கேட்டு விட்டாள்.

அதைக் கேட்டதும் நிசிதன் அவளை ஏறிட்டுப்பார்த்து, "ஓகோ! இதுப் புது புடைவையா, நன்றாயிருக்கிறது'' என்றான்.

"ஆமாம். இப்பொழுதுதான் வாங்கினேன். நீங்கள்தான் பார்க்கவேயில்லை'' என்றாள். அவன் பதிலுக்கு மெதுவாக புன்னகை செய்தான். பிரேமா முகம் சுண்டினாள். அவள் எதைக் கேட்க விரும்பினாளோ அதை அவன் சொல்லவில்லை.

உலகத்தில் ஒவ்வொரு பெண்ணும் தன் அழகைப் பிறர் பார்த்துப் புகழ்ந்து போற்ற வேண்டுமென ஆசைப் படுவது சகஜம். அதுவும் அந்த புகழ்ச்சி கணவனிடமிருந்து வந்தால்......அவனே தன்னை கொண்டாடாவிட்டால்......என்று எண்ணமிட்டவளாய் நெடு மூச்செறிந்தாள்.

எங்கேயாவது வெளியே போவோமென்று தோன்றியது. வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். கருமுகிற் கூட்டங்கள் கலைந்து, வெண்மேகங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக சிதறி ஓடிக் கொண்டிருந்தன. இழந்துபோன ஒரு பொருளைத் தேடி அடையும் பொருட்டுத் தான் அவைகளே அப்படி வேகமாக ஓடுகின்றனவோ? வாழ்க்கையிலும் நாம் இப்படியே தான் எதையோ தேடித் தேடி அலைந்து கொண்டிருக்கிறோமா?'' என்று எண்ணியவளாக எழுந்து உள்ளே போனாள்.

சமையற்காரியைக் கூப்பிட்டு, "நான் சற்று வெளியே போய் வருகிறேன். அவர் வந்து விட்டால் கவனித்துக்கொள்" என்று சொல்லியவளாக வீதியிலிறங்கினள்.

தெரு விளக்குகள் ஏற்றப் பட்டிருந்தன. நகரத்தின் இந்தப் பகுதியில் அதிகமான ஜன நடமாட்டம் இல்லை. பெரும்பாலும் இந்தப் பகுதியில் பணக்காரர்களே வசித்துவந்தார்கள். இவளுக்குச் சற்று முன்னல் ஒரு தம்பதிகள் மெல்ல நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சிரிப்பின் ஒலி அவள் இதயத்தில் எதிரொலித்தது.

"இவர்கள் எவ்வளவு ஆனந்தமாயிருக்கிருர்கள். இம்மாதிரியாக நாமும்......இதென்ன! இப்படியே ஒவ்வொரு சமயமும் யோசித்துக் கொண்டேயிருந்தால்?—தன் வாழ்க்கையில் இல்லாத குறைகளைப் புகுத்தி, அதிருப்திக்கு இடம் கொடுத்தால்?..." என்று தன் மனதைக் கண்டித்தவளாய் இடது பக்கம் திரும்பினள். "ஆம் உண்மை தான். வாழ்க்கைப் பாதையில் அவர்கள் வழி வேறுதான். எங்கள் வழி வேறுதான்!" என்று நினைத்தாள்.

அவள் தன்னை மறந்தவளாய் வெகு தூரம் சென்று விட்டாள். அருகில் சைகிலின் மணியோசைக் கேட்டுத் திரும்பினள். சட்டென்று சைகிலில் வந்த ஆள் இறங்கி "என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு?" என்று கேட்டதும் தான் அவனை அவளுக்கு ஞாபகம் வந்தது.

ஆம்! அதே காந்தி குமாரன்தான் ஒருகாலத்தில் தான் அவனை காதலிப்பதாகவும், தன்னை அறியாமலே அவனை நோக்கிச் செல்வதாகவும் அவளுக்குத் தோன்றியதுண்டு. ஆனல் வெளியிட்டுச் சொல்வதற்கு வேண்டிய துணிவு இல்லை. அவனும் அவளுடன் இதைப்பற்றிப் பேச முயலவில்லை. அதே சமயத்தில்தான் நிசிதகுமார பாபு அவள் தகப்பனரிடம் ஏதோ வேலையாக வந்தான். அவன் அப்பொழுது தான் 'காலேஜில்' புரொபசராகச் சேர்ந்திருந்தான்.

என்ன காரணத்தினலோ அன்று முதன் முதலாகச் சந்தித்தபொழுதே அவள் மனம் அவனிடம் சென்றது. சாதுவான நிசித பாபுவை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. காந்தி குமாரனை மெல்ல மெல்ல மறக்கத் தொடங்கினள். இப்பொழுது அவள் நிசிதனின் மனைவி. விவாகமான பிறகு அவள் இன்றுதான் முதன் முறையாகக் காந்தி குமாரனைச் சந்தித்தாள்.

"ஏன்? தெரியாமலென்ன? பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது." "ஆமாம், ரொம்ப நாளாகி விட்டது. மேலும் இந்த நாட்கள் எனக்கு மிக்க நீண்டதாக......"என்று சற்றே நிறுத்தினன் காந்திகுமாரன். பிரேமா பேசவேயில்லை. 'நீங்கள் எங்கே போகிறீர்கள்? போகலாமா?" என்ருன் மறுபடியும், இருவரும் மெதுவாக பேசிக் கொண்டே நடந்தனர்.

போகும் வழியில் காந்தி குமாரன் தான் காலேஜை விட்ட பிறகு தேச சேவையில் ஈடுபட்டதாகவும், சென்ற வருஷம் சத்தியாக்கிரகத்தின்பொழுது ஆறுமாதம் சிறை சென்றதாகவும் சொன்னன். இப்பொழுது தான் நிர்மாண வேலைகளில் ஈடுபட விரும்புவதாகவும் சொன்னன்.

வெகு நேரம் பேச்சு வளர்ந்தது. அவன் பேசும்போது ஏதோ ஒரு விஷயத்தை மறைத்துப் பேசுவதாக மட்டும் அவளுக்குத் தோன்றிற்று.

"இவன் அந்த பழய காந்தி குமாரனல்ல. எவ்வளவு மாறி விட்டான்! அனுபவத்தின் சின்னங்கள் அவன் முகத்தில் தெளிவாய்த் தெரிகின்றதே!" என்று நினைத்தாள். திரும்பவும் அவர்கள் பங்களாவின் அருகில் வந்ததும் அவன் கை குவித்து "நமஸ்காரம்! நான் வரட்டுமா? இன்று உங்களைப் பார்த்தது மிகவும் சந்தோஷம்." என்ருன்.

அவனை ஒரு க்ஷணம் உற்று நோக்கிய பிரேமலதா "சரி! போய் வாருங்கள், மறுபடி உங்களை எப்பொழுது பார்க்கலாம்?" என்ருள். "வருவதைப் பற்றி என்ன? எப்பொழுதாவது வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே சைகிலில் ஏறினன். அவளும் கரங்குவித்து 'நமஸ்தே' என்ருள்.

அவன் சென்ற திசையையே பாத்த வண்ணம் வெகுநேரம் நின்று கொண்டிருந்தாள். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சுடன் உள்ளே சென்ருள்.

## அத்தியாயம் 6.

நிசித குமாரன் காலேஜிலிருந்து வந்த போது வீட்டில் முன்பக்கம் ஒருவருமே இல்லை. "பிரேமா! பிரேம்!" என்று உரத்த குரலில் கூப்பிட்டான். சப்தத்தைக் கேட்டு சமையற்காரி வெளியே வந்தாள். எப்பொழுதும் வந்த உடனே சிரித்த முகத்துடன் வரவேற்கும் பிரேமா ஏன் இன்று வரவில்லை என்று ஆச்சர்யப் பட்டான்.

சமயற்காரியைக் கண்டதும், "ஓ! நீதான? பிரேமா எங்கே போனள்?" என்று கேட்டான்.

"அவர் வெளியே உலாவி விட்டு வருதாகச் சொன்னார் நீங்கள் வந்தால்......" என்பதற்குள். "தன் வேலையை உன்னிடம் ஒப்புவித்து விட்டுப் போனாளா ?" என்று சொல்லியவனாய் சிரித்துக் கொண்டான்.

அவள் வெட்கத்தினால் தலை குனிந்து நின்றாள். பிறகு மெதுவாக, "சாப்பாடு இங்கேயே கொண்டு வரட்டுமா, அல்லது......" என்றாள்.

நிசிதபாபு எப்பொழுதுமே சமையலறைக்குச் சென்று சாப்பிடுவதில்லை. ஆனால் இன்று என்னமோ அவள் கேட்டவுடன், "அதற்கென்ன? அங்கேயே வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டான். அவளும் இந்த பதிலைத்தான் எதிர்பார்த்தாள். புன்சிரிப்புடன் "சரி, இலையைப் போடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே போனாள். அவளும் அவனைப் பின்தொடர்ந்தாள். அவன் சாப்பிட்டு முடியும் வரை அவனையே வைத்தகண் வாங்காமல் பார்த்து நின்றாள் அவள்.

பிரேமாவுக்கு அந்த சமையற்காரியிடம் அசாத்ய நம்பிக்கை. ஆனாலும் நிசிதனுடைய எல்லா காரியங்களையும் தானே தான் கவத்துக் கொள்ளுவாள். சமையற்காரிக்கோ அவனுக்குச் செய்யும் சிசுருஷைகளைத் தானே செய்ய வேண்டுமென்று வெகுநாளாகவே ஆசையுண்டு. பிரேமா அதற்கு இடம் கொடுப்பதில்லை. எதிர்பாராத இந்த சந்தர்ப்பம் அவளுக்கு ஆனந்தத்தையுண்டு பண்ணியது.

சாப்பிட்டுக் கொண்டேயிருந்த நிசிதன் திடீரென்று—"உன் புருஷன் எப்பொழுது இறந்து போனான் ?" என்று கேட்டான். பழைய நினைவுகள் அவள் மனதில் எழுந்தன. எதை மறந்து வாழ முயன்றாளோ அதை நினைவு படுத்துவது போலிருந்தது இந்தக் கேள்வி. சற்று நிதானித்துப் பிறகு--"இரண்டு வருஷங்களாகிறது" என்றாள்.

"இரண்டு வருஷமா ?"......என்று அவன் கேட்டது, இரண்டு வருஷமாகக் கணவனின்றி எப்படிக் காலந் தள்ளுகிறாய் என்று கேட்பது போலிருதந்து.

"ஏன் நீ மறுபடியும் விவாகம் செய்துக் கொள்ளவில்லை ?" என்று கேட்டான். அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே விளங்கவில்லை.

பிறகு அவனே தன்னைத் தானே கேட்டுக் கொள்பவன் போல "ஓகோ! நீங்கள் பிராமணர்களல்லவா ? உங்கள் ஜாதியில் புனர்விவாகம் இடையாதல்லாவா ?" என்றான்.

சாப்பிட்ட பிறகு அவன் தன் அறைக்குட் சென்று படுத்துக் கொண்டான். ஆனால் சமையற்காரியோ சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள். அவள் மனதில் விசித்திரமான எண்ணங்கள் எழுந்தன. அவள் சமையலறையிலேயேதான் உட்கார்ந்திருந்தாள். ஆனால் அவள் கண்களின் முன்வேறு ஒருஅற்புதமான கனவுலகம் தோன்றிக் கொண்டிருந்தது. பூனை வந்து பாலைக் குடித்தது. அதைத் துரத்த வேணுமென்று கூட அவனுக்குத் தோன்றவில்லை. அவன் அப்படி உட்கார்ந்திருப்பதைக் கண்டு வேலைக்காரி ஆச்சர்ய மடைந்தாள். எதிரிலுள்ள எச்சிற் தட்டைக் கண்டு, "இங்கே யார் சாப்பிட்டிருப்பார்கள், எஜமானியம்மாவாகத் தானிருக்கும்" என்று எண்ணியவளாய் தாம்பாளத்தைக் கழுவ எடுத்துக் கொண்டு போனாள்.

"என்ன! அவர் சாப்பிட்டாயிற்றா?" என்ற குரல் கேட்ட பிறகுதான் திடுக்கிட்டு எழுந்து நின்றாள். வாசற்படியருகில் நின்ற பிரேமாவைப் பார்த்து தன்னை சமாளித்துக் கொண்டாள். "ஆம், அம்மா!" என்றாள் மெதுவாக.

பிரேமா நிசிதபாபுவின் அறைக்குள் நுழைந்தபோது அவன் புஸ்தக பீரோவில் எதையோ தேடிக் கொண்டிருந்தான். அவள் வந்ததை அவன் பார்க்கவில்லை. அவள் மெல்ல அடிமேலடிவைத்து நடந்து பின்புறமாகச் சென்று அவன் தோள்களில் கையை வைத்தாள். நிசிதன் மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்துச் சிரித்தான். கணவனின் நகை முகம் அவளுக்குப் புதுமையாக இருந்தது, "பிரேமா! பெண்கள் ஏன் புனர்விவாகம் செய்துக் கொள்ளக் கூடாது ?" என்ற அவன் அப்பொழுது கேட்டதும் அவளை அதிசயத்திலாழ்த்தியது.

அவள் சிரித்துக்கொண்டே அவனருகில் உட்கார்ந்து கொண்டாள். அவன் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டதும் அவள் மிக்க அமர்த்தலாக "செய்துக்கொள்ள முடியாது" என்றாள்.

"ஏன் முடியாது ? யார் தடுப்பார்கள் ?"

"யாரும் தடுப்பதில்லை. ஆனால் பெண்களே விரும்புவதில்லை. இந்த உறவு—பந்தம் இதயத்தை ஒட்டியது. சமூகப் பழக்கத்தை ஒட்டியதல்ல. ஒரு முறை ஒருவனை மனப்பூர்வமாக காதலித்து, அவனுடன் கலந்து வாழ்ந்து, கஷ்ட சுகத்திற்கு ஈடு கொடுத்து வாழ்க்கை நடத்திய பிறகு, இன்னொருவனுடன் வாழ, அவனை உண்மையாக நேசிக்க முடியுமா ? அநேகமாக பெண்கள் உண்மையான உள்ளன்பு உடையவர்கள். அவர்களுக்கு ஒரு முறைதான் காதலிக்கத் தெரியும். தின

மும் ஒருவனுடன் உண்மையன்புடன் உறவாட முடியாது'' என்றாள்.

ஸிசிதன் யோசனையிலாழ்ந்தான். "ஆனால் நான் இறந்து விட்டால் பிரேமா மறு விவாகம் செய்துகொள்ள மாட்டாளா? அவளால் தனிமையாகவே வாழ்க்கை நடத்த முடியுமா? எப்படி முடியும்? புருஷனில்லாமல் எப்படி காலங்கழிக்க முடியும்? ஒருக்கால் அவள் நம்மை காதலிக்காமலிருந்தால் இன்னொரு விவாகம் செய்துகொள்ள முடியலாம் அல்லவா? அப்படியானால் இனிமேல் நாம் அவளிடமிருந்து சற்று விலகியே யிருக்க வேண்டும். அதனால் அவளுக்கு நம்மிடம் அன்பு குறையலாம்'' என்றெல்லாம் குருட்டுத்தனமான அசட்டு யோசனையி லாழ்ந்திருந்தான்.

"என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று கேட்ட பிரேமாவை உற்று நோக்கியவனாய், "நான் இனிமேல் இங்கே யிருக்கப்போவதில்லை. என் புஸ்தக அலமாரியை வாசற்புறத்து அறையில் வைத்துவிடு'' என்றான்.

அவள் ஆச்சர்யத்தினால் மலர்ந்த கண்களுடன், "ஏன், என்ன சங்கதி? கல்யாணமான நாள் முதல் நாமிருவரும் ஒரே அறையில்தானே இருக்கிறோம். இப்பொழுது என் மாற்ற வேண்டும்?'' என்றாள்.

அவன் கலகலவென்று சிரித்துக்கொண்டே, "நீதான் முன்பே இந்த அறையை என் இருட்டு குகை என்றாயே. அதனால்தான் இப்பொழுது வெளியே கிளம்பலாமென நினைக்கிறேன்'' என்றான்.

"என்ன! குகையிலிருந்து வெளியே போகிறீரா? அல்லது என் கையிலிருந்தே தப்பிப் போகப் பார்க்கிறீரா?'' என்று ஒரு கணம் அவள் மனம் குழம்பியது. "உங்களுக்கு இந்த அறை பிடிக்காவிட்டால் இன்னொரு அறைக்குப் போய் விடுவோமே!'' என்றாள்.

"இல்லை, இல்லை. நான் தீர்மானித்து விட்டேன். வெளி அறைதான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீ இதிலேயே இருக்கலாம்.''

அவள் பதிலே பேசவில்லை. அவனது இந்த மாறுதல் அவளுக்கு வேதனையைக் கொடுத்தது.

மறுநாள் அவன் காலேஜுக்குப் போன பிறகு அவன் சாமான்களை வாசற்புறத்து அறையில் வைக்கச் செய்தாள். கூடவே அவன் கட்டிலையும் அங்கேயே போடச்செய்தாள். சாயங்காலம் அவன் வந்தபோது தன் சாமான்கள் வாசற்புறத்து அறையில் ஒழுங்காக வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு சந்தோஷமடைந்தான். உள்ளே ஹாலுக்குள் நுழைந்ததும் பிரேமா முகம் சுண்டி விசனமே வடிவாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, "என்ன பிரேமா! என்ன யோசனை? நீ உண்மையிலேயே ரொம்ப கெட்டிக்காரி. இப்பொழுது எல்லாமே சரியாகிவிட்டது. நான் ஒரு புதிய புஸ்தகம் எழுதப் போகிறேன். அதற்கு இந்த அறை ரொம்பவும் சரியானது.''

எங்கேயோ நினைவாய் "ஆம்'' என்றாள் அவள். சற்று நேரம் சென்றுதான் அவனுக்கு 'டீ' கொடுக்கவேண்டு மென்பது அவளுக்கு நினைவு வந்தது.

'டீ' சாப்பிடும்போது அவன் அவளுடன் பேசவே யில்லை. பிறகு அவன் தன்னுடைய புதிய அறைக்குள் புகுந்தான். அவள் அப்படியே வெறும் வெளியைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

(தொடரும்)

# பெண்

ஞானம்பாள்

பெண்ணென்ற பேயினின்றும், எம்மைக் காத்தருளும் என உள்ளும் புறமும் ஒடுங்கி இறைஞ்சும் பக்தர்களையும், பெண்மையைக் கண்டு வணங்கிப் போற்றிய புலவர் பெருமக்களையும் தமிழ்நாடு கண்டுள்ளது. பழந்தமிழ் நாட்டின் "வாழ்தலன்ன காதல்" என்று கொண்டு தமது வாழ்க்கையை இயற்கையின் வழியிலே இயற்கைக்குப் பொருந்திய முறையில் நடத்தி வந்தார்கள். வீண் சமூகக் கட்டுப்பாடும் அந்த கட்டுப்பாடுகளின் காரணத்தால் ஏற்படும் விபரீதங்களையும் அவர்கள் அறியவில்லை. இயற்கையில் மனித வர்க்கத்தில் இருப்பதைப் போல் வலிமை யுடையவை, வலிமை யற்றவற்றைப் புசிக்கின்றன என்பது உண்மையானாலும் வேறு எந்த வகையிலும் உயர்வு, தாழ்வென்பதில்லை. அங்கே கோள் குறளையு மில்லை. ஒன்றையொன்று சம்பிரதாய மென்னும் தராசிலே நிறுத்து இது கெட்டது என்று ஒதுக்கும் பழக்கமு மில்லை.

பழந் தமிழர்கள் நாகரிகத்தின் உயரிய நிலையில் இருந்தார்கள் என்பது யாவரும் ஒத்துக் கொள்ளுவதாகும். இன்னும் சில பழக்கங்கள் உயரிய நாகரிகத்தின் சின்னங்கள் என்று கூறுகிறார்கள்.

பழங்காலத்தே இருந்த பழக்கங்களையும் இன்று நாம் நாகரிகம் எனக் கருதும் பழக்கங்களாகி விட்டன. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன்று நம்மிடையே காணப்படுவன நாகரிக சின்னங்கள்தானா என்ற சந்தேகமும் உறுதிப் படுகிறது. ஒரு சிறு உதாரணம் கூறுவோம். மலைகளின் நடுவே, இனிய வண்டுகள் மொய்க்கும் குறிஞ்சி மலர்களிடையே ஒரு ஆண் மகனும், பெண்ணும் சந்தித்து காதல் கொண்டார்கள். காதலின் முடிவான இன்பத்தையும் அடைந்தனர். தோழி அந்தப் பெண்ணைப் பார்த்து "நீ அவனைக் கணவனாக மணந்து கொண்டாயே சடங்குகளில்லாமல். ஊரார் இந்த திருமணத்தை பழிப்பார்களே" என்று பயந்தாள். அதற்கு அந்த பெண் "பழியா? எதற்காக? காதலராகிய நாங்கள் இருவரும் மனதால் அறிந்து செய்துகொண்ட திருமணம் இது என்று எங்கள் இருவருடைய உள்ளங்களும் சாக்ஷி கூறும்போது இதில் பழிக்கு வேறு இடமிருக்கிறதா?" என்று உண்மையில் பிறக்கும் இறுமாப்போடு பதிலளித்தாள். "நாமறி உருவில்" என்பதுதான் வாழ்க்கையின் சூட்சும சக்தி. இந்த சக்தியில் நம்பிக்கை இழந்து, ஊழல்கள் நுழைந்ததால்தான் பலவித விலங்குகள் ஏற்பட்டன. இன்றைய மணவாழ்க்கையில் இந்த சக்தி எவ்வளவுமட்டும் உள்ளது என்பதைக் கூறவும் இயலவில்லை. ஏனென்றால் இயற்கையின் வழியே செல்லுவதற்கு வாய்ப்பு எங்கே? செல்லத் துணிந்தாலும் வாழையடி வாழையாக வரும் சந்தேக மென்னும் விஷம் கடுகளவாவது நமது மனதைக் கலக்குகிறது. இந்த சந்தேகத்தின் முற்றிய நிலையில்தான் பெண்ணினின்றும் தம்மைக் காப்பாற்றவேண்டு மென்று ஆடவர்கள் வேண்டினார்கள். பெண்கள் 'அப்பா ஏழேழு ஜென்ம மெடுத்தாலும் பெண் ஜென்ம மாகாது' என்று கலங்கினார்கள்.

சென்ற நூற்றாண்டிலிருந்த கலக்கம் இந்த நூற்றாண்டிலில்லை. ஐம்பது வருஷங்களுக்கு முன்னிருந்த சோகம் இன்று இல்லை.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல—
மாதவம் செய்திட மேண்டுமம்மா"

என்று தற்காலப் புலவர் ஒருவர் புளகாங்கித மடைகிறார். பெண்கள் கேட்டின் வித்து அல்ல; பெருமையின் காரணமென்பதை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சகாப்தத்திலும் அறியலாம். உதாரணமாக தமிழ்நாட்டுச் சரித்திரத்தை எடுத்துக் கொள்ளுவோம். கண்ணகி, மன்னன் மறந்த நீதியை நிலை நாட்டினாள். மங்கையர்க்கரசி தனது அரசியல் வன்மையால் இந்து மதத்தை நிலைநிறுத்தினாள்- திலகவதியம்மை தனது உறுதியால் தம்பியின் மனதை மாற்றி 'பூமாலை வாடும், பொன் மாலைக்கு மணம் இல்லை' யென்று, "பாமாலை வைத்தீசன்" பாதம் பணிவகைச் செய்தாள். இன்னும் கணக்கற்றப் பெண்மணிகள். இவர்கள் செய்த சேவைகள் பல.

நம் நாட்டில் இடைப் பகுதியில் பெண் அடைந்த இழி நிலைக்குப் பல காரணங்கள் இருந்தன. சில வழக்கங்களும், கட்டுப்பாடுகளும் பெண்களைக் காப்பதற்காக ஏற்பட்டவை. ஆனால் கால அளவில் அவற்றின் உண்மைப் பொருள் மறைந்து போய் வெறும் நிபந்தனைகள் மட்டும் நின்றன. இந்த நிபந்தனைகளும் இப்போது சிறுகச் சிறுக குறைந்து மறைய ஆரம்பித்துள்ளன. பழங்காலத்து இயற்கைக்கு ஒத்த வாழ்க்கை நிலையை அடைவோமென்று நம்ப ஏதுவாகிறது.

இந்த மாறுதலுக்குக் காரணம் கல்வியே என்று பலரும் கூறுவர். அந்த கூற்று எதுவரைஉண்மை என்பதை நிர்ணயிக்க முடியாது. கல்வியென்றால் இன்று நாம் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் பெறும் கல்வி, நமது வாழ்க்கையை மேன்மைப் படுத்தும் முறையில் அமைந்துள்ளதா என்பது ஒரு கேள்வி. ஒரு பெண் தனது கடமையை உணர்ந்து, வாழ்க்கையிலே தானும், பிறரும் இன்பமடையும் முறையில் நடந்து

கொள்வதற்கு புத்தகக் கல்வி, இன்றியமையாததா என்பது மற்றொரு கேள்வி. பொதுவாகக் கூறும்போது கல்வியினால் பெரும்பயன் ஏற்படுகிறதென்றே கூறவேண்டும். உயர்தரக் கல்வி அவசியமில்லை என்று கூறினாலும் எண்ணும், எழுத்தும் அறிவதற்கு அவசியமான அடிப்படைக் கல்வி எல்லோருக்கும் வேண்டியதே. உலகத்தில் நாளுக்கு நாள் ஏற்படும் முன்னேற்றங்களையும் உலகச் செய்திகளையும் அறிவது மக்களது கடனே. உலகத்தோடு தொடர்பின்றி நடத்தும் தனிப்பட்ட வாழ்க்கையால் நாகரிகத்தில் முன்னேற முடியாது. பெண்களுள் ஒருசிலர் உயர்தரக் கல்வியைப் பெற்று, ஆண்களுக்கு நிகராகப் பல துறைகளிலும் பணி செய்யலாம். எனினும் பெரும்பாலோர் இயற்கை தமக்குக் குறித்துள்ளதான இல்லற வாழ்க்கையையே மேற்கொள்ளுகின்றனர். இத்தகையோருக்கு எண்ணும் எழுத்தும் எதற்கென்ற ஐயமெழக்கூடும். தத்தமது சிறுசிறு நிலைகளிலிருந்து தமக்குரிய பணிகளைச் சரிவரச் செய்வதற்கு ஓரளவு கல்வி அத்யாவசியம். வீட்டுச் சுகாதாரமும், சுற்றுநிலை சுகாதாரத்தை அறியவும் தக்க வாழ்க்கையை நடத்துவதற்குரிய சாஸ்திரிய முறைகளை அனுஷ்டிப்பதற்கும், உலகத்தோடு ஒட்ட ஒழுகி, இனிய சுபாவத்தைப் பெருக்குவதற்கும் கல்வியறிவே ஏற்ற சாதனமாகும்.

ஒவ்வொரு வீட்டு யஜமானியும் ஒரு சாந்தீபிதான், மீராதான், மங்கையர்க்கரசிதான். தனது அன்றாட வாழ்க்கையிலே எவ்வளவு இன்னல்களோடும், மனத்தைக் கலக்கும் துன்பங்களோடு எஜமானி போராடுகிறாள். பணமில்லாக் கஷ்டம், வறுமையால் வாடும் கணவனது கோபம், தன்னை அறிந்து கொள்ளமாட்டாத சுற்றத்தாரின் சுடு சொற்கள். இன்னும் என்னென்ன தொல்லைகளோ. தனது கடமையையும், இல்லத்தையுமன்றி வேறொரு பற்றுமற்ற பற்றற்ற நிலை, சங்கடமான சந்தர்ப்பங்களில் கச்சிதமாக நடந்துகொள்ளும் விஷயம் இவைகளெல்லாம் பள்ளிக்கூடத்தில் போதிக்கப் படுகின்றனவா? இல்லையே. இவை நமக்கு வம்ச பரம்பரையாக வந்த ஸ்தாவர சொத்து. இதை நம்மிடமிருந்து எந்த நாகரிக வெள்ளமும் கவர்ந்து செல்ல முடியாது.

என் கணவன் ஆபீசுக்கு யஜமானன், ஆனால் நான் வீட்டுக்கு யஜமானி என்பதை உணர்ந்து, தனது பதவியைப் பக்குவமான முறையில் காப்பாற்றிக் கொள்ளுவதே சிறந்த சமத்துவம். இந்த உண்மையைத்தான் தமிழர்கள் 'இல்லாள்' என்ற பதத்தில் அமைத்துக் காட்டினார்கள். இல்லாள் என்றால் இல்லத்தை ஆட்சி செய்பவள் அல்லது வீட்டு யஜமானி என்பது பொருள். அதே இல்லான் என்றால் வறுமையுடையவன் அல்லது பொருளில்லாதவன் என்று பொருள் படும்.

உரிமை என்றால் உரிமைக்குரிய பொறுப்புகள் இருப்பது சகஜம்தானே? பொறுமை, அன்பும், கூரிய அறிவும் இருக்குமானால் இந்த பொறுப்புகள் இன்பத் தொல்லைகளாக மாறிவிடுகின்றன. வேலைக்காரியிடமிருந்து எல்லோரிடமும் வீட்டு எஜமானிக்கு பொறுமையே வேண்டும். இது என் வீடு, இதன் வாழ்வு தாழ்விற்கு நானே முக்கிய காரணம் என்பதையறிந்து அதற்கேற்றவாறு நடக்கும் சமயோசித புத்தி அவசியம். பரந்த அன்பு உள்ளத்திலே குடிகொண்டால் அது இரும்பையும் பொன்னாக்கும் சக்தி பெற்றும். அன்பிருக்கும் இடத்தில் ஐயமில்லை. ஐயமில்லாதபோது கவலையில்லை. கவலையற்றபோது கலகமில்லை. கலகமற்றால் நிம்மதி ஏற்படும். நிம்மதி ஏற்பட்டால் பொருளிலும் அருளிலும் உயர்வு கிடைப்பது திண்ணம். கூரிய அறிவு தனது தனது குடும்பத்தின் பொருள் நிலையைச் சமாளிப்பதற்கு அவசியமாகும். பொருளின் அருமை தெரியாமல் நாகரிகச் சுழலில் அகப்பட்டு வீண் செலவு செய்தால், நம்மையும், நம்மைச் சுற்றியுள்ளோரையும், வறுமையில் ஆழ்த்துகிறோம். நாகரிகச் சுழலும், ஆடம்பர வாழ்க்கையுமே பற்பல பாவங்களுக்கும் காரணமாகின்றன. உள்ளதைக் கொண்டே உயர்வாக வாழலாம். இயற்கையழகு குறைந்தால் அதைச் செயற்கை யழகால் மிகைப்படுத்த முடியுமா? முடியுமென்று நினைப்பது கானல் நீர் போன்றதுதான். இயற்கையால் ஏற்பட்ட குறையை பண்பினால் நிரப்ப வேண்டும். அதுதான் நிரந்தரமானது. வீணாக நம்மையும் புண்படுத்திக்கொண்டு, மற்றோரையும் புண்படுத்துவதில் பயனென்ன? இளமையின் சோபையும், இயற்கையின் சோபையும் எந்த சரீரத்திலும் பரிமளிக்கும். அதற்குப் புனைதலே அவசியமில்லை. முதுமையின் பக்குவத்தை எதற்காக செயற்கையால் மறைக்க வேண்டும்? அவசியமில்லை. எனவே பெண்களாகிய நாம் இயற்கை நமக்களித்த பணியைச் செவ்வனே செய்ய வேண்டுவதே நமது கடமை. இவற்றை செய்வோமாகில் நாமும் தைரியமாக நமது சகோதரிகளைப் பார்த்து

“ மங்கையாகப் பிறந்ததனால்—மனம்
வாடித் தளர்ந்து வருந்துவதேன்?
தங்கு புவியில் வளர்ந்திடும் கற்பகத்
தாருவாய் நிற்பதும் நீரலவோ ?
செம்மையிற் பெற்ற குணங்களெல்லாம்—
செய்வினையாலே திருந்துவீரேல் நீங்கள்
இம்மைக் கடன்கள் முடித்திடவே—முத்தி
எய்திச் சுகமாகயிருப்பீரே ” என்று கூறலாம்.

# பிராயச்சித்தம்

ஜெயலக்ஷ்மீ R. ஸ்ரீனிவாசன்

"அடி ஜானகி, ஜானகி!"

"என்ன? அவள் ஸ்னனம் செய்து கொண்டிருக்கிறாள்...." என்று சாவித்திரியம்மாள் வந்தாள்.

"ராம கனபாடிகளிடமிருந்து கடிதம் வந்திருக்கு. அவர் தம்பி அனந்தராமையர் ஜானகியின் பெண்ணை பார்ப்பதற்கு இரண்டு நாளில் வருவதாக எழுதி இருக்கிறார். வரனுடைய மூத்தாளுக்குக் குழந்தை குட்டிகள் கூட இல்லையாம். கை நிறைய சம்பளம் வருகிறது. 'இளையாளே வாடி, மலையாளம் போகலாம்' என்பது போல் பெண்டாட்டியை நன்ருக வைத்துக் கொள்வான்."

"ஆனல் திவ்யமாகக் கொடுத்து விடலாமே?"

அதற்குள்ளாக ஜானகியும் ஸ்னனம் செய்துவிட்டு மடி கட்டிக்கொண்டு வந்தாள்.

"என்னப்பா, கூப்பிட்டயள்?"

"ராம கனபாடிகளிடமிருந்து கடிதம் வந்திருக்கு. வர ஞாயிறன்று அவர் தம்பி பவானியை பார்க்க வருகிறாராம், வந்து.... ....அனந்த ராமைய்யருக்கு மூத்தாள் மூலம் குழந்தைகள் கூடக் கிடையாதாம். திவ்யமான வரன். கை நிறைய சம்பாதிக்கிறான்...."

"போதுமே அப்பா, வரனை பற்றிய பெருமை நான் தான் படித்து படித்து சொல்லி விட்டேனே. நான் பவானியை என் உயிர் போனலும் கிழவனுக்கு கட்டிக் கொடுக்க மாட்டேன். இது உண்மை அப்பா."

"என்னடி இது! வரனுக்கு என்ன அப்படி பிரமாதமா வயதாகி விட்டது? வெடிய வெடிய நாற்பதுதானே ஆகிறது. கை நிறைய சம்பாதிக்கிறான். பெண்ணை ராஜாத்தியாட்டமா வைத்துக் கொள்வான்......" என்று ஏதேதோ பெருமை பீற்றிகொண்டே போனுள் சாவித்திரி.

"பார் ஜானு. இந்த வரனுக்கு பவானியை கொடுத்தாயோ உன் கையிலிருந்து ஒரு தம்படி சிலவழிக்க வேண்டாம். முதல் கலியாணம், வாலிப வரம், என்றால் கை நிறைய வரதக்ஷிணை கொடுத்தாக வேண்டும். இல்லாவிடில் ஒரு ஏழை பையனுக்குத்தான் கொடுக்கலாம். இரண்டும் முடியாத காரியம்."

"பணத்தைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை அப்பா. வரன் நல்லதாகக் கிடைத்தால் நான் எவ்வளவு கொடுக்கவும் தயார்."

"ஆமாண்டி ஆமா. உன்னிடம் உள்ளதையெல்லாம் இப்போ சிலவழித்து விட்டால் நாளைக்கு உன் கதி?"

"என்னைப்பற்றி நீங்கள் விசாரப்பட வேண்டியதில்லை. என் பெண்ணின் சுகம் தான் எனக்கு முக்கியம். நல்ல வரனைத் தான் பார்த்து கொடுப்பேன் அவளை. அவளுக்கும் என்னைப்போன்ற கதி வர சம்மதியேன்" என்று வெடுக்கென்று பதில் அளித்துவிட்டு உள்ளே சென்று விட்டாள் ஜானகி. அவளுடைய பெற்றோர்கள் வாயடைத்து நின்றார்கள்.

பெற்றோர்களின் எதிரில் வெகு தைரியமாக பதில் சொன்னாளே தவிர அவ்வபலையின் மனம் துயர மேலீட்டால் கொந்தளித்தது. அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது. தனக்கு பெற்றோர் இருந்தும் அவர்களே மனமுவந்து தனக்கு அநீதி செய்தார்கள். தெரிந்து தெரிந்து பணத்தாசை பிடித்து தாங்களுடைய சொந்தப் பெண்ணின் சுகத்தையும் கருதாமல், தங்கள் வருமை நீங்குவதற்கு ஒரு வழி தெரிந்ததென்று கிழவனுக்கு பெண்ணை கொடுத்தார்கள்... இல்லை.... பணத்துக்கு பெண்ணை விற்றார்கள் என்றே சொல்ல வேண்டும்.

தன் தலைவிதிதான் இப்படி ஆயிற்று. கலியாணமாகி ஆறு மாதம்கூட வாழவில்லை. விதவை கோலத்துடன், மூத்தாள் பெண் பவானியையும் அழைத்துக் கொண்டு பிறந்தகம் வந்து சேர்ந்தாள் பேதை ஜானகி. அவளுடைய நேசிகள் சீரும் சிறப்புமாக, குஞ்சும் குழந்தைகளுமாகக் குஷாலாய் இளம் கணவன்மார்களுடன் குடித்தனம் நடத்த, ஜானகி மாத்திரம் பிறந்தகத்தில் சமையல் காரியாக உழைக்க நேரிட்டது.

ஜானகியின் கணவர் என்னவோ, அவளுக்கு வேறுவித சுகம் எதுவும் கொடுக்கா விட்டாலும் இருக்க வீடும், பாங்கில் ரொக்கமும் வைத்துவிட்டு தான் போனார். மேலும் ஜானகியின் உடல் நிறைய நகையும் போட்டிருந்தார். ஜானகிக்கு தனிக் குடித்தனம் இருப்பதில் தான் விருப்பம். ஆனால் சிறு வயது, அதனுடன் கூட கலியாண வயது பெண் ஒன்று, தனியாக இருப்பது சரி இல்லை என்று பயந்து பிறந்தகத்திற்கே வந்து அடைக்கலம் புகுந்தாள்.

பவானிக்கு அதிக சிலவின்றி கலியாணத்தை செய்து அனுப்பிவிட்டால் பிறகு ஜானகியும் ஜானகியின் பணமும் தங்கள் கை வசம் தானே என்று அய்யருக்கு. அந்தப் பணத்தை கொண்டு தனது மற்ற பெண்களின் கலியாணம், பிள்ளைகளின் படிப்பு முதலியவைகளை அனாயாசமாக சமாளித்துக் கொள்ளலாம் என்பதுதான் ஜானகியின் பெற்றோர்களின் எண்ணம்.

ஆனால் ஜானகிக்கு உயிர் பவானி. அந்தப் பேதை, பவானியை நேசிப்பது போல் இவ்வுலகில் வேறெதையும் நேசித்ததுமில்லை, விரும்பினதும் இல்லை. அவள் ஒரு காலத்தில் உயிருக்குயிராக நேசித்த பொருள்தான் அவளுக்குக் கிட்டாமல் போய் விட்டதே. அவளுடைய உடைந்த உள்ளத்துக்கு சிறுமி பவானிதான் ஆறுதலாக அமைந்தாள். தனக்கு பெற்றோர் இருந்தும் தன்னை அனாதையாக்கிவிட்டார்கள். பவானி அனாதைக் குழந்தை ஆனாலும் அவள், தான் ஒரு அனாதை என்று கனவிலும் உணராதபடி அவளை பராமரித்து நல்ல இடத்தில் கொடுத்து அவள் சுகித்திருப்பதை கண்டு களிக்க வேண்டுமென்பது தான் ஜானகியின் பெரிய ஆசை. தன் சூனிய வாழ்வில் எவ்வளவோ இடையூறுகள் ஏற்பட்டாலும் கூட இந்தப் புனித லக்ஷியத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று அல்லும் பகலும் கடவுளை துதித்தாள் அபலை.

பவானி முன்பே ரொம்ப அழகி. மேலும் அவளுடைய இனிய முகத்தில் அவளுடைய கபடமற்ற பரிசுத்தமான உள்ளப் போக்கு தத்ரூபமாக பிரதிபலித்தது. துருதுருவென்ற நீல விழிகள், அடர்ந்த அளகபாரம், பதினைந்து வயது பசும் பொன்னிற பாவை. கூட அவளுடைய அருமை சித்தி அழகழகாக செய்து பூட்டி இருந்த நகைகளின் சோபையின் நடுவில் ஜாஜ்வல்யமாக திகழ்ந்தாள் பவானி. ஜானகி மாத்திரம் என்ன, அழகில் குறைவா? அவளுடைய அழகு தானே அத்தான் தியாகுவை ஆட்கொண்டது. ஆனால் பணத்தாசை பிடித்த அவனுடைய தகப்பனார் ஏழை ஜானகியை நாட்டுப் பெண்ணாக ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.

தியாகு இன்னும் சிறுபிள்ளை தானே. மேலும் படிப்பு மும்முரத்தில் கலியாணத்தைப் பற்றி யோசிக்க அவனுக்கு அவகாசமேது? அல்லாமல் படிப்பு முடித்து ஒரு வேலை கிடைக்கும் வரைக்கும் ஜானகி தனக்காகக் காத்திருப்பாள் என்றே எண்ணி இருந்தான். இதன் நடுவில் ஜானகியின் தந்தைக்கும், தியாகுவின் தந்தைக்கும் இடையே கலியாண பேச்சு வார்த்தைகள் கடிதத்தின் மூலம் நடைபெற்றது. தியாகுவின் தகப்பனார் முத்துசுவாமி அய்யர் பெண்ணைவிட பெண் கொண்டு வரப் போகும் பணத்தின் மீதுதான் அதிகம் மதிப்பு வைத்திருக்கிறார் என்பதை நன்குணர்ந்தவராய், ராஜாவையர் தியாகு தனக்கு மாப்பிள்ளையாகக் கிடைப்பது குதிரைக் கொம்புதான் என்று தீர்மானித்து கொண்டார். பிறகு வேறு இடங்களில் வரன் தேட முற்பட்டார். ஜானகியோ நிடு நிடுவென்று கட்டுக்கடங்காத வனப்புமிகுந்த வனிதையாக வளர்ந்து விட்டாள். ஊர் முழுவதும் பெண்ணுக்கு இன்னும் கலியாணம் செய்யவில்லை யென்று கசமுசவென்ற வம்பு கிளம்பிற்று. ராஜாவைய்யர் வெகு சுக்காஞ்செட்டி என்று உலக பிரசித்தமாயிற்றே, மேலும் பெரிய சம்சாரி, பணக்காரரும் இல்லை.

சரி, ஜானகியை அய்யருக்கு இரண்டாம் தாரமாகக் கொடுப்பதால் அய்யருக்குக் கைமேல் இரண்டாயிரம் ரூபாய்கள் காணிக்கை கிடைப்பதல்லாமல், கலியாண சிலவு

முழுவதையும் வரனே ஏற்று கொள்வதாக வும் வாக்களிக்கவே, அய்யருக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று. மேலே ஏதாவது யோசனை செய்தால்தானே! பணம்...பணம்...பணம் என்ற அஞ்சனம்தான் (சொக்கு பொடி) அவருடைய அறிவை மயக்கி விட்டதே. வயதோ நாற்பத்தேழுதானே ஆகிறது வரனுக்கு. மூத்தாளும் ஒரே ஒரு பெண்ணை விட்டுவிட்டு ஐந்து வருஷங்களுக்கு முன் காலமாகிவிட்டாள். இனி இவ்வளவு வய துக்குமேல் மறு விவாகம் என்ன வேண்டிக் கிடக்கு என்று தட்டிகழித்து கொண்டு தான் வந்தார் சுப்பிரமணிய அய்யர். அவரு டைய உறுதி நாளுக்கு நாள் தளர்ந்து கொண்டு வருவதற்கும், ராஜாவைய்யர் ஜானகிக்கு வரன் தேட ஆரம்பித்ததற்கும் சமயம் சரியாக சேர்ந்தது. ஜானகியின் விருப்பு வெறுப்புகளைபற்றி யோசனை கேட் பவர்கள் ஒருவருமில்லையே. ஜானகி அழு தழுது முகம் வீங்கி, அலுத்து போனவ ளாய், பெற்றோரின் கட்டளைப்படி யந்திரப் பாவைபோல் சுப்பிரமணிய அய்யருக்கு மாலை இட்டாள். முதல் கலியாணமென்றால் என்ன, மூன்றும் கலியாணம் என்றால்தான் என்ன, கொட்டு மேள முழக்கத்துக்கும், விருந்து சாப்பாடு தடபுடலுக்கும், பரிகா சப் பேச்சுகளுக்கும் குறைவில்லை. மாப் பிள்ளை மறுநாளே ஜானகியை அழைத்துக் கொண்டு தன் ஜாகைக்கு சென்றார். அவளு டைய இன்பக் கனவு முழுவதும் மறைந்து மாயமாகி விட்டது. பாலைவனம் போல் தகிக்கும் அவள் உள்ளத்தில் சிறுமி பவானி தண்ணீர் ஊற்றென தோன்றினாள். "பவானீ, பவானீ" என்று தன் இதயத்தி லிருந்து பீறிக்கொண்டு கிளம்பும் அன்பு ஊற்றால் ஜானகி, பவானியை அபிஷேகம் செய்தாள். பவானியும் நல்ல சமர்த்து. தன்னை பெற்ற தாயே திரும்பிவந்து விட் டாளோ என்பதுபோல் பேரானந்தத்துடன் சித்தியிடத்தில் நன்றாக ஒட்டிக்கொண்டாள். இதைக்கண்டு சுப்பிரமணிய அய்யர் திருப்தி யும், நிம்மதியும் அடைந்தார்....பிறகு... ...பிறகு? ஆறே மாதத்தில் அந்தப் புது குடித்தனம்.......இதனைத்தையும் நினைத்து கொண்டு பெருமூச்சு விட்டாள் ஜானகி.

அவளுடைய உள்ளத்தில் உதித்திருப் பது ஒரே ஒரு லக்ஷியம். அதை சீக்கிர மாக நிறைவேற்றி விட வேண்டும். இல்லா விட்டால் இந்த அப்பாவும், அம்மாவும் தங் கள் சொந்த பெண்ணுக்குச் செய்த அநீ தியை தன் அருமை பவானிக்கும் செய்து விடுவார்கள். அவர்களுக்கு தன்னிட முள்ள பணம்தான் முக்கியம், என்றது போன்ற சிந்தனை அலைகள் எழுந்தன பேதையின் உள்ளத்தில்......

★ ★ ★

நாட்கள் பாட்டுக்கு உருண்டோடின. தினம் ஒரு தடவையாவது ராஜைய்யர் அனந்தராமனுக்கு பவானியை பேசாமே கொடுத்து கலியாணத்தை முடித்து விடு என்று பெண்ணுக்கு போதனை செய்யாமல்



இரார். சாவித்திரி கணவனுடன்கூட ஒத்து பாடாமலும் இருக்க மாட்டாள். ஜானகி முகத்தை சுளித்துக்கொண்டு போவாள்.

இதன் நடுவில் திருப்பதிக்கு சுவாமி தரிசனத்துக்குப் போய்விட்டு தன் ஊருக்கு திரும்பிப் போகும் வழியில் ராஜாவைய்யரின் தமக்கை சுப்புலக்ஷிமி இரண்டொரு நாளைக்கு சேலத்தில் இறங்கி ராஜாவைய்யரின் அகத்தில் தங்கி இருந்தாள். ஜானகியின் நிலைமையைக் கண்டு அவள் உள்ளம் பாகாய் உருகிற்று. தன் சொந்த மருமாள், தனக்கு நியாயமாக நாட்டு பெண்ணாக வரவேண்டியவள் தன் கனவனின் அஞ்ஞானத்தால் இவ்வாறு சீர்கெட நேரிட்டதே என்று மனம் வெதும்பினாள் சுப்பலக்ஷ்மி. அழகிலும் சாமார்த்தியத்திலும் ஜானகியைக் காட்டிலும் பதின்மடங்கு சிறந்து விளங்கின பவானியை கண்டதும் அவளுடைய நாட்டம் பவானிமேல் சென்றது. ஊருக்கு போகும் போக்கில் "அடி ஜானகி, உனக்கு தான் பெரிய அநியாயம் செய்து விட்டோம். அந்த பாபத்துக்கு பிராயச்சித்தமாக உன் பெண் பவானியை எங்கள் தியாகுவுக்குத் கொடுப்பாயோடீத்" என்று கேட்டு வைதிதாள் சுப்பலக்ஷ்மி. ஜானகியின் உள்ளம் எதிர்பாராத ஆனந்தத்தால் ஓரே துள்ளாகத் துள்ளி குதித்தது.

"அத்தே! என் பவானி அவ்வளவு அதிருஷ்டசாலியா? அத்தான் அவளை ஏற்றுக்கொள்வாரா !! என் காதை என்னால் நம்ப முடியவில்லையே" என்று திணறினாள்.

"என்னமோ அம்மா, எனக்கு இந்த சம்பந்தம் ரொம்ப பிடித்துப்போச்சு. ஊருக்கு போய் அவனையும், அப்பாவையும் கேட்டு பதில் எழுதுகிறேன். எங்கே பவானியின் ஜாதகத்தை கொடுத்துவை" என்று ஜாதகத்தை வாங்கிக்கொண்டு ஊருக்கு போனாள் அத்தை.

★ ★ ★

**தா**யாரின் விருப்பம் போலவே தனயனுக்கும் நல்ல வேலையும் கிடைத்துவிட்டது தியாகுவுக்கு. தன்னால் ஜானகிக்கு எவ்வளவு தீராத அநியாயம் ஏற்பட்டுவிட்டதோ. நான் இந்த அற்பக் காரியத்தினாலாவது அவளுடைய புண்பட்ட உள்ளத்துக்கு சொற்பமாவது நிம்மதி அளிக்க முடிந்ததே என்று இணங்கினான் தியாகு. முத்துசுவாமி அய்யர் இந்த கலியாணத்திற்கு ஆக்ஷேபணையே சொல்லவில்லை. அவர் விரும்பியது கிடைத்த பிறகு ஆக்ஷேபணை என்ன? பவானிக்குத் தான் ஒரு குறைவுமில்லாமல் பதினயிரத்துக்குக் குறையாமல் சீர்வரிசைகள் செய்வதாக ஜானகி திட்டம் போட்டிருந்தாள்!

பதினைந்தே நாட்களில் சி. தியாகராஜனுக்கும், செள. பவானிக்கும் கலியாணம் வெகு விமரிசையாக நடந்தது. ஜானகியின் லக்ஷியமும் நிறைவேறியது.



# சௌந்தர்ய உபாஸனை

"நித்யா"

## சோளிகள்

"அக்கா! எனக்கும் ஒரு சோலி தைச்சுக் குடேன். எங்கள் ஸ்கூல்லே எல்லாரும் போட்டிண்டிருக்கா அம்மா" என்று உபத்திரவப் படுத்தினாள் என் தங்கை உஷா.

"வாண்டுகளுக்கெல்லாம் என்னடீ சோலி வேண்டியிருக்கு?" என்று அதிகாரம் செய்த என்னை நோக்கி, "ஆமா! நீ மாத்திரம் போட்டுக்கறியே" என்று குரோதமாகக் கேட்டாள் உஷா.

எனக்கு சிரிப்பாக இருந்தது அவள் பேசியது. எங்கு பார்த்தாலும் சோலி மயம் ஜகத்தாக இருக்கும் இக்காலத்தில் உஷாவும் சோலி மோகத்தில் மூழ்கினதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே. அவளும்தான் தன் ஆசையைத் தீர்த்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டேன்.

சோலியை சோளி என்றும் சொல்கிறார்கள். சோலி, சோளி எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். எந்த நவீன யுவதியும் இப்போது இந்த சோலியில்தான் மிளிர்கிறாள். இனிமேல் கதாசிரியர்கள்கூட, "உடம்பை ஒட்டினாற்போல அவள் அணிந்த அழகிய சோலி, அஜந்தா குகையிலிருந்து வந்த சிற்பமோ என்று நினைக்கும்படி சோபையளித்தது" என்று வர்ணித்தாலும் வர்ணிக்கலாம். இத்தகைய பிரசித்தி பெற்ற சோலிகள் வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவிற்கு பறந்து வந்தது என்று கூறுகிறார்கள் சிலர்.

"இது எங்க காலத்து ரவிக்கைகள்தானே என்கிறாள்" எங்கள் வீட்டு பாட்டி. பழைய காலத்தில் கஞ்சுகம், ரவிக்கை என்று பல விதமாக அழைத்தார்களாம் இந்த சோலியை. அவர்கள் ரவிக்கைகள் கழுத்து மூடப்பட்டு இருக்கும். தற்காலத்து நம் சோலிகள் கழுத்து இறங்கி (V) வி போல வெட்டப்பட்டோ அல்லது வெறும் வட்டமாகவோ ப போலவோ கழுத்து வைத்தோ தைக்கப்படுகிறது. இருந்தாலும் மற்ற விதங்களில் நம் சோலியும் அவர்கள் ரவிக்கையையே உரித்து வைத்திருப்பதால் எங்கள் பாட்டியின் சொல்லை ஆமோதிக்க வேண்டியிருக்கிறது.

இதெல்லாம் எப்படியோ போகட்டும். இந்த சோலிகள் உண்மையில் நமக்கு அவசியமானவையா என்று பார்ப்போம். சோலிகள் உடம்போடு ஒட்டினாற்போல அமையும்படி தைக்கப்படும் ஓர்வித ரவிக்கைகளாகும். ரவிக்கைகளைப் போலவே முதுகுப் புறமும், கைகளிலும் கரைகள் வைத்து தைக்கப் படுகின்றன. இவற்றை அணிவதால் நம் தேகத்தின் அழகு அதிகப்படுவதுடன் துணியும் மிச்சப்படுகிறது. மற்றத் தேன் கூடு (Honey Comb) முதலிய மற்ற நவ நாகரீகமான சுருக்கங்கள் நிறையப் பெற்ற கைகள் தைக்க அதிகத் துணி வேண்டியிருக்கிறது. ஆனால் சோலி தைக்க அதிகத் துணி அவசியமில்லை.

சோலி போட்டுக் கொள்வதில் பல விதங்கள் இருக்கின்றன. பின்னால் முதுகு தெரிய முன்னால் முடி போடும் சோலிகள். முதுகை மறைத்து இடுப்பை ஒட்டினாற்போல கரைகள் வரும்படி தைக்கப்பெற்ற சோலிகள், பின் புறம் கயிறால் முடி போடும்படியான சோலிகள், முடி போடாமல் பித்தான் போடும் சோலிகள் முதலியன. பொதுவாக நன்றாக முதுகு மூடிய சோலிகளை உபயோகிப்பது நலம். எல்லாவித சோலிகளிலும், முன் பக்கம் முடி போடுவதைப் போன்று தைக்கப்படும் சோலிகளே நமக்கு அநுகூலமானவை.

சோலிகளுக்கென்று தனி ரகத் துணிகள் விற்கின்றன. அவைகளில் பூனா சோலித் துணிகள், குவாலியர் சோலித் துணிகள் முதலியன கண்ணைக் கவரும் கரைகளுடன் எங்கும் நடமாடுகின்றன. இவைகள் கண்ணுக்கு அழகாகத் தோன்றுவதென்னவோ உண்மை

தான். ஆனால் பூனா சோலிகளை தண்ணீரில் நனைத்தவுடனே அதன் சாயம் தண்ணீருடன் கலந்து, துணி தன் அழகு குன்றி நம்மைப் பார்த்து பரிதாபமாக பல்லிளிக்கும் அலங் கோலத்தைக் கண்டு நம் கண்களில் கண்ணீர் வந்து விடுகிறது. குவாலியர் சோலி, பூனா சோலிகளை விட மொத்தமாக விருக்கும். இவைகளின் சாயம் கொஞ்ச நாள்தான் நீடிக்கிறது. தினப்படி போட்டுக்கொள்ள இவைகள் உதவா. கஜம் ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என்று இவைகளை வாங்கி நஷ்ட மடைவதை விட பத்து பதினைந்து அதிகம் போட்டு ஒரு பட்டு ரவிக்கைத் துண்டோ அல்லது அதே ஐந்தாறு ரூபாய்க்கு சாதாரண கைத் தறியில் நெய்த நூல் ரவிக்கைத் துண்டோ வாங்கிக் கொள்ளலாம். சோலி களில் அதற்கென்று விற்கப்படும் ரவிக்கைத் துணிகள் தான் வாங்கவேண்டும் என்று கட் டாய மல்ல. சாதாரண கோடு போட்ட வாயில் துணிகள். சாதாரண வெறும் பிளெ யின் வாயில் துணிகள் முதலியவற்றையும் சோலிகள் தைப்பது போல சுருக்கமின்றி தைக் கலாம்.

கோடு போட்ட துணிகளை வீ (V) போல வும், டைமன் போலவும் வெட்டி தைக்கிறார் கள். அநேகமாக இந்த கோடுகளின் சந்திப்புகள் முதுகுப் பக்கம் தான் வரும். V வீ போன்ற வெட்டுக்கள் சில சமயம் கைகளில் கூட வரும். கோடுகளை பலவிதமாக சித்திர வேலைகளு டனோ அல்லது சாதாரணமாகவோ திறமைக் குத் தக்கபடி வெட்டித் தைக்கலாம்.

கரைகள் போட்ட ரவிக்கைத் துண்டுகளை சாதாரணமாக கைப்பக்கமும், இடுப்பு பக்கமும் வைத்துத் தைப்பார்கள். சிலர் கழுத்துக்கும் பட்டியல் போல் கரைகளை வைத்துத் தைக் கிறார்கள். வேறு சிலர் நடு முதுகில் நேராகவும் கழுத்திலிருந்து' முதுகுக்கு ஓர் நேர் கோடு போல கரைகளை வைத்துத் தைக்கிறார்கள்.

பூப்போட்ட துணிகளை சோலியாகத் தைப் பதில் அவ்வளவாக அவைகள் சோபிப்பதில்லை.

பிளெயின் வாயில், பட்டு, ஸில்க் துணிகளை சோலி மாதிரியில் தைப்பது எடுப்பாக இருக் கும். இஷ்டப்பட்டவர்கள் கைகளுக்கும், இடுப்புப் பக்கமும் கரைகள் வைத்தோ அல் லது இல்லாமலோ தைக்கலாம். தைக்கும் போது கை பட்டைகளை அதாவது ஓரங்களை நீக்ரோவர்களின் உதட்டைப் போல அகல மாக மடித்து தைப்பதால் சோலியின் மென் மையான அழகு விகாரப் படுகிறது.

சற்று தடித்த தேகமுடையவர்கள், நடுத்தர மானவர்கள் சோலிகள் அணிவதால் சற்று பருமன் குறைந்து காணப்படுகின்றனர். ஆனால் குச்சி போன்ற சரீரம் படைத்தவர்கள், நாக ரீகத்திற்காக உயிரை விட்டுக்கொண்டு மெல் லியளாக விரும்பி ஒடுங்கி வளரும் நவீன கால நாகரீகப் பெண்மணிகள் முதலியவர்களுக்கு இந்த சோலிகள் பயங்கரமாய்த்தான் இருக் கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.


# புதுமைப் பெண்

(மாதர்களுக்கான மாதப் பத்திரிகை)

தமிழ்நாட்டு மாதர்களுக்கென மாதர்களாலேயே நடத்தப்படுகிறது. ஸ்திரீ சௌந்தர்யம், சுகாதாரம், நாகரீகம், கலைப் பண்பு, கடமைகள், மாதர் மேம்பாட்டுக்கான ருசிகரமான கதைகள், கட்டுரைகள், அனுபவ மிக்க சோதரியரின் எழுத்தோவியங்களாக புதுமைப் பெண்ணில் திகழ்கின்றன.

ஆசிரியை—குகப்ரியை

வருட சந்தா ரூ. 6—0—0
ஆறு மாதம் ரூ. 3—0—0

சந்தா முன்பணமாக செலுத்தப் படவேண்டும்.

மானேஜர்,

**புதுமைப் பெண் காரியாலயம்,**

19, ராஜா ஹனுமந்தலாலா தெரு, சென்னை-5.

சரித்திரப் பூம்பொழில்

# அகல்யா பாய்

'ஸ்வர்ணம்'

சாயுங்காலம். பக்ஷிகள் கூண்டில் அடையும் தருணம். மாடுகள் தங்கள் கழுத்திலிருக்கும் மணிகள் ஒலிக்க வீடு திரும்பிக் கொண்டிருந்தன. இளம் பெண்கள் தலையில் தண்ணீர்க் குடத்துடன் இரு கைகளையும் வீசிய வண்ணம் ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டு ஒய்யாரமாய் நடந்து கொண்டிருந்தனர். முதியவர்கள் கைகளில் ஜபமாலை ஏந்திக் கோயிலை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். தள்ளாடி நடந்து கொண்டு தடி ஊன்றிய கிழவிகளும் ஏதோ பாடல்களை முணுமுணுத்த வண்ணம் கோயிலை நோக்கிச்சென்று கொண்டிருந்தனர்.

அகமத்நகரைச் சேர்ந்த பாதார்த்தி என்னும் அந்த அழகிய கிராமம் நாற்புறமும் சோலைகள் சூழ்ந்தது. நடுவிலே அக்ரகாரம். அதன் நடுவில் அழகிய மாருதியின் கோயில். கோயிலிலே சாந்தியாகால பூஜை மணி கண கணவென்று ஒலித்துக் கொண்டிருந்தது. கோயிலின் அருகேதான் ஆனந்த ராவ் என்னும் மராட்டியர் குடியிருந்தார். அவர் குமாரி அகல்யா பாய் தினந்தோறும் அந்த வீர ஆஞ்சநேயருக்குத் தன் கைகளினாலே விளக்கேற்றுவாள், கோலமிடுவாள்.

அன்று ஊர் முழுவதும் ஒரே பரபரப்பு. பம்பாய் பிராந்தியத்தில் அங்கங்கே நடந்து கொண்டிருந்த கலகங்களை அடக்கிவிட்டு பீஷ்வா ரகோபாவும், மல்ஹாரி ராவ் ஹோல்காரும், அந்த மாருதியைத் தரிசிக்கும் பொருட்டு வந்திருந்தனர். பீஷ்வாவும் சமஸ்தானாதிபதியுமே தங்கள் கிராமத்திற்கு வருவதென்றால் ஜனங்களின் குதூகலத்திற்குக் கேட்கவா வேணும்?

கோயிலிலே அழகின் கொழுந்தே போல் நின்று தீபாலங்காரம் செய்யும் சிறுமியைக் கண்டார் மல்ஹாரி ராவ் ஹோல்கார். அங்கிருந்த சிலர் மூலம் பெண்ணின் ஜாதி குலம் கோத்திரம் இவைகள் தெரியவந்தன. அந்த வடிவழகியைத் தன் மகன் காந்தி ராவுக்கு கேட்க விரும்புவதாய்த் தெரிவித்தார் ரகோபாவிடம்.

அந்த கிராமவாசிகள் அதிசயிக்கத்தக்க விதமாய் அகல்யா, சாதாரணமான ஒரு மனிதனின் மகளாகிய அவள், ஒரு சமஸ்தானாதிபதியின் மருமகளானாள். மாருதியின் எல்லையற்ற கருணைக்கு அவள் பாத்திரமானதன் பலன் என்றும், அந்த வீர ஆஞ்சநேயரின் வரப்பிரசாதத்திற்கு வெளிப்படையான சாட்சியம் என்றும் கொண்டாடினார்கள் அந்த கிராமவாசிகள்.

வருடங்கள் உருண்டு ஓடின. யுவராஜனான காந்திராவின் வாழ்க்கை இன்பமயமாயிருந்தது, அழகிய இரு குழந்தைகள். மத்ஸ்யா பாய் என்ற பெண் பிறந்த சில வருஷங்களுக்கெல்லாம் அரசுரிமை ஏற்கப் பிறந்தான் மாலி ராவ். இந்தக் குதூகலத்திலே ஆழ்ந்திருந்தனர் இருவரும். அரசியல் விஷயமான முழுப் பொறுப்பையும் கிழ மல்ஹாரி ராவே பார்த்து வந்தார். பின் கவலையென்ன?

ஆனால் இந்த இன்ப வாழ்க்கையைக் காணச் சகியாததுபோல ஒரு சம்பவம் நிகழ்ந்தது அங்கே. இந்தூர் அரண்மனையிலே சபை கூடியிருந்தது. பஞ்சாபை அடுத்த பிரதேசங்களில் 'ஜாட்ஸ்' என்னும் ஜாதியார் குடிகளை ஹிம்ஸிக்கும் செய்திகள் வந்தன. காந்தி ராவ் தானே சென்று அவர்களை அடக்கி வருவதாகக் கூறிப் புறப்பட்டான். ஆனால் எந்த வேளையில் புறப்பட்டானோ, அவன் மீண்டும் இந்தூர் வந்து சேரவில்லை.

கலக்ககாரர்களை அடக்கி யுத்தத்தில் வெற்றி பெற்று வாகை சூடி வருவானென்று முழுநம்பிக்கை யோடிருந்த அகல்யா பாய்க்கு இந்தச் செய்தி பேரிடிபோல் வந்து தலையில் வீழ்ந்தது. பேதை என்ன செய்வாள்?, 'சதி' ஆவதற்குத் தயாரானாள். கிழ மல்ஹாரி ராவ் இருந்த ஒரே அருமைப் பிள்ளையை இழந்த சோகத்தால் துடிக்கலானார். குழந்தைகளுக்கு என்ன தெரியும் பாவம்! அது வரையில் மருமகளைப் பகைத்துவந்த மாமியின் நெஞ்சம்கரைந்தது மெல்ல மெல்ல மருகியை அணுகி "அம்மா! அகல்யா! இப்பொழுது இந்தச் சிறு குழந்

தைகளை என் தலையில் சுமத்தி விட்டு நீ சதியாவது உசிதமல்ல. உன் பிரிவினால் குழந்தைகளும் ஏங்கிப் போகும். இந்த முதிய வயதில் இராஜ்ய விஷயங்களில் அவருக்கு உதவி யார்? பகைவர்கள் இந்த இந்தூர் ஸமஸ்தானத்தின் மேல் கண்ணுயிருக்கிறார்கள். நீ சதியாக வேண்டியது தான். கிழவர் ஏற்கனவே சோகத்தால் தசரதர் போலிருக்கிறார். என்ன நேருமோ................." என்றெல்லாம், தன் புத்ர சோகத்தையும் பாராட்டாமல் குடிகளின் நன்மையே நோக்கமாகக் கொண்ட அந்த அரசி தாரா பாய் சொன்னாள். இதற்குள் அவள் சதியானால் தாமும் உயிரிழக்கச் சித்தமாயிருப்பதாக கிழவர் கண்ணீர் சொறிந்த வண்ணம் கதறிக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தார்.

× × ×

வயது முதிர்ந்த மல்ஹாரி ராவ் பெயரளவில் அரசராயிருந்தாரேயன்றி, விவகாரங்களில், அகல்யாபாயேதான் ராஜ்யத்தின் வரவு செலவு, வரிவசூல்கள், தர்ம கைங்கர்யங்கள், இராணுவச் செலவுகள் மற்றும் குடிகளுக்கு வேண்டிய சீர்திருத்த வசதிகள் இவைகளை கவனித்து ஒழுங்கு செய்து வந்தாள். அவளது சிறந்த அரசியல் அறிவைப் பற்றியும், சமயம் வரும் பொழுது கேட்கும் ஆணித்தரமான கேள்விகளைப் பற்றியும் திவான்கள் கூடத் தங்களுக்குள் ஆச்சர்யப்படுவதுண்டு. யுத்தங்களின் பொருட்டு மாதக் கணக்காகவும், வருஷக் கணக்காகவும் வெளியே தங்கும் சமயங்களிலெல்லாம், ஒரு விதமான குற்றங்குறைகளோ, அபவாதமோ நேராவண்ணம் மிகச்சிறந்த முறையில் அரசு செய்து வந்தாள் அவள்.

× × ×

அன்று வஸந்த பஞ்சமி. சோகத்திலே மூழ்கிக் கிடந்தாள் அகல்யாபாய். முன்பு இந்தூரிலே கொண்டாடப்பட்ட பல வஸந்த பஞ்சமி உற்சவங்கள் அவள் கண்முன்னே தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. "என்ன ஆச்சர்யம்! கடவுள் ஏன் என் போன்ற பேதைப் பெண்களை இப்படித் துரத்தித் துரத்தி வேட்டையாட வேணும்? அன்று என் காதலருடனேயே சதியாகி யிருந்தால் இப்படிப்பட்ட ஒரு சோகத்தை அனுபவிக்காமல் போயிருக்கலாம். கிழடுகள் கட்டைகள் எல்லாம் கிடக்க, இந்தச் சிறு குழந்தை மாலி, சிம்மாதனம் ஏறி இன்னும் ஒரு மாதமாக வில்லை. இவனைத்தேடி எடுத்ததே. கிழவர் போனார். அது நியாயமான மரணம். இந்தக் குழந்தை நீடூழிவாழ வேண்டிய என் கண்மணி, ஒரு நொடியில் மறைந்து போனானே. ................உலகம் ஒரே ரீதியில் தான் ஓடுகிறது. அவரை இழந்தது போதாதென்று எனக்கு மேலும் இந்த தண்டனையா? நன்மை விதைத்தால் நன்மை விளையும் என்றெல்லாம் பேசுகிறார்களே. நன்மையைத் தவிர ஒன்றையுமே கருதாத நான் என்ன சுகத்தைக் கண்டேன்? கடவுள் தீயவர்களுக்கேதான் துணை செய்கிறார். கேட்டால் எதேதோ புரியாத தத்துவங்களைச் சொல்லி முன்வினை, ஊழ்வினை என்றெல்லாம் கதைக்கிறார்கள். எல்லாம் வல்ல இறைவனுயிருந்தால் இந்த ஊழ்வினையைப் போக்கடிக்க மட்டும் அவர் வல்லவரல்லவோ ..............." என்றெல்லாம் சிந்தித்துக் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தாள் அவள்.

"அம்மணி, முக்யமான ஒரு விஷயம். தங்களது தனிமையைக் கலைக்க வந்தேனென்று கோபிக்கக் கூடாது. மந்திரி கங்காதர ராவ் ஜஸ்வந்த், கலகம் செய்ய முயற்சி செய்கிறார். குழந்தை மாலி ராவை அரசராக்கித் தன்னைக் கார்டியனுக்கக் கூடுமென்று எதிர்பார்த்திருந்த அவருக்கு அரசரின் மரணமும், தாங்களே அரசை நடத்துவதும் அவர் கண்களை உறுத்துகிறது. பீஷ்வாவுக்கு இந்த சமயம் புறப்பட்டு வந்தால் இவளை எளிதில் ஜெயித்து விடலாம் என்று எழுதியிருக்கிறாராம். "ராடோ" என்பவன் சித்தமாகி வருகிறானும். இது வேவுகாரர் கொணர்ந்த செய்தி" என்று சொல்லி முடித்தாள் வந்தவள்.

கோபத்தினால் அவள் முகம் சிவந்தது. "ஓகோ, இந்த கங்காதர் ஜஸ்வந்த் இவ்வளவிற்கு வந்துவிட்டானா? பேஷ், நல்லது. நேர்முகமாக 'ராடோ 'வுக்கே எழுதுகிறேன். பார்ப்போம் ஒரு கை" என்று எழுந்தாள்.

× × ×

ராடோ யுத்தத்திற்கு வருகிறான் என்ற செய்தி இந்தூரை நோக்கி வருமுன்பே,

மிகுந்த முன் யோசனையுள்ள அகல்யாபாய், பான்ஸலே, கெய்க்வார், ஸிந்தியா முதலியவர்களிடம் உதவி கோரியிருந்தாள். அதன்படி, அவள் வார்த்தைகளுக்கு மிகுதியும் மதிப்பு வைத்திருந்த பான்ஸலே தாமே யுத்தத்திற்குத் தயாராய் வந்தார். கெய்க்வார் இருபதினாயிரம் குதிரை வீரர்களை அனுப்பியிருந்தார். ஸிந்தியாவிடமிருந்தும் சேனைகள் வந்திருந்தன.

ராடோ வரும் வழியிலெல்லாம் சின்னஞ் சிறிய சேனையுடன் எதிர் நிற்க மாட்டாமல் தன்னிடம் அவள் சரணமடைந்து விடுவாளென்றே பகற் கனவு கண்டு வந்தான். இங்கே வந்து இந்த முன்னேற்பாடுகளைக் கண்ட உடன் அவன் விலவிலத்துப் போனான். முன்னே சென்றால் உயிர்ச் சேதமும், தோல்வியும் பின்னடைந்தால் அவமானமும். இந்த நிலையில் இன்னம் செய்வது என்று விளங்காதவனாய்த் திகைக்கலானான் அவன்.

பளிச்சென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. மிகவும் வணக்கத்துடன் துக்காஜி என்னும் தளபதிக்கு ஓலையனுப்பினான். "நான் மாலிராவ் இறந்துபோன துக்கம் விசாரிக்க அரசிக்குரிய மரியாதையோடு வந்தேனேயன்றி யுத்தம் செய்யும் எண்ணமேயில்லை. அப்படியிருக்க நீங்கள் அணிவகுத்து எதிரே நிற்கிறீர்களே" என்பதுதான் வாசகத்தின் சாரம்.

துக்காஜியும் கள்ளனுக்கேற்ற குள்ளன் "அப்படியானால் மிகவும் நல்லது. சேனைகள் இருக்குமிடத்திலேயே நிற்கட்டும். மெய்க்காவலருடன் நீங்கள் மட்டும் வந்து துக்கம் விசாரித்துப் போகலாம்" என்று பதில் அனுப்பினான். ராடோ வெட்கத்தை வெளிக்காட்டாமல் அரண்மனை சென்று அகல்யா பாயை விசாரித்து விட்டு வந்த வழியே திரும்பினான்.

× × ×

வருஷங்கள் பல உருண்டோடின. ராடோ வந்து எதிர்த்து அவமானப்பட்டு ஓடிய பிறகு அவள் அரசாட்சியில் ஒரு கலகமோ யுத்தமோ, கொலையோ, கொள்ளையோ ஒன்றுமே நடந்ததில்லை. இராம ராஜ்யம் என்று புகழ்ந்தனர், ஆனால் இராம ராஜ்யத்திலும் நடவாத சில அற்புதங்கள் நடந்தனவென்று மகாராஷ்டிரர்களது வீர சரித்திரம் சொல்லும். இளமையிலே விதவையான அவள் தன் கையினாலேயே தினந்தோறும் பிராம்மணர்களுக்குப் பரிமாறி அவர்கள் உண்ட பிறகே தான் உண்பது என்ற விரதத்தை நாள் தவறாமல் நடத்திவந்தாளாம். செங்கோல் பிடிக்கும் அந்தக் கரங்கள் கரண்டிகளைப் பற்றின. இன்சொல்லால் 'என்ன வேண்டும்? என்ன வேண்டும்?' என்று கேட்டு உபசரிப்பாளாம் பரிமாறும் பொழுது. இதை வெகு பெருமையாய் அவர்கள் சொல்லிக் கொள்வதில் ஆச்சர்யமென்ன?

× × ×

அப்பொழுது ராணிக்கு வயது ஐம்பத்தெட்டு. துக்காஜி என்னும் தளபதி ஒரு கடன் (அவனது சொந்த விஷயமாய்) ஜயப்பூர் சென்றிருந்தான். ஜயப்பூரார் அவனை அவமதித்தும் அடித்தும் விட்டார்கள். சேனையும் பணமும் தேவை என்று ஓலை அனுப்பினான். அகல்யாபாய் மேற்குறித்தவைகளை அனுப்பிவிட்டு "யுத்தம் செய்து ஜயித்துவா. உன்னால் முடியாதென்று தோன்றினால் நானே நேரில் வருகிறேன்" என்று சொல்லியனுப்பினாள்.

இதே போன்ற மற்றொரு சம்பவம். மால்ஹாரி ராவ் இறந்த சமயம் பொக்கிஷத்தில் பதினாறு கோடி ரூபாய்கள் இருந்தன. அரசியல் வரவு செலவுகளைக் கணக்கிட்ட அகல்யா பாய், வருமானமே செலவுக்குப் போதுமானது என்று கண்டதும் அந்தப் பதினாறு கோடியை ஸ்ரீகிருஷ்ண பகவானது கோயிலுக்கு மான்யமாக எழுதி வைத்து விட்டாள். இந்தச் செய்தி 'ராடோ'வுக்குத் தெரிந்ததும் அவன் மனம் குமுறியது. அப்பொழுது அவனுக்கு மிகவும் தரித்திர தசை. ஆகவே விஷயம் தெரியாதது போல தனக்குப் பொருளுதவி, மீதியாகும் பொக்கிஷத்திலுள்ளதில் கொடுக்க வேணுமென்று எழுதினான்.

அகல்யா பாய்க்கு இவன் சுபாவம் புதியதா? "பணத்தை பகவானுக்கு அர்ப்பணம் செய்தாகி விட்டது. அதிலிருந்து எடுப்பதற்கோ கொடுப்பதற்கோ எனக்கு என்ன அதிகாரம்? ஆனால் நீயோ பிராம்மணன். அவசியம் என்றும், கொடுக்கத்தான்வேண்டு

மென்றும் கேட்டால், யாசகம் என்று கொடுக்கலாம். கோவில்சொத்தை யாசகர்கள் பெறலாம்" என்று ஓலை விடுத்தாள்.

ராடோ பொங்கி எழுந்தான். இந்த யாசகம் என்ற வார்த்தைகள் ஏற்கனவே குமுறிக் கிடந்த அவன் நெஞ்சை வாட்டியது. சீறி எழுந்து "நான் யாசகம் வாங்கும் பிராம்மணனல்ல. எனக்குத் தேவையானதை எடுத்துக் கொள்ள எனக்கே தெரியும். நேரில் வருகிறேன்" என்றது பதில் ஓலை.

அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது, வயது ஆகிவிட்டதனாலேயே சுபாவம் மாறி விடுகிறதா. அது எங்கோயோ நூற்றில் ஒருவருக்கு. இந்த ராடோ முன்பு துக்கப் பட்ட சமயத்தில் படையெடுத்து ஒரு பெண்ணை ஜயித்து விடலாமென்று வந்த மகாவீரன்தானே என்று எண்ணியவளாய், ஊரிலுள்ள பெண்களில் பக்தியுள்ள, ஐந்நூறு பெயரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, தான் மட்டும் ஆணுடை தரித்து நகருக்கு வெளியேயுள்ள மைதானத்தில் வந்து நின்றாள்.

ராடோ சைன்யங்களுடன் வந்தான், "சைன்யங்கள் எங்கே?" என்றான். "இதோ இவர்கள் தான் சைன்யங்கள். பகவானுடைய சேனைகள். பக்தர்கள் முன்பு நீயும், நானும் எல்லோரும் பீஷ்வாவுக்கு உட்பட்டவர்கள். யுத்தம் செய்து ஜயித்தால் ராஜ்யம் உன்னுடையது. இல்லாவிட்டால் ஒருகாசு கூடத் தொட முடியாது. தர்மம் தான் இந்துக்களுடைய குலதனம். அதை நான் காப்பாற்றியே தீருவேன், போருக்கு வருவதானால் சேனை எதற்கு? நீயும் நானும் துவந்த யுத்தம் செய்வோம். இந்தப் பக்தர்கள் சாக்ஷி" என்று அழைத்தாள். 'ராடோ' வெட்கத்தினால் எண் சாணுடம்பும் ஒரு சாணாகக் குறுகிப் போனான்.

அகல்யா பாயின் வீரமும் ராஜதந்திரமும் சமயோசித புத்தியும் துணிவும் நமது சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. இன்றும் மகாராஷ்டிரர்கள் அந்த வீர மங்கையைத் தெய்வமாக வழிபடுகின்றனர். இளமை தொடங்கி எழுபதாவது வயதுவரை ஒரே ரீதியாக அரசு செலுத்திய வீரப் பெண்மணியை வேறு எங்கு காணமுடியும்?

---

அழகு தெய்வத்தை கவிகள் சௌந்தர்யமாகக் காண்கிறார்கள். வேதாந்திகள் ஞானமென்ற உருவாய் பார்க்கிறார்கள். குணசீலர்கள் சத்தியமாக தரிசிக்கிறார்கள். கருணை மூர்த்திகள் அஹிம்சையாக காண்கிறார்கள். வீரர்கள் வீர வடிவமாகவே காண்கிறார்கள். அமைதியிலும், பயங்கரத்திலும் கூட அழகு தெய்வம் தோன்றுவதுண்டு. இன்னிசை பொங்கி வழியும் கானத்திலும் உள்ளம் திடுக்கிட குமுறி ஓசை புரியும் இடியிலும் ஒருங்கே அழகு தெய்வம் தோன்றுகிறது. மனிதரின் காதல் நாடகத்திலேயும் அதனைக் காணலாம். கலைஞனும், வீரனும், ஞானியும் இந்த அழகு தெய்வத்தை "பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிறைந்திருப்" பதைக் காண்கிறார்கள்.

# எப்படித் தப்புவது?

"தரங்கிணி"

"ஏண்டி சச்சு! எத்தனை நாழிகை தூங்கப் போறாய், மணி எழு அடிக்கப் போகிறது. பாயும் படுக்கையுமாக வீட்டின் அழகைப் பார். இத்தனை நாழிகை கழித்து எழுந்தால் படிக்கிறது எப்பொழுது, பள்ளிக்கூடம் போவது எப்பொழுது? இவ்வளவு பெரிய பெண்ணாகிய உனக்கு உன் வேலைகளையே ஒழுங்காக செய்துகொள்ள முடியவில்லை. உனக்கு எங்கே வீட்டு வேலைகளைச் செய்ய பொழுதிருக்கப் போகிறது. நீ இப்படி சோம்பேறியாக இருந்தாயானால் **நாலு பேர்** உன்னை பார்த்து சிரிப்பார்கள்" என்று ஆரம்பித்தாள் பாட்டி.

இந்த சுப சுப்ரபாதம் தினமும் காலையில் நடக்கும் வழக்கமாதலால், நான் அதை கவனிக்காமல் பின் பக்கம் போய்விட்டேன். காப்பி சாப்பிடுவதற்குள் பாட்டு வாத்தியார் வந்து விட்டார். அவருக்கு அன்றைய தினம் யார்மேல் என்ன கோபமோ தெரியவில்லை. அவர் சொல்லிக் கொடுத்தபடி நான் பழைய பாடங்களை நான் பாடியும் எரிந்து விழுந்தார். "என்ன இப்படி பாடுகிறாய்? ஸ்வரஸ்தானமே சரியாக இல்லை. நீக்கு **ஸா** பேசுகிறது. நாவுக்கு **பா** பேசுகிறது. ஸ்வரம் தான் இப்படி என்றால் தாளம் பேதாளம் தான். நீ பாடும் பாட்டை வாசலில் போகும் **நாலு பேர்கள்** கேட்டால் என்னை எந்தமட்டிலும் மதிப்பார்கள்" என்று முகத்தை சுளித்தார்.

"சச்சு! என்று அப்பா ஆபீஸ் அறையிலிருந்து கூப்பிட்டார். என் போதாத காலம் பள்ளிக்கூடத்து ரிப்போர்ட்டை அப்பா இப்பொழுதுதானா பார்க்க வேண்டும்; சச்சு இவ்வளவு நிறைய மார்க்குகள் வாங்கி இருக்கிறாயே, பேஷ், தேவலை. இப்படி நீ மார்க்குகள் வாங்கினால் காலேஜ் வாசற் படியைக்கூட மிதிக்க முடியாது என்பது நினைவிருக்கட்டும். போனவாரம் சர்வ கலாசாலை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் 'அதிக மார்க்குகள் வாங்காமல் சிபார்சின்மேல் வரும் மாணவ மாணவர்களை காலேஜுகளில் சேர்க்கக் கூடாது. இதனால் அதிக மார்க்கு வாங்குகிறவர்களுக்கு இடம் கிடைக்காமல் போய்விடுகிறது' என்றெல்லாம் பேசிவிட்டு நாளை என் பெண் மார்க்கு குறைவாக வாங்கி இருக்கிறாள், எனக்காக அவளுக்கு ஒரு இடம் கொடு என்றால் **நாலு பேர்** சிப்பார்கள்" என்று கோபித்தார் அப்பா.

இதென்ன கூச்சல்? இரண்டு நாளைக்கு முன் வேலை செய்ய வந்த வள்ளிக்கும் அம்மாவுக்கும் வாக்குவாதம். "என்ன அம்மா, என்னால் வேலை செய்ய முடியவில்லை நின்று விடுகிறேன்." என்னால் வேலை செய்ய முடியவில்லை என்றால் நான் கொடுத்த புடவையை கீழே வைத்துவிட்டு போ என்கிறாயே இது நியாயமா?" இது வள்ளியின் குரல்.

"என்னடி ரொம்ப சட்டம் பேசுகிறாய்? மூன்றுநாள் வேலை செய்தவளுக்கு கல்லு மாதிரி புடவையை தூக்கி கொடுக்க மாட்டார்களோ. வேலை செய்ய முடியாதவள் வீட்டிலேயே இருப்பதற்கென்ன? எங்கள் வீட்டில் வேலை அதிகமாகத்தான் இருக்கும். நீ செய்ய வேண்டாம். கொடுத்த புடவையை கீழே வைத்துவிட்டு நட தெரியுமா?" (இது அம்மாவின் குரல்.

"நல்ல மகராசி அம்மா, கொடுத்த புடவையை திருப்பி கேட்கிறாயே உன்னை போல **நாலு பேர்களிடம்** இந்த நியாயத்தை சொல்லு அம்மா" என்று சொல்லியபடி புடவையை வைத்துவிட்டு மூன்றுநாள் செய்த கூலியை வாங்கிக்கொண்டு முணுமுணுத்தவளாய் போய்க் கொண்டிருந்தாள் அவள்.

"என்னா! சாமி பஸ்ஸிலிருந்து ஒரு அடியில் வீடு இருக்கு என்று சொல்லிவிட்டு ஒரு மையில் இழுக்கச் சொல்லி நாலணா கொடுக்கவரயே. வச்சுக்க சாமி. எனக்கு வாணாம்" என்று அண்ணா கொடுத்த காசை வாசற்படியின் மேல் வைத்தான் ரிக்ஷாகாரன்.

"ஏய், இவ்வளவுதான் கொடுப்பேன். எடுத்துப் போகிறாயா போலீஸ்காரனை கூப்பிடட்டுமா? அவன் வந்தால் இந்த காசும்

கிடைக்காமல் உதை வாங்கிப் போவாய், நான் கொடுத்த கூலியே ஜாஸ்தி'' என்று கர்ஜித்தான் அண்ணா.

"நல்லா கூப்பிடு சாமி, அள்ளிபுட்டேனா, திருடிபுட்டேனா எதுக்கு சாமி போலீஸ் காரன்? வண்டியிலே ஏறி வந்தது நீயா, அவனா சாமி! என் நியாயத்தை நாலு பேரிடம் சொல்லு சாமி. ஏழைங்க வவுத்திலே அடிக்காதே சாமி'' என்றெல்லாம் பேசி அண்ணாவின் கோபத்தை அதிகப் படுத்தினான் அவன்.

அண்ணாவுக்கு இருந்த கோபத்தில் எங்கே அவனை அடித்து விடுவானோ என்று எனக்கு பயம். "போகிறது அண்ணா, கூட கொஞ்சம் சேர்த்து காசை கொடுத்தனுப்பு'' என்று அண்ணாவை சமாதானம் செய்து உள்ளே அழைத்து வந்தேன். பேசின கூலிக்குமேல் வாங்கிக்கொண்ட பிறகும், "பொல்லாத காசு குடுத்துபிட்டயே. இதுக்கு பேச்சு. நாலு பேர் இவங்களைப்போல் கூலி கொடுத்தால் நன்னா பொழைச்சுபுடலாம்'' என்று புலம்பியபடி வண்டியை இழுத்துச் சென்றான் அவன்.

× × ×

சண்டையை ஒரு மாதிரி முடித்துக் கொண்டு திரும்பிய அண்ணா ரேடியோவை திருப்பிக் கொன்டிருந்தான். "சச்சு இன்றைய மாதர் நிகழ்ச்சியில் அழகிய பங்களா இல்லா விட்டால் நாலு பேர் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி பேச்சு. அம்மாவின் சிநேகிதிதான் பேசுகிறார். அம்மாவை கூப்பிடு'' என்றான் அண்ணா. இதற்குள் மன்னி ரமணியை அழைத்து வந்து எங்கள் எதிரில் நிறுத்தி "ரமணி, அத்தைக்கு தாயே யசோதா என்னும் பாட்டிற்கு அபிநயம் பிடித்துக்காட்டு'' என்றாள். மூன்று வயது நிரம்பிய என் மருமாள் ரமணியும் தன் மழலை மாறாத சொற்களால் பாட்டை பாடிக் கொண்டு ஆட ஆரம்பித்தாள். "நாலு பேர்கள் கேட்கச் சொன்னால் நாணமிகவாகுதடி "என்னும் அடியைச் சொல்லி கை விரல்களில் மூன்றை காட்டினாள்.'' நாங்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்தோம்.

காலையிலிருந்து இரவு வரையிலும் பலருக்கும், பலவிதமாக காக்ஷிதரும் இந்த "நாலு'' பேர் என்பவர்கள் யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? இவர்களுக்கு சொந்த வேலைகள் என்பதில்லையா? பிறரை குற்றம் சொல்லி பரிகசிப்பது தான் அவர்களின் தொழிலா?

நாலு பேர்கள் என்னும் சங்கம் ஒன்று தனியாக இருக்கிறதா? "நாலு'' என்னும் இந்த இரண்டு எழுத்திற்குத்தான் எத்தனை மகிமையும் சக்தியும் இருக்கிறது. தாரக மந்திரத்தை விட சகதிவாய்ந்த இந்த "நாலு'' என்னும் வாக்கியத்தை கேட்டவுடன் எதற்கும் அஞ்சாதவர்கள் கூட கொஞ்சம் பயப்படுவது தான் விந்தையிலும் விந்தை. இந்த நாலு பேர்களை பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமானால், ரகசியமாய் என்னிடம் மட்டும் சொல்லுங்கள். நானாவது அவர்களிடமிருந்து தப்பமுடியுமா என்று பார்க்கிறேன்.

# அலுமினிய பாத்திரங்கள்



'விசாலம்'

இன்று நம்முடைய நாட்டில் ஈயம், பித்தளை, வெண்கலம், தாமிரம் முதலியவைகளைக் காட்டிலும் அலுமினியப் பாத்திரங்கள் அதிகம் உபயோகப்படுகின்றன. பீங்கான் என்று சொல்லும் இனமல் பாத்திரங்கள் சொற்ப காலம் ஆட்சி செய்தன. ஆனால் அலுமினியமோ வெகு சீக்கிரத்தில் பெருவாரியாக வந்து நம்முடைய தினசரி வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஒரு பொருளாக ஆகிவிட்டது.

இதற்குக் காரணம், இவை விலை மலிவாகவும், லேசாகவும் எளிதில் சூடேறி விடுவதாகவுமிருப்பதனால் பலரும் விரும்பி வாங்கி உபயோகிக்கின்றனர். பித்தளைக்கு ஈயம் பூசுகிறது போன்ற சில்லரைத் தொல்லைகள் இல்லை. ஆனால் ஆசாரமுள்ள பெரியோர்கள் இதை அனுசாரமென்று கருதுகிறார்கள். தற்காலத்திலும் தமிழ் நாட்டிலுள்ள வைஷ்ணவர்கள் வீடுகளில் சமையல் அறையில் உபயோகிப்பதில்லை.

தவிர அலுமினியப் பாத்திரங்களில் உப்பு, புளி சம்பந்தப்பட்ட பொருள்களை நெடு நேரம் வைப்பதனால் ஏற்படும் சொர சொரப்பு, புள்ளி விழுந்து போதல் இவைகளைக் கொண்டு, அலுமினியம் எளிதில் கரைந்து ஆகாரங்களுடன் கலந்து உடல் நலத்தைக் கெடுத்து விடுகிறது என்று சொல்லுகிறார்கள். இதைத் தவறு என்று சொல்வதற்கில்லை. இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்த நிபுணர் ஒருவருடைய அபிப்பிராயந்தான் அடியில் கொடுக்கப் படுகிறது.

★ ★ ★

அலுமினியத்திலே மிகவும் அழகான வடிவத்திலே வித விதமான பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. மற்ற உலோகங்களில் செய்யப்படும் எல்லா விதமான பாத்திரங்களும் அலுமினியத்திலும் கிடைக்கின்றன. கரண்டி, கரண்டி மூட்டை முதல், பெரிய பெரிய தூக்குகள், வாணலிகள் வரை எல்லா வகைகளும், உருக்கி வார்த்த 'வார்ப்படங்க'ளாகவும்தகட்டுப் பாத்திரங்களாகவும் அடிப்புப் பாத்திரங்களாகவும் கிடைக்கின்றன. ஆனால் தற்காலத்தில் சமையல் செய்வதற்கும், சமையல் செய்த பதார்த்தங்களைக் கொட்டி மூடி வைப்பதற்கும் விசேஷமாக உபயோகிப்பதனால் பல விதமான பிரசினைகள் எழுகின்றன.

அதாவது, அலுமினியப் பாத்திரங்களில் சமைக்கப்பட்ட அல்லது வைக்கப்பட்ட ஆகாரங்கள் அலுமினியத்தைக் கரைத்து அலுமினியச் சத்தை கிரகித்துக் கொள்ளுகின்றனவா? அப்படிக் கரையக்கூடிய சத்து உடல் நலத்தைப் பாதிக்குமா? இதனால் ஆரோக்யத்திற்குக் கெடுதி விளையக்கூடுமா என்பதுதான்.

இந்தியாவிலும் மற்ற வெளி நாடுகளிலும் செய்யப்பட்ட பரிசீலனைகளிலிருந்து, சில வகை உணவுப் பொருள்களைத் தயாரிப்பதனால் ஷ்டி வஸ்துக்கள் அலுமினியத்தால் பாதிக்கப்படுகின்றன. இவை அலுமினியத்தோடு சேர்ந்து ஒரு கூட்டுப் பொருளாக மாறலாம். அப்படி மாறிய அந்தப் பொருள்கள் உடல் நலத்துக்குத் தீங்கு செய்யக்கூடும். ஆனால் இது சில வற்றிற்கே தவிர பெரும்பான்மையானவைகள் இப்படி மாறுவதில்லை. அலுமினியத்துடன் சேர்வதனால் கெடுவதுமில்லை.

பொதுவாக, புளி முதலான இயற்கைப் பொருள்களிலிருக்கும் புளிப்பு சத்து (ஆஸிட்) தாவரங்களிலுள்ள அமிலப் பொருள்கள் முதலியவை அலுமினியத்தைப் பாதிக்கின்றன. சொர சொரப்பாகவும், புள்ளிகளாகவும், கரை பிடித்தும் ஆக்கி விடுகின்றன. இவற்றுடன் உப்பும் சேர்ந்திருந்தால் அலுமினியம் இன்னும் அதிகமாகக் கரைகிறது. இது மிகவும் முக்யமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். ஏனெனில் நம் தமிழ் நாட்டுச் சமையலில், குழம்பு, இரசம் முதலியவைகளில் உப்பும் புளிப்புமே பிரதானம். இதைக்

கணக்கெடுத்த நிபுணர்கள் 1000-க்கு 15-முதல் 40-வரை, செய்யும் பதார்த்தத்தின் தரத்துக்குத் தகுந்தபடி கரைகிறதென்று கணக்கிடுகிறார்கள்.

இந்தக் கரைக்கும் சக்தியானது நாம் செய்யும் குழம்பு ரஸங்களிலுள்ள உப்பின் அளவைப் பொறுத்திருக்கிறது. மேற்கூறியவைகளிலிருந்து நம் தமிழ் நாட்டில் உபயோகிக்கப்படும் உணவு வகைகள் அலுமினியத்தை எளிதில் கரைக்கும் தன்மை வாய்ந்தவை என்பது புலனாகும்.

ஆகவே நாம் முக்யமாகக் கவனிக்க வேண்டியது, அலுமினியம் கரைவதனால் ஏற்படக்கூடிய கூட்டுப் பொருள்கள், வயிறு குடல் முதலிய ஜீரண கோசங்களைப் புண் ஆக்குமா? அல்லது நமைச்சலுண்டாக்குமா? அல்லது வேறு விதமாகத் தாக்கக் கூடுமா? அல்லது இவைகளும் ஜீரணிக்கப்பட்டு இரத்தத்தில் கலக்குமா? அப்படி கலந்தால் மற்ற அவயவங்களைப் பாதிக்குமா? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

இந்த சமயத்தில் முக்கியமான ஒரு விஷயம் இது சம்பந்தமாகக் கவனிக்கப் படவேணும். படிக்காரம் என்பது ஒரு அலுமினியக் கலப்புப் பொருள். அமெரிக்காவில் கடந்த 50 வருஷங்களுக்கு மேலாக, நம் நாட்டில் அப்பளம் செய்வதற்கு சோடாவையும் சுண்ணும்பு போடுவதுபோல், படிக்காரத்தை ரொட்டிமாவுடன் கலந்து பேக்கிங் பௌடராக உபயோகித்திருக்கிறார்கள். இப்படிச் செய்யப்படும் ரொட்டிகளில் லக்ஷத்துக்கு ஐம்பது விகிதம் அலுமினியம் சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. நம் நாட்டுச் சமையல் வகைகளில், கரையக்கூடிய அலுமினியம் எவ்வளவு என்பதை மிகவும் அதிகமாகவே கணக்கிட்டாலும் லக்ஷத்தில் ஒன்றரைக்குமேல் போகாது. அவர்கள் உணவில் ரொட்டி உபயோகிப்பதை விட நம்முடைய சாப்பாட்டில் சேரும் ரஸம், குழம்பு இவைகளின் பங்கு அதிகம் என்று கணக்கிட்டாலும் கூட நம் சமையலில் சேரக்கூடிய அலுமினியத்தின் அளவு மிகவும் சொற்பமே.

ஆதலால் அந்த ரொட்டியைச் சாப்பிடுகிற மக்களுக்கு ஷை படிக்காரத்தின் மூலம் நேர்முகமாகச் சேருகிற அலுமினிய சத்தினாலேயே ஒரு விதமான கெடுதலும் ஏற்படவில்லை என்றால், நம் நாட்டில் புழங்கும் பாத்திரங்களினால் ஒரு விதமான கெடுதலும் ஏற்படாது என்றே சொல்லலாம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சுகாதார அதிகாரிகளுக்கு இம்மாதிரி அலுமினியம் உணவில் கலப்பதனால் கெடுதல் ஏற்படக்கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டது. இவைகளைப்பற்றித் தீர ஆலோசித்துத் தெளிந்து கொள்ளும் பொருட்டு சிறந்த விஞ்ஞான நிபுணர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று ஏற்படுத்தி, அவர்களை அடியிற் குறித்திருக்கும் கேள்விகளுக்கு விடையளிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அலுமினியக் கூட்டுப் பொருள்கள் உணவில் கலப்பதனால் உணவின் போஷிக்கும் தன்மை குறைகிறதா? ஆரோக்யத்தைப் பாதிக்கிறதா? அல்லது இப்படிப்பட்ட கலவைகளினால் உணவில் விஷப்பொருள் உற்பத்தியாகக் கூடுமா? (Food poison) அலுமினியக் கூட்டுப் பொருள்களையும், கலந்து வைப்பதனாலோ அல்லது ஒன்றாகச் சேமித்து வைப்பதனாலோ உணவுப்பொருள்களின் தன்மை கெட்டுப் போகிறதா, அல்லது குறைகிறதா என்பவைகள்.

அந்த விஞ்ஞான நிபுணர்கள் இதற்கு விடையாகக் கொடுத்த அபிப்ராயங்கள் பின் வருமாறு :—

பேக்கிங் (Baking) பௌடர் முதலியவைகளை, நேரடியாக உணவுப் பொருள்களோடு கலப்பதனாலோ, அல்லது அலுமினியம் பாத்திரத்தில் சமையல் செய்வதனாலோ, உணவுகளில் சேரக்கூடிய அலுமினியம் உடல் நலத்தை ஒருநாளும் பாதிக்காது.

இதன் பொருட்டு நாய், பூனை, முயல் முதலியவைகளின் மீது ஸோடியம் அலுமினியம் ஸல்பேட், அலுமினியக் கூட்டுப் பொருள்களைக் கொடுத்துச் சோதனை செய்தால் அவற்றின் உடல் நலத்திற்கும், வளர்ச்சிக்கும் சந்ததி விருத்திக்கும் ஒருவிதமான தீங்கும் நேரிடவில்லை. இதன் பின்னர் தங்களைப் பரிட்சித்துக் கொள்ள விரும்பி ஆராய்ச்சி மனப்பான்மையுள்ள சில மனிதர்கள் முன் வந்தனர். அவர்களுக்கு அலுமினியம் டார்டரேட், நிறைய அளவில் கொடுத்துப் பார்த்ததில் விஷத்தன்மை வாய்ந்ததாகவோ, வேறு கெடுதிகள் நேரக்கூடியதாகவோ தெரியவில்லை.

மேற் குறித்த ஆராய்ச்சிகளிலிருந்து நாம் தினந்தோறும் உபயோகிக்கும் அலுமினியப் பாத்திரங்கள் ஆரோக்யத்தைப் பாதிக்காது என்று திட்டமாய்ச் சொல்லலாம்.

சிலவிதமான தேகவாகிற்கு அலுமினியக் கூட்டுப் பொருள் ஒவ்வாததாக இருக்கலாம். (அலுமினியம் இடியோ ஸிங்க்ரஸி) இப்படித் தங்களுக்கு ஒவ்வாதென்று சந்தேகிப்பவர்கள் ஒரு நாளும் அலுமினியப் பாத்திரங்களை உபயோகிக்கவே கூடாது.

பொதுவாக,பால் அலுமினியம் பாத்திரத்தில் காய்ச்சுவதாலும், காய்ச்சின பாலைப் பிறை குத்துவதாலும் கெடுவதில்லை. இதே போல சாதம், வென்னீர், முதலியவைகளையும் அலுமினியத்தில் செய்வதால் பாத்திரம் கரை படிந்தோ, புள்ளிகளாகவோ, ஆவதில்லை. அலும்னியத்தில் காய்ச்சப்பட்டால் தன் இயற்கைக் குணத்தையும் மணத்தையும் சுவையையும் இழப்பதில்லை. ஆனால் செம்பு கலந்த பாத்திரங்களில் காய்ச்சப்படும் பால் மணத்தையும் ஜீவசத்துக்களையும் இழந்து விடுகிறது.

ஆகவே உப்பு, புளி, சம்பந்தப்பட்ட சமையல் வகைகளைச் செய்வதற்கு குற்றமற்றவை என்றாலும் கூட, அலுமினியம் உகந்ததல்ல நமது சமையல்களுக்கு. சுகாதாரத்தை ஒட்டிச் சிறந்ததென்று சிபாரிசு செய்யக் கூடியவைகள் மண் சட்டிகள் தான். இவைகளுக்குமேல் சிலாக்கியமானவை நம் தமிழ் நாட்டில் உபயோகிக்கும் கற்சட்டிகள். இதற்கு ஈடாக எந்தப் பாத்திரத்தையுமே சொல்ல முடியாது.

நமது தற்கால வாழ்க்கையில், சோம்பல் காரணமாகவும், ஊர் விட்டு ஊர் எடுத்துச் செல்வது சிரமம் என்ற காரணத்தினாலும் கற்சட்டிகளைப் புறக்கணித்து விடுகிறோம். வேறு எந்த பாத்திரமும் அளிக்க முடியாத தேக ஆரோக்யத்தை நமது கற்சட்டிகள் அளிக்கும் ஈயத்தினால் ஏற்படும் Lead poison, அலுமினியம் ஒவ்வாதோ என பயம், களிப்பு முதலிய விசாரமின்றி நிர்ப்பயமாய் வேலை செய்யலாம். நம் நாட்டில் சில பணக்காரர்களும், அவர்களது வாழ்க்கை முறையைப் பின்பற்றுகிறவர்களும் காசைக் கொடுத்து தேளைக் கொட்டிக் கொள்வது போல பணத்தைச் செலவு செய்து அனாரோக்யத்தை விலைக்கு வாங்குகிறார்கள்.

அலுமினியத்தால் ஆரோக்யம் கெடுவதில்லை என்றாலும் கூடிய வரையில் இம்மாதிரியான பாத்திரங்கள் உபயோகிப்பதைக் குறைத்துக் கொள்வது நலம். இதைப்பற்றி இன்னொரு முக்கியமான எச்சரிக்கையும் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இப்பொழுது நடைபெற்ற உலக மகா யுத்தத்தின் முடிவுக்குப் பிறகு ஐரோப்பாவின் உடைந்த அலுமினியப் பகுதிகளைக் கொண்டும் பாத்திரங்கள் செய்யப் படுகின்றன. இவை சுத்தமான அலுமினியமல்ல. இதில் ஆரோக்ய விரோதிகளான காரீயம் துத்தநாகம் முதலிய பொருள் கலந்திருக்கின்றன. இவைகளால் தீமைதான் விளையும். சந்தேகமேயில்லை. ஆகவே பாத்திரம் வாங்குகிறவர்கள் சுத்தமானதும் உத்தரவாதமளிக்கப்பட்டதுமான கடைகளில் மட்டுமே வாங்க வேண்டும்.

இவ்வளவு வம்பு தும்புகளுக்கிடையில் மீனமேஷம் பார்த்துக் கொண்டு அலுமினியத்தை வாங்குவானேன்? கையைக் கடுக்க சோப்பும் மணலும் போட்டுத் தேய்ப்பானேன்? அழகாய் கற்சட்டியையும் கற்பானையையும் வாங்குங்கள். ஆசைக்கு வேண்டுமானால், நெய், எண்ணெய் பால் மூடி வைக்க இவைகளுக்கு மட்டும் அலுமினியம் இருக்கட்டுமே. உங்கள் டாக்டர் பில்லும், மருந்துக் கடை பில்லும் கட்டாயம் குறைந்தே தீரும். செய்து பாருங்கள்.

# நினைப்பதும் நடப்பதும்

"ஜயம்"

அன்றைய தினசரிப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்த டாக்டர் லக்ஷ்மியின் மனம் வேறு ஒன்றிலுமே நாடவில்லை. அவள் உள்ளத்தில் ஆழ்ந்திருந்த பல சிந்தனைகளையும் வேதனைகளையும் அது கிளறிற்று. ஆஸ்பத்திரிக்குப் போகும் நேரம் நெருங்கியும் அவள் அதை உணராமல் ஒரு தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். வாசலில் டிரைவர் கார் கொண்டுவந்து நிறுத்திய சப்தமும் அவள் சிந்தனையைக் கலைக்கவில்லை. பேப்பரில் கண்டிருந்த அவள் வாழ்க்கைச் சித்திரத்தைப் பூர்த்தி செய்யும் கடைசிச் சொற்கள்....... ''அவரைப்போல் தர்ம சிந்தனையும் ஏழைகளுக்கு இரங்குபவரும், ஸ்திரீ ரத்தினமும் இவ்வுலகில் பல ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் தோன்றக்கூடும். இவ் வாழ்க்கைக்கும் சமூக சேவைக்கும் இந்திய மாதர்களுக்கு ஒரு வழிகாட்டியாய் அவர் தோன்றுகிறார். ஆதியில் மிக்க சிரம தசையிலிருந்த இவர் வீட்டில் தன் பந்துக்களுக்குக் காட்டும் ஆதரவைப் போலவே ஏழைகளுக்கும்......''

ஆம். பந்துக்கள்! கல்லூரியில் படிக்கும் ஒரு தம்பி, ஐந்து குழந்தைகளுடன் கஷ்ட ஜீவனம் செய்யும் மற்றொரு தம்பி, அடிக்கடி இவள் கையை எதிர்பார்க்கும் சகோதரிகள்... பின்னும் பல பந்துக்கள்!

இவ்வளவு பேருக்கும் ஆதரவளிக்கும் திடமான கற்பக மரம் போல் அவள் இருந்தும் அவள் மனம் ஆதரவு தேடி ஏங்கிற்று. ஸ்திரீகளுக்கு இயற்கையான ஆதரவற்ற ஒரு கேவல யந்திரம் போலவே அவள் தனக்குத் தோன்றினாள். எவ்வளவுதான் செல்வம் கிட்டியும் தான் ஒரு அனாதை, திரவியம் சேமிக்கும் மனித யந்திரம் என்பதை அவளால் மறக்க முடியவில்லை. மனித யந்திரமில்லாமல் பின்......?

அவள் தங்கை—பின்னும் நான்கு வயது சிறியவள். தன் பெண்ணிற்கு விவாகம் என்றும் அவசியம் வந்து நடப்பிக்க வேண்டுமென்றும் எழுதியிருந்தாள். ஏழைதான். தன்னைப் போல் பணக்காரியல்ல. இருந்தும் அவள் வாழ்க்கையை எதிர்த்துப் போராடி, புக்ககத்தில் சுக துக்கங்களை அனுபவித்து ஏதோ சந்தோஷமாய் தன் வாழ்க்கையை நடத்துகிறாள், அதனால் தானோ வாழ்க்கையில் எவ்வளவோ பேருக்காக யமனுடன் எதிர்த்துப் போராடியிருக்கிறாள் பிற்காலத்தில். ஆனால் ஒரு வீட்டில்......ஆம்...... தானும் ஒரு வீட்டில், இருபத்தைந்து இருபத்தாறு வருஷங்களுக்குமுன் ஒரு வீட்டில் மனதில் நம்பிக்கையுடனும், சரீரத்தில் ஒரு இன்ப உணர்ச்சியுடனும் கணவன் கையைப் பிடித்துக் கொண்டு வலதுகாலை முன் வைத்து நுழையவில்லையா?

கணவன்......! அவர் முகத்தைப் பார்த்து எவ்வளவு வருஷங்களாகின்றன? அவர்கள் வாழ்க்கை பிரிந்து இருபது வருஷங்களுக்கு மேலாகிவிட்டன. அந்த இருபது வருஷமாய் அவள் எவ்வளவு இரவுகள் நித்திரையின்றி அவரையும் குழந்தை ரகுவையும்—அவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்கள் என்று கூடத் தெரியாது அவளுக்கு.

அவள் வீட்டை விட்டு வெளிவந்த பொழுது அவனுக்கு இரண்டு வயதுகூட ஆகவில்லை. ஆனால் இப்பொழுது?.....,அவன் பெரிய ஆளாயிருக்க வேண்டும்......இப்பொழுது பார்க்க எப்படி இருப்பானோ?......ஒருவேளை அவன் தன் தந்தையைப் போலவே சாயலிலும் குணத்திலும் ஒத்திருக்கலாம்...... விவாகமும் ஆகியிருக்கக்கூடும். அவன் மனைவி?....அவள் சுபாவம் எப்படியோ?

இந்தப் பத்திரிகை தன் வாழ்க்கையைப் பற்றி தனக்கு ரொம்பத் தெரிந்தாப்போல் எழுதியிருக்கிறதே. ''இந்திய மாதர்களுக்குத்தான் ஒரு வழிகாட்டி போன்றவள்'' என்று! அவர்களுக்குத் தெரியுமா, மற்ற இந்திய மாதர்கள் அனேகம் பேர் அடைந்திருக்கும் பாக்கியத்தைத்தான் அடையும் வழி தெரியாது ஏங்கித் தவிக்கும் அவளுடைய உள்ளத்தை?

அவள் சிந்தனை இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்தான் கணவனுடன் வாழ்ந்த நாட்களில் சஞ்சரித்தது. அவள் தான் அவள் தந்தைக்கு மூத்த பெண். அவர் ஒரு கலாசாலையில் பிரொபஸராய் இருந்தார். பெண்கள்

கல்வி முன்னேன்றம், முதலியவை ஆதரிக்கப் படாத அந்நாட்களிலும் அவள் தந்தை செல்வமாய் வளர்த்த தன் பெண்களுக்குப் பள்ளிக் கூடப் படிப்பும், தனக்கு ஓழிந்த போதில் தானே கல்வி போதித்தும் வீட்டிலும் வெளியிலும் பல ஆக்ஷேபணைகளுக்கிடையில் போதித்து வைத்தார். அவர் ஒரு தீவிர சமூக சீர்திருத்தவாதியாக இருந்தார். பின் இல்லாவிட்டால்?......அதனுல் ஏற்பட்ட விபரீதங்கள் தானே இதெல்லாம்? மற்ற தந்தைகளைப் போலிருந்தால் கஷ்டமோ நிஷ்டூரமோ, அடியோ உதையோ பெண்கள் புருஷன் வீட்டிலே தான் கிடக்க வேண்டும் என்று கண்டிப்பாய் விட்டிருக்க மாட்டாரா? இந்திய மாதர்களில் எத்தனையோ பேர்கள் அம்மாதிரிக் கஷ்டங்களை அந்நாட்களில் அனுபவித்திருக்கிறார்கள். தங்கள் பொறுமையினுல் அவைகளிலிருந்து ஒருவிதமாய் சமாளித்து முன்னுக்கு வந்து அதிருஷ்ட தேவதையின் உதவியால் வயது காலத்தில் குழந்தைகளாலாவது சுகம் அடைந்திருக்கிறார்கள்.

ஆனுல் என் கதை! மேல் நாட்டுப் புஸ்தகங்கள் படித்ததினுலும் என் தந்தை எனக்குக் கூறும் உபதேசங்களாலும், அனுபவமற்ற சிறு வயதில் எது தனக்கு ஹிதமானது என்பதை உணராது நான் வீட்டைவிட்டு வெளிவந்து விட்டேன். அதற்குக் குற்றம் யாரைச் சொல்ல முடியும்? எனக்குச் சுகம் கொடுப்பதாய்ச் செய்த தகப்பனுரைப் பழி கூறுவதா?...இல்லை என்னையே கூறுவதா?......இல்லை, விதி தான், நிச்சயம்.''

''என்மேல் குற்றம் சாட்டுவதற்கில்லை. நான் பட்ட கஷ்டங்களை பொறுக்கக் கூடிய பொறுமை வெகு சிலருக்கே இருக்கக் கூடும். மேலும் கடவுள் என்னை வேறு காரியத்திற்காக பிறப்பித்தார் போலும்! இருந்தும் என் ஹ்ருதயத்தில் ஏற்பட்ட சூனியத்தை நிரப்பக் கூடியது இவ்வுலகில் வேறு என்ன இருக்கிறது?

உலகில் எவ்வளவோ விவாகங்கள் நடக்கின்றன. ஆனுல் அதில் எவ்வளவு பேர் சுகமாய் இருக்கிறார்கள்? இருந்தும் குடித்தனம் நடத்தவில்லையா? என் வரையில் நான் கொஞ்சம் பொறுமையாய் இருந்திருந்தால்! பொறுமை! ஆம் பொறுமை தான். என் மாமியார் கூறும் புத்திமதியும் அதுதான். ஆனுல் நான் அப்பொழுது அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. எனக்கு அவர் புத்தி கூறும் போதெல்லாம் அவர்மேல் எரிச்சல் பற்றிக்கொள்ளும். பாவம்! அடங்காப் பிள்ளையையும் அவளையே எதிர்த்துப் போராடும் ஒரு மகளையும் வைத்துக் கொண்டு அந்த அம்மாள் எவ்வளவு கஷ்டம் அனுபவித்திருக்க வேண்டும்! அன்று தான் அவர் என்னிடம் எவ்வளவு அழாக் குறையாய்க் கேட்டுக் கொண்டார்! சிறுவயதில் புருஷனை இழந்து பெற்ற பிள்ளையே கதி என நம்பியிருக்கும் ஒரு பெண்மணி தன் மனக் கோட்டைகள் சிதைந்தும், பொறுமை இழக்காது, பொறுமை இழப்பவர்களுக்குப் பொறுமை வேண்டுமென புத்தி கூறுவதில் என்ன தவறு! இருந்தும் அப்பொழுது அவர் தன் பிள்ளைக்குப் பரிந்து என்னிடம் அங்ஙனம் கூறுவதாகத் தோன்றியது!

× × ×

என் மாமனுர் இறக்கும்போது தன் மனைவிக்கு ஐந்து வயதில் ஒரு பிள்ளையையும் இரண்டு லக்ஷ ரூபாய் ஆஸ்தியையும் வைத்துச் சென்றார். அவ்விரண்டையும் அரும்பாடு பட்டு பந்துக்களின் வலையில் சிக்காது அந்த அம்மாள் காத்து வந்தாள். இருந்தும் ஆதியிலிருந்தே ''கைம்பெண் வளர்த்த பிள்ளை'' என்கிருப்போல் தாய்க்கு அடங்காப் பிள்ளையாகவே என் கணவர் வளர்ந்து விட்டார். சிறு வயதிலேயே இப்படி இருந்த அவர் மேஜராகி கையில் சொத்தும் கிடைத்த பிறகு இருந்த ஜோரைச் சொல்லவும் வேண்டுமா?

காலாகாலத்தில் விவாகம் செய்து வைக்காவிட்டால் அப்புரம் பிள்ளையைக் கட்டில் கொண்டுவர முடியாது என்பது அந்த அம்மாளின் எண்ணம். ஆகவே அவர் பெண்ணிடத்தில் முக்கியமாய்த் தேடியது அழகுதான். அதனுல்தான் அவர்கள் அந்தஸ்திற்கு ஈடில்லாமல் இருந்தும் என்னை மணக்க அவர் இசைந்தார்.

அழகிய மருமகள் கிடைத்ததில் அவர் தான் ஏதோ புதையல் கண்டெடுத்து விட்டது போல் மகிழ்ந்தார். ஏன், அவர்கூட மிகவும் ஆனந்தத்துடன்தான் இருந்தார் முதலில். எங்கள் விவாகம் ஆனதும் கொஞ்ச காலத்திற்கு அவர் அநேகமாய் வீட்டிலேயே தங்கி இருந்தார். அந்தக் காலங்களில் என் மாமியார் இந்திர லோகத்திலேயே சஞ்சரித்தாள். என்னுல்தான் தன் பிள்ளை திருந்தியதாக என்னைப் போற்றுவாள்.

உலகத்தில் பிள்ளைகளைப் பெற்றவர்கள் மருமகள் வந்தால் தள்ளாத வயதில் சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளலாமே என்று நினைப்பார்கள். ஆனுல் என் மாமியாரோ தன் மகன் எப்படியாவது திருந்தி வீட்டோடு வாசலோடு பிள்ளை குட்டிகளோடு சுகமாய் இருந்தால் போதும் என்று இரவு பகலாய் ஈசனை வேண்டி அதைக் கொஞ்ச காலமாவது கண்ணுரப்

ஆவணக் காப்பக நூலகம்

பார்க்கவேண்டும் என்று ஆவலாலேயே கடந்த இருபது வருஷங்களாய் வாழ்க்கையை எதிர்த்துப் போராடியவர். ஆகவே மருமகள் வீட்டிற்கு வரவும் பிள்ளை கொஞ்சம் அடங்கி இருப்பதைக் காணவும் அளவிலா ஆனந்தங் கொண்டு அவர் வீட்டில் இருக்கையில் நான் அவர் அறையை விட்டு அந்தண்டை இந்தண்டை போக விடமாட்டார் என்னை. அவர் உள்ளே தனியே வேலை செய்கிறாரே என்று உதவி செய்யப்போனால் சிரித்துக்கொண்டு "வீட்டு வேலைகளுக்கென்ன, தானே உன் தலையில்தான் விழப்போகிறது. இப்போ நான் இருக்கையில் கொஞ்ச நாட்களுக்குக் குழந்தையாய்த்தான் இரேன். அவன் கூப்பிடுகிறாப் போல் இருக்கிறது, போ" என்று துரத்தி விடுவார்.

ஆரம்பத்தில் இரவு பகலாய் அவருடன் பேசிக்கொண்டே இருப்பதில் லஜ்ஜையுடன் கூடிய ஒருவித இன்பம் இருக்கத்தான் செய்தது. எங்களைச் சுற்றிலுமுள்ள உலகத்தைப் பற்றிய சிந்தனைகளோ, கவலைகளோ எங்களுக்கு இல்லை. என் கணவருடைய நண்பர்கள்—அவர்களை நான் அப்பொழுதுதான் பார்த்தேன்—அவர்களுக்குக்கூட அவர் ஏதாவது சாக்குச் சொல்லி அனுப்பிவிடுவார். அவர்கள் கேலி செய்துவிட்டுப் போய்விடுவார்கள். அந்த வேளைகளில் என் மாமியாரின் கண்களில் சேர்ந்த கண்ணீர்தானே அப்பிரகாசம்?

இப்படியே சென்றது எங்கள் வாழ்க்கை. எவ்வளவு மாதங்கள் என்று சொல்ல முடியாது. ஏழு, எட்டு மாதங்கள்தாமிருக்கும். சொப்பன உலகில் சஞ்சரித்த எங்கள் உலகம் இன்ப மயமாகவே இருந்ததில் ஆச்சரியமென்ன?

நாட்கள் செல்லச்செல்ல மனதில் ஒருவிதச் சலிப்பு உண்டாகத் தொடங்கியது. அதைக் கண்டு என் மனம் அஞ்சியது. இவ்விபரீதத்தை அவரிடமிருந்து மறைக்க முயன்றேன். "இவ்வளவுதானா உன் அன்பு" என்று ஏளனம் செய்வாரோ என்ற பயம். எங்கு நம் மனப்பான்மையைக் கண்டுகொண்டுவிட்டாரோ என்று நான் அவரைக் கவனிக்க ஆரம்பித்தேன். அவரும் என்னைப் போலவே தன் மனதில் உண்டான சலிப்பை மறைக்க முயலுவதைக் கண்டேன். என் மனதில் உண்டான மாறுதலைக் கண்டு எனக்கு பயம் உண்டாயிற்றென்றால் அவர் உள்ளத்தைக் கண்டதும் எனக்கு துக்கம் தொண்டையை அடைத்துவிடும் போலிருந்தது.

கலியாணம் ஆகி இன்னும் ஒரு வருஷம் ஆகவில்லை. அதற்குள் தாம்பத்திய வாழ்க்கையில் பத்து வருஷத்தியப் பழக்கத்தினால் ஏற்படக்கூடிய அலுப்பு! இப்பொழுதுதான் புரிகிறது. மேல் நாட்டு விவாகங்களில் அனேகம் ஹனிமூனிற்குப் பிறகு விவாக ரத்துக் கோர்ட்டில் வந்து முடியும் இரகசியம்! ஆனால் அன்று எனக்குத் தெரியவில்லை. திரும்பவும் அவர் தன் நண்பர்களுடன் சேருவதாய் எண்ணி அவரிடம் முன்னிலும் அதிக எச்சரிக்கையுடன் அவர் கொஞ்ச நஞ்சம் வெளியே போவதையும் தடுக்க முயன்றேன்! அதற்காக என் மனதில் ஏற்பட்ட சலிப்பையும் அடக்கி அவருடன் ஆனந்தமாய் பேச முயலுவேன். என் மனதில் சலிப்பு ஏற்பட்ட அதே காரணத்தினாலேயே அவர் மனத்திலும் ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற எண்ணம் என் குருட்டு புத்திக்குப் படாத விசித்திரம்தான் எனக்கு இன்று நினைத்தாலும் வியப்பாய் இருக்கிறது. என் விதிதான் அப்படிச் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் அவரிடமிருந்து கொஞ்சகாலம் பிரிந்திருக்க முயற்சி செய்திருக்கமாட்டேனா? அதைவிட்டு ஒரு நாள் அவரை எரிச்சலுடன் கேட்டேவிட்டேன்.

அவர் கண்ணாடியின் முன் அலங்கரித்துக்கொண்டிருந்தார். நானும் அந்தக் கிராப்புத் தலையை எவ்வளவு நாழிகைதான் வாருகிறார் என்று சற்று எரிச்சலுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். வாயிலில் வண்டி காத்திருந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவர் அன்றுதான் வெளியே கிளம்பிக்கொண்டிருந்தார். ஜரிகை வேஷ்டியும் பட்டுச் சட்டையும் அங்கவஸ்திரமும் அணிந்து அவர் கண்ணாடிமுன் நிற்கும்போது பார்க்க அழகாய்த்தான் இருந்தார். இருந்தும் அந்தக் காட்சி என் மனதில் வேதனையும் தந்தது. 'யாரைப் பார்க்க இந்த அலங்காரம்?' என்று என் மனம் பதைபதைத்தது. ஆத்திரத்தால் வார்த்தைகளும் வாயில் வந்துவிட்டன.

"எங்கு போகிறீர்கள் இவ்வளவு தடபுடலாய் அலங்கரித்துக்கொண்டு?" என்றேன்.

அவர் கையில் சீப்புடன் நிதானமாய் என்னைத் திரும்பி நோக்கி "அவசியம் தெரிந்தாக வேண்டுமோ?" என்று கடுகடுத்தார்.

"இல்லை, எந்தப் புண்யவதியைக் காண?" என்றேன். எங்கிருந்து இவ்வளவு துணிச்சல் வந்ததோ எனக்கே வியப்பாய் இருக்கிறது.

அவர் நெற்றி நரம்புகள் தடித்தன. "எந்தப் புண்ணியவதி என்று உனக்குத் தெரிய வேண்டுமா? வேண்டுமானால் அழைத்து வருகிறேன். நானும் பார்க்கிறேன், வரவர ரொம்ப மிஞ்சி விட்டது உன் நாக்கு. இஷ்டமிருந்தால் உன்னை

வீட்டை விட்டு விரட்டி அவளை அழைத்துக் கொண்டு வந்து வைத்துக் கொள்ளுவேன். ஆமாம்!''

விதி என் வாயை மூட மறுத்தது. எங்கள் வெளிப்படையான சண்டை அன்றுதான் தொடங்கியது. என் பொல்லாத வாய் துடுக்காய் "அழைத்து வாருங்களேன். மஞ்சனீர் சுற்றி அழைக்கிறேன். நீங்கள் ஒன்றும் விரட்ட வேண்டியதில்லை. நானே போகத் தயார்!'' என்றது.

வெறி கொண்டவர் போல் ஓடிவந்து என்னை ஓர் அறை அறைந்தார். ஐயோ! அன்று அவர் அருகில் வந்ததும் வாயினின்றும் ஒருவித நாற்றம் கிளம்பி என் நாசியைத் துளைத்தது; என் அடிவயிற்றை என்னவோ சங்கடம் செய்தது. தலை சுற்றவும் பக்கத்திலிருந்த நாற்காலியைப் பிடித்துக்கொண்டேன். எவ்வளவு நாட்களாய் மறுபடியும் இந்தப் பழக்கம் ஆரம்பித்து விட்டது. ஐயய்ய! நாற்றமே!

அன்று வெளியே சென்றவர் இரவு வெகு நேரம் வரையில் வீடு திரும்பவில்லை. நான் தள்ளாடிக்கொண்டு கீழே வந்தேன். மாமியாருடன்கூட வேலை செய்தாலாவது சற்று மனம் நிம்மதியடையும் என்று, என்னைக் கவலையுடன் நோக்கினார் அவர். பிறகு "எண்டி, எங்கேடி அவன் கோபமாய்ப் போகிறான்?'' என்று வினவினார்.

"தெரியாது'' என்று என் வாய் கூறுகையிலேயே கண்களில் நீர் துளித்துக் குரல் கம்மியது.

இரவு வெகு நேரம் அவருக்காகக் காத்திருந்தோம். பிறகு அவர் சாப்பாட்டிற்கு வரமாட்டார் என்று தீர்மானித்து நாங்கள் ஏதோ இரண்டு கவளம் போட்டுக் கொண்டு படுக்க ஆயத்தம் செய்தோம். நானும் தன்னுடன் படுக்க ஏற்பாடு செய்வதைக் கண்டு மாமியார் அதிசயத்துடன் "மாடிக்குப் போகலை?'' என்று கேட்டார்.

என் நெஞ்சு அவமானத்தாலும் துக்கத்தாலும் விண்டு விடும்போலிருந்தது. 'இல்லை' என்பதற்குத் தலையசைத்துவிட்டுப் படுத்துக் கொண்டேன். என் அருகில் அவரும் நிம்மதியின்றிப் புரண்டுகொண்டிருந்தார். பிறகு படுக்கை கொள்ளாதவராய் எழுந்து உட்கார்ந்து கொண்டு "லக்ஷ்மீ! நான் ஒன்று சொல்லுகிறேன் கேள். புருஷன் கோபித்தாலும் தழைந்து போகவேண்டியது ஸ்திரீகளின் தர்மம். பொறுமைதான் பெண்களின் பூஷணம். இன்று நீ சண்டை போட்டுக்கொண்டதால் இப்படியே இருந்துவிடப் போகிறதா உங்கள் உறவு? சற்று நேரம் கழித்து அவன் சிரித்துக்கொண்டு வரும்போது உன் கோபத்தை அவன் மீது காட்டாதே! நான் பெரியவள், அனுபவத்தில் சொல்லுகிறேன். பொறுமைதான் குடித்தனம் நிலைக்க ஹேது வாகும் சங்கிலி. அதுதான் கடைசியில் நன்மை தரும்!'' என்று உருக்கமாய் புத்தி கூறினார்.

இன்று நினைத்தாலும் அவர் உருக்கத்துடன் கூறிய மொழிகளும் அவர் முகமும் என் கண் முன் நிற்கின்றன. ஆனால் அன்று அவ்வருமை மொழிகள் என் செவிகளில் ஏறவில்லை. "பொறுமையாம், தன்வரையில் கஷ்டம் வராதபோது பிறருக்குப் பொறுமை வேண்டும் என்று உபதேசிப்பது எவ்வளவு சுலபமானது'' என்று என் மனம் ஏளனமாய் நினைத்தது.

நடு நிசியில் அவர் வீடு வந்து சேர்ந்தார். நடக்கக்கூட அவரால் முடியவில்லை. அவரைக் காண்கையிலேயே அருவருப்புக் கொண்டது என் மனம். "போய் கையைப் பிடித்து அழைத்துப் போடி!'' என்றாள் மாமியார். ஆனால் என் கால்களும் கைகளும் வேலை செய்ய மறுத்துவிட்டன. அவர் என்னை வேதனையுடன் ஒரு விதமாய்ப் பார்த்துக் கொண்டு தானே அவரைப் பிடித்துக்கொண்டு மாடிக்கு அழைத்துச் சென்றார். அவர் திரும்பி வரும்போதும் நான் வாயிற் கதவைத் தாளிடவும் மறந்து ஸ்தம்பித்து நிற்பதைக் கண்டு "ஸ்தம்பித்து நிற்பதால் காரியம் ஒன்றும் நடவாது. போய் படுத்துக்கொள்'' என்றார் சற்று கடுமையாகவே. அவர் வாயிற் கதவைத் தாளிட்டுக்கொண்டு வரவும் நான் ஏதோ யந்திரம்போல் நடந்து சென்றேன். ஆனாலும் கட்டிலில் படுக்க மனமில்லாமல் தரையில் படுத்தேன். இரவு வெகு நேரம் வரையில் அழுது அழுது என் கண்கள் வரண்டு விட்டன. விடியற்காலையில் நன்றாய்க் கண் அயர்ந்துவிட்டேன்.

சூரிய வெளிச்சம் கண்ணில் பட்டுக் கூசவும் திடுக்கிட்டுக் கண் விழித்தேன். என் தலைமாட்டில் அவர் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் வெட்கம், அவமானம், பச்சாதாபம் யாவும் நிறைந்திருந்தன. இருந்தும் அதைக்கண்டு என் மனம் இறங்கவில்லை. நான் எழுந்திருக்க முயன்றதும் அவர் தன் கரங்களால் தடுத்து "என் அவசரம்? இரவு முழுவதும் தூங்கவில்லை. சற்று தூங்கிவிட்டுப்போ'' என்றார். அவர் ஸ்பர்சம் பட்டதும் நான் ஸர்ப்பம் தீண்டியதுபோல் துள்ளியெழுந்தேன்.

(அடுத்த இதழில் முடியும்)



# ஐந்து நிமிஷம்!

~ குகப்ரியை ~

1

ஆம். ஐந்து நிமிஷம்தான். அவர் அந்த உயர்ந்த மதில்களுக்கப்பால் கைகள் விலங்குகளால் பிணைக்கப்பட்டு நின்று கொண்டிருக்கிறார். நான் இங்கே, அட விதியே, நான் போலீஸ்காரர்களோடு வெளியில் நின்று கொண்டிருந்தேன். ஹிருதயம் படீர் படீர் என்று அடித்துக் கொண்டிருந்தது. அந்த பதை பதைக்கும் வெய்யிலிலும், குளிரால் நடுங்குவதுபோல் என் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ஐந்தே நிமிஷம்தான் சந்திப்பு. அது க்ஷணமாய் ஓடிவிட்டது.”

× × ×

பழைய நடந்துபோன சமாசாரங்களை எண்ணி என்ன பிரயோஜனம்? என் நெஞ்சை வாள்போட்டு அறுத்துக் கொண்டிருக்கிறது பழங் கதைகள். இதை யாரிடம் சொல்வேன்; யார் தான் காது கொடுத்துக் கேட்பார்கள்? யாராவது ஒருவர் இருவர் செவி கொடுத்துக் கேட்டாலும் ‘அம்மா, நீ பிறந்தவேளை அப்படி. தெய்வத்தை நினைத்துக்கொள்’ என்கிறார்கள். தெய்வமாவது... அதிர்ஷ்டஹீனர்களுக்கு தெய்வம் என்ன உதவி செய்கிறது? துன்பத்திலேயே மூழ்கி கிடப்பவனுக்கு தெய்வம் ஒரு ஒத்தாசையும் செய்கிறதில்லை. அழுகிறவனுடைய கண்களைத் துடைக்கிறதா? கடவுளாவது கடவுள். எங்கேயோ ஸ்வர்க்கமாம். அதிலே ஒய்யார நடை நடந்துகொண்டிருப்பார்.... அவர் எப்பொழுதும் பெண்ணுக்கு கீழ்ப்படிகிறவர். எவனுக்கு ஸ்ரீ தேவி அருள் பண்ணுகிறாளோ அங்கே போய் இருவரும் அனுக்ரஹகம் செய்வார். என்னைப்போல தரித்திரத்திற்கு யார் அருள் செய்வார். அது துரதிர்ஷ்டந்தான். துர்பாச்யம் தான் என்னை வளர்த்தது. பொல்லாத விதி என்னை செல்வம் கொஞ்சுகிறது. ஆதலால் நான் கடவுளை ஏன் கூப்பிட வேண்டும். துர்பாக்கியத்தைத் தான் கூப்பிட வேண்டும். அது ஒரு பாராங் கல்லை எடுத்துக் கொண்டு வரும். என் தலையின்மேல் போட்டுவிட்டு சந்தோஷமாய் போய்விடும். ஒரு தடவை துரதிர்ஷ்டத்தை அழைத்தேன். ஏழை கிராஜ்ஜுவேட்டுக்கு மாலையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. இரண்டாவது தடவை கூப்பிட்ட பொழுது இரண்டு குழந்தைகள் வந்தன. மூன்றும் தடவை கூப்பிட்ட பொழுது வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது. கொலைகாரன் என்று குற்றஞ் சாட்டப்பட்டு அவர் ஜெயிலிலே நிற்கிறார். மரண தண்டனை விதித்தாய் விட்டது. இனியால் யாரை, எதற்காகக் கூப்பிடவேண்டும்?

இந்த ஏழ்மைதான் எல்லாக் குற்றங்களுக்கும் காரணம். உலகம் அவரைத் தூக்கில் தான் போடட்டும், துப்பாக்கியில்தான் சுடட்டும், நான் நிச்சயமாய் சொல்லுவேன். அவர் குற்றவாளியேயல்ல. ஏழை, பசித்தவன். கொலைவெறி கொண்டவனல்ல. வழி தவறியவன், அவனை பாபி என்று சொல்லாதே, பசித்தவனென்று சொல்.

அவர் என்ன செய்தார்? எப்படிப்பட்ட பாவத்தைச் செய்தார்? உள் புகுந்து பார்த்தால் ஒன்றுமே இல்லை. இந்த பாழும் வயிற்றுக்காக, எனக்காவும், துரதிர்ஷ்ட குழந்தைகளுக்காகவும் ஏதோ முயற்சி செய்தார். சட்டம் இந்த முயற்சியை கொலை குற்றமாக ஆக்கிவிட்டது. தூக்குதண்டனையும் விதித்துவிட்டது. உலகம் அவரை என்ன நினைத்தால் என்ன? அவர் குற்றவாளி இல்லை. இதை நூறாயிரம் கோயிலில் வேணுமானாலும் சொல்லுவேன், ஏழ்மைதான் குற்றம்.

பசியின் கொடுமையால்தான் வழி தவற நேரிட்டது, திருடினது, கொள்ளை அடித்தது எல்லாம் இந்த பாழும் வயிற்றுக்குத் தான். நீதிக்கண் கொண்டு பார்த்தால், அவர் பாபி. குற்றவாளியல்ல. கொலைகாரத் திருடன். ஆனால் கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். உலகத்தில் ஏழைகளுக்குத் தானா நீதி, நெறி இவையெல்லாம்? அமர்சந்த் ஸேட் கிராமத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் கள்ளுக்கடைக்குப் போவதற்கு பணம் கொடுத்துக் கொடுத்து கிராமத்திலுள்ள எல்லா நிலங்களையும் தனக்கு சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறான். நூற்றுக் கணக்கணக்கான குழந்தைகள் வீடு வாசலை இழந்து மடிந்து போயிருக்கின்றன. உலகத்தின் கண்களுக்கு அவன் பாவியில்லை! இந்த அப்பாவி மனிதர் செய்த சின்னக் குற்றந்தான் பாவம். இவர் ஒருவரை உலகத்திலிருந்து ஒழித்து விடுவதினாலும் உலகம் அப்படியே புண்ய பூமி ஆகிவிடுமா?

## 2

அரசாங்கத்தாரிடமிருந்து நேற்றுக் கடிதம் வந்தது. அவர் என்னைப் பார்க்க விரும்



புகிறாராம்...கடைசியாக, நாளன்றைக்கு தண்டனை. அவருடைய கடைசி ஆசை என்னையும்குழந்தையையும்பார்க்க வேண்டுமாம். போனேன். அவரைக் கடைசியாய் பார்ப்பதற்கு. அதைப் பார்க்கப்போனேன் ? விஷயம் தெரியும். மிருத்யுதேவதை அவர் பிடறியில் உட்கார்ந்திருந்தான். விஷயம் எல்லாருக்கும் தெரியும். இருந்தாலும் இப்பொழுது உயிரோடிருக்கிறார். இன்னதென்று தெரியாமல் ஒரே குழப்பமாய் போனேன். நீங்களே யோசித்து பாருங்கள். உங்களுக்கு நிரம்பவும் வேண்டிய ஒருவர் இந்த நிலையில் இருக்கிறார். நீங்கள் பார்க்கப் போனீர்கள். இந்த ஐந்து நிமிஷத்திற்கப்புறம் அவருடைய சவத்தைத்தான் பார்க்க முடியும். நான் சட்டத்தை குற்றம் சொல்லவில்லை. நியாயத்தை எதிர்க்கவில்லை. மனிதத் தன்மையைக் கேட்கிறேன். பதில் சொல்லட்டும். நியாயம் என்பது ஊமை, செவிடு, குருடு. அதன் எதிரில் எவன் நிற்கிறானோ அவன் தான் அதை பரிசோதித்துத் தெரிந்து கொள்ள முடியும். உங்களுக்கு ஹிருதயம் என்று ஒன்றிருந்தால் எனக்காக பதில் சொல்லுங்கள்.

முதலில் பார்த்தவுடன் அவர் கால்களில் விழுந்து பாதங்களை முத்தமிட வேணும். அவர் மார்பிலே தலையைச் சாய்த்து அழ வேணும். "எனக்காக நீங்கள் காத்திருப்பீர்களா ? வாழ்க்கையில் நான் ஒருத்தி வந்து சேராமலிருந்தால் இவ்வளவு கஷ்டநஷ்டம் ஏற்பட்டிருக்காது. வாழ்க்கை கசந்து போனதற்கு என் வருகைதான் காரணம். எங்களைக் காப்பாற்றுவதற்குத் தான் தகாத மார்க்கம் கைக்கொள்ளும்படி நேர்ந்தது, என்று என்னென்னமோ சொல்லவேண்டுமென்று நினைத்திருந்தேன். நான் நின்றுகொண்டிருந்த இடம் ஜெயிலுக்கு வெளியே. இடுப்பிலே குழந்தை கோபாலன். "அம்மா, நாம் எங்கே போகப் போகிறோம் ? என்ன பதில் சொல்லுகிறது? என்ன சொன்னால்தான் புரியும். இருந்தாலும் 'அப்பாவுக்கு உன்னைப் பார்க்கவேண்டுமாம், அதற்குத்தான் போகிறோம்' என்றேன். அவனுக்கு சந்தோஷம். "அப்பா ஏன் ரொம்ப நாளா ஆத்துக்கு வரவேயில்லை. அப்பாவை பார்த்ததும் காசு கேட்பேன். கோலி, பம்பரம் எல்லாம் கேட்பேன். முன்னி ஒரு சொப்புக் கூட எனக்குக் கொடுப்பதில்லை. அப்பாவைக் கேட்டு நிறைய காசு வாங்கி நிறைய சொப்பு வாங்குவேன்'' என்றான்.

என் ஹிருதயம் பிளந்துவிடும் போலிருந்தது. ஐயோ ! பாவம் ! அந்தக் குழந்தைக்கு என்ன தெரியும் ? உன் தகப்பனார் யமனுடைய மடியில் உட்கார்ந்திருக்கிறார். வாழ்க்கை மணிக்கணக்கில்தான் இருக்கிறது. கூண்டில் அடைப்பட்டிருக்கிறார் என்றெல்லாம் சொல்ல நினைத்தது மனம். வாயில் வார்த்தைகள் ஒன்றுமே வரவில்லை. வேறொன்றும் சொல்லத் தோன்றாமல் 'ஸ்வாமியை நினைத்துக்கொள்' என்று சொன்னேன். கோபாலன் என் புடவைத் தலைப்பைப் பிடித்து இழுத்து 'அப்பா எப்போ வருவார்? என்னைகூட கூட்டிண்டு போவாரா ? நான் ஜயகோவிந்தனுடைய சைகில் மாதிரி ஒரு சின்ன சைகிள் கேட்பேன். நீ வாண்டான்னு சொல்லக்கூடாது அம்மா. அவன் வந்து அவன் சைகிளை தொடவே கூடாது என்று சொல்லுகிறான். தொட்டால் உடைந்து போய்விடும் என்கிறான். தொட்டால் உடைந்து போய்விடுமா ? அவன் ரொம்ப பொல்லாதவன். முன்னியைக்கூட அவன் சைகிளை தொட விடுகிறதில்லை. என்னுடைய சிலேட்டை மட்டும் அவன் உடைத்தான். வாண்டாமென்றால் பிரமாதப் படுத்துகிறான். இதையெல்லாம் அப்பாவிடம் சொல்லப் போகிறேன்.'

## 3

"உள்ளே இருந்து கூட்டிக்கொண்டு வா" என்று ஜெயிலர் கத்தினான். அந்த பிரம்மாண்டமான சுவற்றிற்குள் கடவுளின் உயர்ந்த சிருஷ்டியாகிய மனுஷ்யர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். உலகத்தில் நான் ஒருத்திதான் அபாக்யவதியா என்ன ? இவரைப் போலவே நூற்றுக் கணக்கானவர்கள் அங்கே இருந்தார்கள்.

நான் ஒரு இருண்ட அறைக்கெதிரில் போய் நின்றேன். கோபாலன் பயத்தினால் என்னை கட்டிக்கொண்டான். 'ப்ரகாச்' என்று கூப்பிட்டான் சிப்பாய். நான் நாற்புறமும் திரும்பிப் பார்த்தேன். மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள்தான் அங்கே இருந்தார்கள். அந்த அறையின் சுவர்களுக்கு பேசும் சக்தி இருக்குமானால் எத்

தனே கதைகள் தான் சொல்லுமோ? அந்த அறை முழுவதும் எமதூதர்கள் வட்டமிடு வதுபோல் தோன்றிற்று.

ஹரே ஹரே ஜண் ஜண் என்ற மணி ஓசை. மெலிந்த களைத்த ஒரு அழகிய இளை ஞர் கதவருகில் வந்து நின்ருர். இவர்தான் அந்த இருள் கூட்டத்திலிருந்த பிரகாச்—என்னுடைய இருண்ட வாழ்க்கைக்கு கடைசியாக ஒளி கொடுக்கும் பிரகாச். குழந்தை கோபாலனுடைய எல்லையற்ற பேரன்புக்குப் பாத்திரமான பிரகாச்.

"அம்மா! ஐந்து நிமிஷ நேரந்தான் பேச லாம். சீக்கிரம்" என்று சொல்லிவிட்டு சற்றே எட்டி நின்றுன் காவற்காரன்.

அவருடைய கைக்கு எட்டாத தூரத்தில் தான் நான் நிற்கவேண்டுமாம். நான் ஏதா வது விஷத்தைக் கொடுத்து விடுவேனே என்ற பயம் போலிருக்கிறது. தாடியும், மீசையும் வளர்ந்திருந்தது. தலைமயிர் தாறு மாறுய் கலைந்திருந்தது. உடம்பு இளைத்து துரும்பாய் இருந்தது. "கோபு அப்பாவுக்கு நமஸ்காரம் பண்ணு" என்று சொன்னேன். தரையில் விழுந்து பணிந்தான் அவன். நானும் வணங்கினேன். என்னென்னமோ பேசவேணும் என்று போயிருந்தேன். ஒரு வார்த்தைகூட வாயைவிட்டு வெளியே வரவில்லை. அவர் கையை உயர்த்தி 'சௌ...க்...ய....மாய் இருங்கள். என்று ஆசீர்வாதம் செய்தார். இது தான் கடைசி சந்திப்பு—கடைசி ஆசீர்வாதம், கடைசி பேச்சு. வேறென்ன சொல்வதற்கு இருக்கிறது. சற்று நேரம் மௌனம். என்னையும் குழந்தையையும் ஏறஇறங்க ஒரு முறை பார்த்துவிட்டு பெருமூச்செறிந்தார்-- நாளைக் காலையில், வந்து சவத்தை வாங்கிக் கொண்டு போ ஜெயிலரிடம் சொல்லி யிருக் கிறேன்.'

இந்த வார்த்தைகளை எப்படித் தான் சொன்னரோ. விலைமதிக்க முடியாத அந்த ஐந்து நிமிஷத்தை எனக்கு ஒரு விதமாகவும் உபயோகித்துக் கொள்ள தெரிய வில்லையே. உலகமே தலைகீழாய் சுற்றுவது போல் தோன்றிற்று. 'அப்பா ஆத்துக்கு வரமாட் டாயா?' என்றுன் கோபு. என் ஹிருதயம் சுக்கு நூருகச் சிதறுவதுபோல் தோன் றியது.

"கோபு நான் எங்கேயோ போய்க்கொண் டிருக்கிறேன். சமத்தாய் படி. அம்மாவை தொந்தரவு செய்யாதே."

அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரை யாய் பெருகிக் கொண்டிருந்தது. வெறும் கற்சிலைபோல் நின்றிருந்தார்.

"அப்பா, முன்னி என் சிலேட்டை உடைத்து விட்டாள். புது சிலேட் வாங்கித் தரையா?"

ஒரு நீண்ட பெருமூச்சு "கோபாலனுக்கு ஒரு சிலேட் வாங்கிக் கொடு." எனக்கோ கண்ணும் தெரியவில்லை. காதும் கேட்க வில்லை. என்னைச் சுற்றிலும் ஒரு பெரிய இருள் சூழ்ந்து என்னை விழுங்குவது போல் தோன்றிற்று.

"குழந்தைகளை ஜாக்கிரதையாய் பார்த் துக் கொள். கோபுவை நன்ருய் படிக்கவை. கவலைப் படாதே. விதி அவ்வளவுதான்." 'ஆனல்' என்று சொல்ல வாயெடுத்தேன். அதற்கு மேல் பேச்சு எழவில்லை."

"ஐந்து நிமிஷம் ஆய்விட்டது" என்றது சிப்பாயின் இடிகுரல்.

"நல்லது. குழந்தைகளைக் கவனித்துக் கொள். பகவான் உனக்கு தைரியத்தைக் கொடுக்கட்டும். இன்னெரு ஜன்மத்தில் சந்திப்போம்."

"சீக்கிரம்! நேரம் ஆய்விட்டது" என் றுன் காவற்காரன்

(ஒரு ஹிந்திக் கதையைத் தழுவியது)




# தேய்ந்த கனவு

✦ எஸ். என். ராஜலக்ஷ்மி ✦

## 1

**வா**ழ்க்கையில் உள்ளதை உள்ளபடி சித்திரிப்பதுதான் இலக்கிய முறை என்கிறார்கள் அறிவாளர்கள். அது முக்காலும் உண்மைதான். ஆனால் உள்ளதை உள்ளபடி சித்திரிக்க முற்படுவோமானால் மனித வாழ்க்கை அநேகமாய் சோக நாடகமாகவேதான் போகிறது.

அநேக இன்ப நிகழ்ச்சிகளை கனவில்தான் காணமுடிகிறதே ஒழிய நனவில் இன்ப நிகழ்ச்சிகளை அதிகமாகக் கண்டு இன்பமெய்துவது மனித வாழ்க்கையில் ஓரளவு குறைவுதான்.

அதுபோலத்தான் ராதையின் வாழ்க்கையும் ஒரு இன்பக் கனவாகவே முடிந்தது. அவள் வாழ்க்கையின் நினைவுகள் கோரமும் பயங்கரமும் கொண்டனவாகியது.

ஒளியிழந்த கண்களைப்போல கண்ணிருந்தும் குருடியாகிவிட்டாள் அவள். அவளும் உலகத்தாரைப்போல் இப்பாரத மனித வர்க்கத்தில் உதித்தது பெண் தான். ஆனால் அவளது உள்ளத்தின் உணர்ச்சி புறம்போக்காகவே இருந்தது. எவ்வளவோ சிந்தனைச் சிதராகிய புதுக் கற்களால் ஆசைக் கோட்டையை வானளாவக் கட்டிக் கொண்டிருந்தாள். ஆனால் அவைகள் நீர்க்குமிழிபோல் சட்டென்று உடைந்து போய்விட்டன. அதன்பின் அவள் ஒரு சோகச் சித்திரமாய்த்தான் விளங்கினாள். தன் வாழ்க்கையில், தன் யௌவன மாளிகையின் முதற்படியில் காலை வைக்கும்போதே, தடுக்கி விழுந்த தன் நிலைமையை எண்ணி வருந்தாமலிருக்க அவளால் முடியவில்லை.

அவள் வாழ்க்கைப் பாதையில் அவள் எதிர்பாராது முளைத்து எழுந்த இந்த சோகச் சித்திரத்தை எண்ணி தன் மனதைக் குழப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அன்று கார்த்திகைப் பௌர்ணமி. அன்றைய கால நிலையும் அவள் சிந்தனையைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தது. வெண்ணிலவு புறப்பட்டு எழுந்த அந்த மாலை நேரம் நிரம்பவும் மப்பும் மந்தாரமுமாய் கிடந்தது. இடையிடையே வெண்ணிலவு வானைப் பிளந்து கொண்டு வருவதும், மேகங்கள் வெண்ணிலவை தங்கள் அன்புப் போர்வையால் தழுவி மறைத்து விடுவதுமாக இருந்தது.

இதே நேரத்தில் இந்த நாளில் அவள் நெஞ்சத்திலே அன்பின் உளியால் செதுக்கி விடப்பட்ட அந்த மனித விக்ரஹத்துடன் விளையாட்டும் வேடிக்கையும் இன்பமுமாய் கழித்தது அவள் மனத்திரையில் சலனப் படம் போல் வீழ்ந்தது.

## 2

**அ**ன்று அவள் கள்ளங்கபடமறியாத வெள்ளைச் சிறுமி. வயது ஒரு மாமாங்கத்தைத்தான் கடந்திருந்தது. உடல் மாதவிக் கொடிபோல் துவண்டது. அவள் உள்ளமும் தேவையற்ற நிலையில் நிறைந்து கிடந்தது. அவள் சிற்றறிவும் நன்கு சாணை தீட்டப்பட்ட கூறிய கத்தியைப் போலிருந்தது. அவள் சிறுமிதான். பாரத உலக ஞானத்தையும் சாஸ்திரங்களையும் அறியப் போதுமான சக்தியில்லைதான். ஆனால் அவள் உள்ளத்தில் தெய்வ நம்பிக்கையின் சாயல் தோய்து கிடந்தது. சில நாட்களாகவே அவள் ஹிருதயத்தின் ஆழத்திலிருந்து தணித்த ஒரு அன்புச் சுவாலை புகைந்து கொண்டிருந்தது.

இன்னதென்று அவளேயறியாத ஒரு மனோ வேகம் அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தது. தனதுள்ளத்திலிருந்து பொங்கி வழியும் பூரண அன்பை எவ்விடம் செலுத்துவது என்று தெரியாமலும், உள்ளக் கிடக்கையில் துடிக்கும் துடிப்பை பிடித்து நிறுத்தும் ஒரு பிடிப்பைக் காணமலும் குழம்பிக் கிடந்தாள்.

ஆனால் அவளுக்கு குழந்தை பருவத்திலிருந்தே கிருஷ்ண பக்தி வளர்ந்து வந்தது. சாஷாத் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் நீலமேக வர்ணத்தின் நிழல்தான் அவள் உள்ளத்தில் ஸ்திரமாய் பதிந்து விட்டிருந்தது.

இரவில் வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு களங்கமற்ற நீல வானைப் பார்த்து அங்கே விளங்கும் நீல மேக வர்ணத்தில், தன் ஹிருதயத் தெய்வமாகிற கிருஷ்ணனின் சாயல் விளங்குவதைக்கண்டு களிவெறி கொள்வாள்.

இரவில் அவள் கண்களைத் தூக்கம் தழுவாது. அப்படியே சற்று கண்ணயர்ந்தாலும் கனவிலும் அந்த நீல நிறத்து பாலகனின் குறும்புக் குறு நய்னங்களும், முத்து வெள்ளைச் சிரிப்பையும் கண்டு திடுக்கிட்டு எழுந்து விடுவாள்.

சுருங்கக் கூறுமிடத்து அவளே ராதையாகவும் தன் உள்ளமே கிருஷ்ண மயமாகவும் நினைத்து சந்தோஷத்தையும் துக்கத்தையும் கலந்து அனுபவித்து வந்தாள்.

அவள் உள்ளப் போக்கை சரியாக அறிந்து கொள்ளாத அவள் பெற்றோர் பெண்ணுக்கு புத்தி சபலித்து விட்டது என்று என்ன வெல்லாமோ மந்திர தந்திர சிகித்ஸை செய்தனர்.

இந்த சமயத்தில் தான் அந்த அனாதைப் பையன் கேதாரி வந்து சேர்ந்தான்.

ஐப்பசி மாதத்து அடை மழை. அதிலும் தூரத்தில் எங்கோ கடற் கரையில் புயல் அடித்ததோ என்னமோ, யார் கண்டார்கள்? உலகமெங்கும் சூறைக் காற்று வாரி அடித்தது. எங்கும் ஜலமயம். சிற்றாறு முதல் நதிகள்வரை உடைப்பு எடுத்துக் கொண்டன.

காக்கை குருவிகள் கூட உட்கார, ஒண்ட இட மின்றி தவித்துத் துடித்தன. தெருவில் அங்கொன்றும், இங்கொன்றுமாய் ஜனங்கள் நடமாடிக் கொண்டிருந்தனர்.

பொது மக்கள் வீட்டுக் கதவை அடைத்துக் கொண்டு கோழிக் குஞ்சைப் போல் பதுங்கிக் கிடந்தனர்.

தொழிலுக்குச் செல்லும் நபர்கள் மட்டும் ஆபீஸ் முதலாளிகளை சகஸ்ரநாம அர்ச்சனை செய்துகொண்டு மழைக் கோட்டுகளையும், குடைகளையும் தாங்கி வெளியே புறப்பட்டுச் சென்றனர்.

ராதையின் வீட்டுக் கதவும் அடைப்பட்டுத் தான் கிடந்தது. ஆனால் திடீரென அவர்கள் வீட்டு நாய் ஓங்கிக் குலைக்க ஆரம்பித்தது. ஒரு நாழியாய் நாய் குரைக்கும் தலை வேதனையைக் கண்டு சகிக்காமல் ராதையைப் போய், நாயை அதட்டி வரும்படி அனுப்பினார் சந்திரமௌலி.

ராதை துள்ளி ஓடும் மானைப் போல் வாசலுக்கு விரைந்து ஓடினவள் அங்கு கண்ட காக்ஷியில் மலைத்து நின்று விட்டாள்-

பச்சைப் பாலகன் ஒருவன். சுமார் 15 வயதிருக்கும். தலையிலும் உடலிலும் நீர் சொட்ட சுவரோரத்தில் ஒடுங்கி நின்றான். மூக்கும் விழியும் செதுக்கி வைத்த ஸ்வர்ண விக்ரஹத்தைப் போலிருந்தன. உடலிலும், அவன் நிலைமையிலும் வறுமை தாண்டவமாடிய போதிலும் கூட இளம் முகத்தில் உள்ளத்தின் பேரெழில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. கம்பீரம், சாந்தம், பெருந்தன்மை, மேன்மை முதலிய பண்பட்ட குண விசேஷங்கள் அவன் கண்களிலே கொப்பளித்து நின்றன.

இடுப்பில் ஒரு நாலு முழவேஷ்டி. மேலே சிறு துண்டு. மயிரிலிருந்து கொட்டிய தண்ணீரை உதறிவிட்டு உடல் நடுங்க நின்றிருந்தான்.

அவனைப் பார்த்த முதல் திருஷ்டியிலேயே ராதையின் உள்ளத்தை கவ்விப் பிடித்துக் கொண்டுவிட்டது அவனது அன்புருவமான இரு நயனங்கள்.

அவன் உள்ளத்தில் கருணை மிகுந்த காதல், ஊற்று நீர்போல் சுரந்தது.

"அப்பா! அப்பா! இங்கே வந்து பாரேன்" என்று கூவினாள் அவள். சந்திரமௌலி வந்து பார்த்தார்.

"யாரப்பா நீ! எங்கிருந்து வருகிறாய்?" என்றார். அவனால் வாயைத்திறந்து பேச இயலவில்லை. பற்கள் கிட்டி போட்டு போட்டு நெறுக்குகிற மாதிரி யிருந்தன.

இந்தக் கஷ்ட நிலையைக் காணச் சகியாத சந்திரமௌலி அவனை உள்ளே அழைத்துச் சென்று இரண்டு உலர்ந்த ஆடைகளைக் கொடுத்து உடுத்துக்கொள்ளச் சொன்னார்.

அதன் பிறகு அவனுக்கு சூடான ஆகாரத்தைக் கொடுத்த பிறகு சிறிது நேரத்திற்கப் பால்தான் அவனால் பேச முடிந்தது. ஆனாலும் அவன் நெஞ்சு தழதழத்தது. வார்த்தைகள் நெஞ்சினிடையே விக்கிக் கொண்டுவிட்டன.

கண்களின் மடை திறந்துகொண்டுவிட்டது. பாவம்! விசித்து விசித்து அழுதான்.

"அழாதேயப்பா! உன் விஷயங்களை மெது வாய்ச் சொல்லு" என்றார்.

சிறிது நேரம் சென்று தன்னை சமாளித்துக் கொண்டு அவன் சொல்ல ஆரம்பித்தான்.

"ஸ்வாமி ரங்கூனிலிருந்து வருகிறேன்."

"ரங்கூனிலிருந்தா வருகிறாய்! அடடா! என்ன கஷ்டம்!"

"ஆம் ஸ்வாமீ! கஷ்டமென்று ஒரு முறை சொன்னால் போதுமா? இப்போது எடுத்துச் சொல்லவும் என் உடலில் திறமையில்லை. அந்த பாழாய்ப்போன குண்டுவீச்சு அமர்க்களம் நடந்தபோது நானும் என் தாய் தகப்பனும் கால்நடையாய் புறப்பட்டு வந்தோம். பாதி வழியிலேயே தாய் பசிப் பேய்க்கு இரையானாள். கல்கத்தாவை நெருங்கும்போது வயிற்றுக் கடுப்பால் தந்தையும் காலமாகிவிட்டார். திருச்சிக்குப் பக்கத்திலுள்ள ஏதோ ஒரு சிறு கிராமம் எங்கள் பூர்விகமாம். என் தகப்பனார் வயிற்றுப் பிழைப்புக்காக ரங்கோன் போய்ச் சேர்ந்தவர் கூடியவரை நல்ல ஸ்திதியில், நன்றாகவேதான் வாழ்ந்தோம். குண்டுக்கு தப்பி, எப்படியாவது இந்தியாவுக்கு வந்து சேரவேணும் என்ற ஆசையால் எங்களால் தூக்கக்கூடிய நகை நட்டுக்களையும் சில உயர்ந்த பொருள்களையும் சுருட்டிக் கொண்டு கிளம்பினோம்.

என்னை அனாதையாக விட்டுவிட்டு அவர்கள் யமதர்மனுக்கு பலியாகிவிட்டனர். நானும் எவ்வளவோ கஷ்டங்களை அடைந்து முடிவில்



இத்தனே தூரம் வந்துவிட்டேன். இந்த சண்ட மாருதமான மழையின் கொடுமையால் இன்று இங்கே ஒண்டுவதற்கு நேரிட்டது. தாங்கள் தான் ஈஸ்வர ஸ்வரூபமாய் இன்று இந்த குளி ருக்கு உடையும் உணவும் கொடுத்து உதவினீர் கள்'' என்று காலில் விழுந்து வணங்கினுன் அவன்.

அவனுடைய உருக்கமான சரித்திரம் அவர் கள் மனதை இளக்கிவிட்டது. அவர் அதற்கு மேல் ஒன்றும் அவனே விசாரிக்க விரும்பவில்லை.

"அப்பா பயப்படாதே. கவலைப்படாதே. என் வீட்டிலேயே நீ இருந்துவிடலாம். எங்கும் போக வேண்டாம்'' என்று அபயம் கொடுத்தார். சந்திரமௌலி. தன் நன்றியை எந்த முறை யில் எப்படி தெரிவிப்பது என்று தெரியாமல் திணறினுன் அப் பாலகன்.

அன்றுமுதல் அவர்கள் வீட்டில் ஒரு பிள்ளே போல் வளர்க்கப்பட்டான் அவன். அவனுடன் பழகப்பழக அனைவருக்கும் அவன் மாசற்ற உயர்ந்த குணத்தின் மேம்பாடும் சமர்த்தும் கண்டு ரொம்பவும் பிடித்துப் போயிற்று. அவன் ஒரு அபூர்வப் பிறவி. சங்கீதத்தில் இயற்கை யான நல்ல ஞானம் உண்டு. இனிமையாய் குழல் வாசிப்பான். ரங்கூனிலேயே S. S. L. C. படித்து பாஸ் செய்திருந்தான்.

சந்திரமௌலியும் அவன்மீது ரொம்பவும் பக்ஷம் வைத்துவிட்டார். தன் வீட்டு விவகாரங்கள், நிலபுலன்களே மேற்பார்த்து வருதல், அவைகளுக்கு பணம் வசூல் செய்து வருதல், கணக்கு வழக்குகள் பார்த்து வருதல் முதலிய சகல விஷயங்கட்கும் அவனே தன்னுடைய வலது கையாகவே மதித்து வந்தார்.

ஆனுல் இந்த சுகம் எப்படி நீடிக்கும்? சுகமும் துக்கமும் சகடக்கால் போன்றவை அன்றே! அதுதான் உலக இயற்கையாயிற்றே! விதி அவனே வேறு வழியில் இழுத்துக்கொண்டு போய்விட்டது.

சந்திரமௌலியின் தர்மபத்தினியும் நல்ல வள்தான். ஆனுலும் சுயமரியாதை, கௌர வம், ஏற்றத்தாழ்வு இவைகளே ரொம்பவும் பின் பற்றும் போக்குடையவள்.

தங்களுடைய லக்ஷாதிபத்ய நிலைமைக்கும் கேதாரியின் பிக்ஷாதிபத்ய நிலைமைக்கும் அடிக் கடி தராசில் எடை போட்டுக் காண்பிக்கத் தவறமாட்டாள்.

சில சமயம் அம்மாளுடைய வாயிலிருந்து சொல்லம்புகள் சரமாரியாக புறப்படும். இவை களே மிகவும் பொறுமையுடன்தான் சகித்து வந்தான் கேதாரி.

ஆனுல் இதை விடக் கொடுமைகளே சகித்துக் கொள்ள அங்கே ஒரு ஊன்றுகோல் நின்று கொண்டிருந்ததால் அவன் அதை லக்ஷியம் செய்யவில்லை.

கேதாரியிடம் அளவிலாத அன்பு பூண்டிருந் தாள் ராதை. அவன் பேச்சிலே அவள் ஒரு தனி இன்பம் கண்டாள். அவன் மதுரக குழலோசை யில் ஒரு நிகரற்ற ஆனந்தம் கொண்டாள். அவள் ஹிருதயம் முழுவதும் அவன் அன்புப் புகையே சூழ்ந்து கொண்டிருந்தது.

அவள் ஹிருதயத்தில் நெடு நாட்களாய் தோன்றியிருந்த கிருஷ்ணப் பிரேமையின் பிரவாகமானது கேதாரியின் அன்புப் பிரவாகத் தில் இரண்டறக் கலந்து போய்விட்டது. கண்ணனின் மதுரக்குழல் கேதாரியின் அத ரத்தில் தவழ்ந்து அதன் மூலமாக அவனேயே கண்ணனுக பாவிக்கும் ஒரு பாவனே அவள் ஹிருதயத்தில் வேரூன்றிவிட்டது. ஆனுல் அவள் உள்ளத்தில் மனுஷ்யத்தனமான இச்சை எழவில்லை. ஒரு மெய்மறந்த இன்பம், மனுஷ்ய, ரூபத்தில் வந்திருக்கும் கேதாரியின் தன்மை யில் ஒரு அலாதியான பிரேமையைக் கொண்டு விட்டாள்.

உணர்ச்சியின்பம், உடலின்பம் எதையுமே அவள் அடையவில்லை. ஆனுல் இதைப் பிற ருக்கு உணர்த்த அவளுக்குத் திறமை போதாத தால் பலர் பல விதமாய் அவளேப்பற்றி அவ தூறுக பேசலானுர்கள்.

தாயும் மிகவும் கண்டிப்புடன் நடக்க ஆரம் பித்தாள். ராதையின் இளம் பருவத்தின் முன் னிலையில் இப் பேச்சுகள் அவதூறுகள் பாராட் டப் படவில்லை.

ஆனுல் அதி மேதாவியான கேதாரி இதை அறிந்து கொள்ளாமலிருப்பானு! அவன் உள்ளம் துணுக்குற்றது.

ஆனுல் இரண்டு பிணைப்புகள் இங்கு முன்னும் பின்னுமாய் இழுத்தன. ஆம்! ராதையின் கரையற்ற அன்பும், சந்திரமௌலியின் ஆதரவும் அவனே பிடித்து ஆட்டியது. ஆனுல் தண்டச் சோற்று தடிராமனுயும், தன்னே அபயம் கொடுத்து காப்பாற்றிய குடும்பத்திற்கு பேச்சிற் கிடமாயும், அங்கிருந்து வாழ அவன் உள்ளம் இடங் கொடுக்காது அவன் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளியது.

அவன் மனத்தே நெடுநேரம் போராட்டம் நடந்தது. அதன்பின் சட்டென்று ஒருவித முடிவுக்கு வந்துவிட்டான்.

அன்றிரவு அவனுக்கு உறக்கம் வரவில்லை. தான் வளர்ந்த வீடு வாசல், தன் அனுதைத் தன்மையை போக்கிக் காப்பாற்றிய ஆதரவாளர்,

தன்னைப் பாசக் கயிற்றால் கட்டிய ராதை, இவைகளைத் துறந்து செல்லும் அந்த ஆத்மாவுக்கு எப்படித் தூக்கம் கண்களைத் தழுவும்?

தான் வெளியேறப்போவதாகச் சொன்னால், தன்னைப் போக விடமாட்டார்களாதலால், யாரிடமும் சொல்லாமல் போய்விடுவதே உத்தமம் என்று நினைத்தான்.

ஆனால் ராதையிடம்கூட தெரிவிக்காமல் போய்விட அவன் அந்தராத்மா ஒப்பவில்லை.

## 3

அன்றிரவு நடுநிசி. சுமார் 12 மணி யிருக்கலாம். ராதை கேதாரியின் குழலைக் கேட்டபடியே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்.

இந்த அர்த்த ராத்திரியில் அந்த இளம் பெண்ணை எப்படி எழுப்புவது என்று கேதாரியின் உள்ளம் படபட வென்று பக்ஷிகளின் சிறகைப் போல் அடித்துக்கொண்டது. மெதுவாய் ராதையைத் தொட்டு எழுப்பினான்.

ராதை அச்சமயம் கண்ணனுடன் பிருந்தாவனத்தில் நர்த்தனமாடிக் கொண்டிருப்பதாக கனவு கொண்டிருந்தாள்.

அந்த கனவின்பத்தில் ஆழ்ந்திருக்கையில் கேதாரியின் ஸ்பரிசம் அவளைத் தூக்கிவாரிப் போட்டு எழுப்பச் செய்தது.

கேதாரி எதிரே நிற்பதைப் பார்த்ததும் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

கேதாரி அவள் வாயைப்பொத்தி, கை சாடையால் வெளியே வரும்படி அழைத்தான்.

அவர்கள் வீட்டுக்குப் பின்புறம் ஒரு சிறு வாய்க்கால் ஓடிக்கொண்டிருந்தது. அங்கு சென்று அதன் படிக்கட்டில் இருவரும் உட்கார்ந்தனர்.

கேதாரிக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அவன் உள்ளம் பிரிவின் உணர்ச்சிக் குழம்பால் குழம்பிக் கிடந்தது.

ஆனால் ராதையின் உள்ளத் துடிப்பு அவன் மௌனத்தைக் கலைத்துவிட்டது.

“கேதாரி! என்னை எதற்கு அழைத்து வந்தாய்?”

“விடை பெறத்தான்”

“விடை பெறவா? எதற்கு?”

இந்த வார்த்தைக்கு பதில் கூற அவன் நாவெழவில்லை.

“சொல்லேன் கேதாரி” என்று அவன் தோளைப் பிடித்து உலுக்கினாள் ராதை.

“ராதிகா! ஊர் பூராவும் நம்மைப் பற்றி என்ன சொல்கிறது தெரியுமோ இல்லையோ?”

“ஆமாம்! சொல்லட்டுமே!”

“அது சரி! அம்மா நேற்றிரவு அப்பாவுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தாளே, அதுவும் தெரியுமோ இல்லையோ?

“ஆமாம்! அதுவும் தெரியும்! அதனால் என்ன பிரமாதம்! அப்பா ஒன்றுமே உன்னைச் சொல்லமாட்டாரே.”

“ஆம்! அவர் சொல்லவில்லைதான். ஆனால் உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்த மாதிரி, அனாதையாய் வந்த என்னை ஆதரித்த அவர் குடும்பத்திற்கு களங்கமான பெயரை உண்டாக்கிக்கொண்டு இங்கே உட்கார்ந்திருக்க நான் விரும்பவில்லை. உன்னுடைய எதிர்காலத்தையும், என்னை ஆதரித்தவரின் கௌரவத்தையும் முக்கியமாய் என் கடமையாகக்கொண்டு உங்களையெல்லாம் துறந்து போய்விட நிச்சயித்து விட்டேன்.

“துறந்தா போகிறாய்! ஐயோ என் கேதாரீ! உன் வாயினால் அப்படிச் சொல்லாதே.”

“இல்லை ராதா! துறந்து போய்விடுவது என்பது வாய் மட்டிலும்தான். என் உள்ளத்தில் உன்னைத் துறப்பது என்பது என் இறப்புக்குப் பின்தான்”

“நீ போகக்கூடாது கேதாரீ! என்மீதாணை. நீ தான் என் கண்ணன். உன்னைவிட்டு நான் எப்படி உயிர் வாழ்வேன்?”

“ஓ! அப்படிச் சொல்லாதே. நமது அன்பு தெய்வீகமானதுதான். ஆனால் நாம் மனித ரூபத்தில் இருக்கிறபொழுது நமது அன்பை பிறர் உயர்வாக கருத மாட்டார்கள். அதிலும் நான் ஒரு ஏழை! மேலும் அனாதை. நான் உன்மீது செலுத்தும் அன்பை ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அது இயற்கையின் கட்டளை. காலத்தை, இயற்கையை எதிர்த்துப் போராட நமக்கு வல்லமையில்லை.”

“முடியாது! முடியாது!! எதிர்த்துப் போராடியே தீருவோம். நீ போகக்கூடாது.”

“பொறு ராதிகா! ஒரு நல்ல காலம் வரும். நாம் திரும்பவும்...” அதற்குமேல் பேச முடியவில்லை.

## 4

கேதாரியின் அழகிய உருவம் ராதையின் கண்களை விட்டு மறைந்து போயிற்று. அதன் பின் சற்று நேரம் அவனுடைய மதுரக் குழலோசை மட்டும் கேட்டுக்கொண்டே யிருந்து வர வர அந்த சப்தமும் நின்றுவிட்டது.

அன்று தன்னந்தனியே அனாதையாகவே வந்தான். இன்றும் தன்னந்தனியே அனாதையாகவே ஜன்ம பூமிக்கு செல்கிறான். ஆனால் அன்று அவன் உள்ளம் ஏக்கத்தால் நிரம்பிக்

கிடந்தது. இன்று அவன் உள்ளம் ராதையின் அன்புச் சுமையை சுமந்துகொண்டு கூடவே செல்கின்றது.

கேதாரி மறைந்தபின் ராதையின் நிலை கட்டிலடங்காமற் போயிற்று. அவள் சாந்தமடையத் தான் விரும்பினுள். அவள் ஹிருதயம் மெல்லிய வீணைத் தந்தி போன்றிருந்ததால், அந்த ஹிருதய வீணையின் தந்தி கேதாரியின் பிரிவால் பட்டென்று அறுந்துபோய் அவல ஓசையை உண்டாக்கிவிட்டது.

பக்தி பூர்வமான கரையற்ற பிரேமையை கேதாரியிடம் வைத்துவிட்டதால் இன்று அவன் பிரிவு அவளது சித்த உறுதியை குலைத்து விட்டது.

புயல் கண்ட சமுத்திரத்தில் சிறிய படகு தத்தளிப்பதைப்போல் அவள் ஹிருதயம் அலை மோதி புத்தியாகிற படகை ஒரேயடியாய் கவிழ்த்து விட்டது.

"என் கேதாரீ! நீயே என் பரமாத்மா! கண்ணு! உன்னை விட்டு நான் மட்டும் தனித்து இங்கே எப்படி வாழ முடியும்! இதோ நானும் வந்து விடுகிறேன். எங்கே வழி காட்டு! உன் குழலை எழுப்பு! அதனைப் பின்பற்றி நீ சென்ற சுவட்டின் வழியே வந்து விடுகிறேன். ஐயோ! என் கேதாரீ! ஏன் பேச மாட்டேன் என்கிருய்? என்னல் இனி சகிக்க முடியாது" என்று கதறியபடியே இருளில் தறி கெட்டு ஆற்றின் பக்கமாக ஓடினுள். அவன் குழல் சென்ற காற்றின் வழியே அவள் ஜீவியம் வரை ஓடிக்கொண்டே யிருந்தாள்.

5

"ராதை! ராதை! எழுந்திரு! நிலாவிலே தூங்கிவிட்டாயா?" என்று ராதையின் தாய் அவளைத் தட்டி எழுப்பினுள்.

"ஐயோ! கேதாரி போய்விட்டானு அம்மா?" என்று ஸ்வப்பன உலகத்திலிருந்து விடுதலை பெற்று எழுந்து பரக்க பரக்க விழித்தாள் ராதை.

"ராதை, கனவு கண்டாயா! கேதாரியா! என்ன உளறுகிருய்!"

"ஐயோ! அம்மா! நான் கண்டதெல்லாம் வெறும் கனவுதானு! என் வாழ்க்கையே ஒரு தேய்ந்த கனவுதான்!"

"ஆமாமடி பெண்ணே! என்னறைக்கோ கனவுபோல் நடந்த சம்பவங்களை இன்று ஏன் நினைவு கொள்கிருய்! உன் வாழ்க்கை ஆரம்பத்திலேயே நீ விதவைப் பட்டத்திற்கு இலக்காகி விட்டாயேடியம்மா" என்று பெருமூச்சு விட்டாள் ராதையின் அன்னை.

"அவன் மீண்டும் வருவானு!" என்று ராதையின் உள்ளம் கேள்வி கேட்டுக்கொண்டே யிருந்தது. மீண்டும் வருவானு! நீங்கள் சொல்லுங்கள்! கனவு பலித்தால்?

218923
சென்னை-600 008

# என்று காண்போம்!

M. K. கௌசல்யா

1

பூதலத்தோர் புண்ணியத்தை
பூமான் தன்னை
ஏதமிலா எங்கள் குல ஏந்தல் தன்னை
மாதரார் மனத்தமர்ந்த மாணிக்கத்தை
ஏதேது நாமினியு மெய்துமாறே

2

மண்ணுளே தோன்றிவந்த மரகதத்தை
கண்ணினுளே நிறைந்திருக்கும்
காந்தி தன்னை
பெண்ணின மேல் தயைமிகுந்த
பெருமான் தன்னை
யெண்ணி யெண்ணி ஏங்கியு
மீடேறுமாறே.

3

அண்டமெலாம் போற்றி நிற்கு
மண்ணல் தன்னை
கண்டவர்கள் மனங்கவரும்
காந்தி தன்னை
சண்டிகளைச் சாந்தத்தால்
ஜயித்தான் தன்னை
மண்டி மலர் தூவாது மறக்குமாறே

4

கொடுமையிழைத் தோர்க்கு நலங்
கோரினுனை
அடிமை யெனும் தளை தகர்த்த
அம்மான் தன்னை
நடுவு நில மீறி நின்ற நாயகத்தை
படியதனில் இனி நாமும் பார்க்குமாறே

5

நிகரிலதாம் ரத்தினத்தை
நேர்மையானை
பகர ஒணுப் பெண்களின்
ஓர் பாக்கியத்தை
அகரமென முதலாகி அமைந்தான்
தன்
நகமேனும் நாமினி நேர் காணுமாறே.

## மதிப்பிட ஓர் அளவு!

ஒவ்வொரு சமூகம், சங்கப், வகுப்பு அல்லது பொருளின் மதிப்பறிய ஓர் அளவுண்டு. கட்டிடங்களைப் பற்றிச் சொல்லுகையில் "தாஜ்மஹால்" போல அழகானது என்கிறோம். ஐசுவரியத்துக்கு ஸ்ரீ 'போர்டைப்'போல் பணக்காரர் என்கிறோம். மோட்டார் கார்களில் "ரோல்ஸ் ராய்ஸ்" என்கிறோம். முதலீடுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் சர்க்கார் பாண்டுகள் போன்று நாணயமுள்ளவை என்கிறோம். வைரங்களைப் பற்றி பேசுகையிலோ பாபாலால் வைரம் போன்றவை என்று சொல்லுகிறோம்.

★

# பாபாலால் & கம்பெனி

பிரசித்தி பெற்ற நகை வியாபாரிகள்

## சென்னை.

உயர்தர வைரங்களை நேரடியாக தருவிப்பவர்கள்


JL 3224, N4785 N67.1





Printed by V. Ramaswami, at The KESARI PRINTING WORKS, 37, T
Madras 17 and published by V. Viswanathan at 19, Raja Hanumanthala
Editor GUHAPRIYAI (Swarnambal).